



# இந்து சம்பிரதாயங்கள்

**எழுத்தாளர்:** மூன்று மதத்திற்கும் ஒருவரே குரு,
ஆன்மீக சாம்ராஜ்ஜிய சக்கரவர்த்தி, நூறு கிரந்தங்கள் எழுதியவர்,
இந்து ஞான தர்ம பிரதாதா, குறிப்பிடத்தக்க எழுத்தாளர்,
த்ரைத்த சித்தாந்த ஆதிகர்த்தா

**ஸ்ரீஸ்ரீஸ்ரீ ஆச்சார்ய பிரபோதானந்த யோகீஸ்வரர்**




**தமிழாக்கம்**
எஸ். பிரகாஷ்

**பதிப்பாளர்**
**இந்து ஞான மேடை**
(Estd. in 1978 – Regd. No.: 168/2004)

த்ரைத்த வருடம் - 47 முதல் அச்சிடுதல்: ஆகஸ்ட் - 2021
பிரதிகள்: 1000 விலை: /-

**எஸ். பிரகாஷ்,**
குப்பம், ஆந்திர பிரதேஷ்.
(கைபேசி: +91-9441915291)

**ப. ர. சந்திரமோகன்,**
சென்னை, தமிழ் நாடு.
(கைபேசி: +91-9840381879)

**கே.செந்தில்குமரன்**
சென்னை, தமிழ் நாடு.
(கைபேசி: +91-9841355578)

## பொருளடக்கம்


| வரிசை எண் பொருள் | பக்கங்கள் |
|---|---|
| 1. இந்து சம்பிரதாயம் | 04 |
| 2. குழந்தை முறத்தில் வைப்பது | 10 |
| 3. தொட்டிலில் போடுவது | 13 |
| 4. உபநயனம் | 16 |
| 5. உபதேசம் | 20 |
| 6. திருமணம் - மணமகன், மணமகள் | 24 |
| 7. துணை மாப்பிளை (துணை மணமகன்) | 28 |
| 8. வாள் | 32 |
| 9. பாஷிங்கம் (பட்டம் கட்டுதல்) | 33 |
| 10. கன்னத்தில் பொட்டு (துளி பொட்டு) | 35 |
| 11. மடி அரிசி - முடிச்சு அரிசி | 38 |
| 12. கால் மெட்டி | 40 |
| 13. தாலி பொட்டு | 44 |
| 14. அக்ஷந்தலு (அட்சதை) | 46 |
| 15. தலம் பரங்கள் | 47 |
| 16. அருந்ததி நட்சத்திரம் | 49 |
| 17. பந்தரி (பந்தல்) | 50 |
| 18. திருமணத்திற்கு முகூர்த்தமா! | 52 |
| 19. திருமணத்தில் வேத மந்திரங்களா! | 59 |
| 20. ஸ்ரீமதி (திருமதி) - ஸ்ரீமதம் (ஸ்ரீமந்தம்) | 62 |
| 21. முண்டமோயடம் (முண்டை மூடுவது) | 65 |
| 22. நமஸ்காரம் | 71 |
| 23. லாப சம்பிரதாயம் | 79 |
| 24. கட்டுவது பொட்டு வைக்கும் முறை | 81 |
| 25. தலக் கொண்டை | 83 |
| 26. மொட்டை அடித்துக் கொள்வது | 85 |
| 27. மூன்று விபூதி ரேகைகள் | 87 |
| 28. மூக்குத்திகள் | 90 |
| 29. வேட்டி கட்டுதல் - சேலை கட்டுதல் | 93 |
| 30. சவ யாத்திரை (இறுதி ஊர்வலம்) | 94 |
| 31. இறக்கும் களம் | 100 |
| 32. பிண்டா கூட (கர்ம காரியம்) | 103 |
| 33. தெற்கு திசையில் தலை வைப்பது | 111 |
| 34. ஹிந்துரக்ஷனா! ஹிந்து பக்ஷனா!! | 116 |

சம்பிரதாயம் என்ற வார்த்தை ஒரு இந்து மதத்திலேயே கேட்கப்படுகிறது. ஒரு கோயிலுக்கு போய் பூஜைகள் செய்து இது எங்களுடைய சம்பிரதாயம் என்பவரும் சிலர் இருக்கின்றார்கள். ஒரு திருமணம் செய்து சம்பிரதாயமாக திருமணம் செய்தோம் என்பவரும் கூட இருக்கிறார்கள். அதன் போலவே ஒரு வர்க்கத்தை சேர்ந்தவர்கள் ஒரே விதமான ஆடைகளை அணிந்து இது எங்களுடைய சம்பிரதாயம் என்பவரும் கூட இருக்கின்றார்கள். இன்னும் விவரித்துக் கொண்டு பார்த்தால் இந்து மதத்தில் ஒவ்வொரு குலத்திற்கு சேர்ந்தவர்கள் ஒவ்வொரு நடைமுறையை அனுசரித்து இது எங்களுடைய குல சம்பிரதாயம் என்று சொல்கின்றார்கள். இதன் போன்ற சம்பிரதாயம் என்னும் வார்த்தை பல இடத்தில் கேட்கப்பட்டிருந்தாலும் வாஸ்துவமாக சம்பிரதாயங்கள் என்றால் என்னவென்று யாருக்கும் தெரியாமல் போனது. இந்து மதம் ஹிந்து மதமாக மாறிய போது இப்போது காலத்தில் நாங்கள் ஹிந்துக்கள் என்னும் சொல்லிக் கொண்டு தன்னுடைய மதத்தின் உண்மையான சொரூபம் தெரியாத மனிதன், சம்பிரதாயம் என்னவென்று தெரியாமல் இது தான் சம்பிரதாயம் என்று யார் என்ன சொல்லினாலும் அதனை சம்பிரதாயம் என்று நம்புகின்றான். ஒரு மனிதன் இறந்து போனால் இறந்த உடலை பூமியில் புதைத்து வைப்பது சம்பிரதாயம் என்று சிலர் சொல்கின்றார்கள். மற்ற பகுதிகளில் இறந்த உடலை விறகு வைத்து எரிப்பது சம்பிரதாயம் என்று சிலர் சொல்கின்றார்கள். சம்பிரதாயங்களை பற்றி நமக்குத் தெரியாது, தெரிந்தவர்கள் சொல்லியது போல் கேட்பது நல்லது என்று சிலர் நினைக்கின்றார்கள். அப்படி சொல்லியது போல் குருட்டுத்தனமாக கேட்டாலும் ஒரே வேலை இரண்டு விதமாக இருக்கும்போது எதனை சம்பிரதாயம் என்னும் சொல்ல வேண்டும்? என்று கேள்வி வராமல் இருக்காது. சிறிது புத்திசாலியானவர்கள் இப்படி குறைபாடு உள்ள வார்த்தைகளை பார்த்து இதெல்லாம் மூடநம்பிக்கை என்னும் சொல்லி, உண்மையான சத்தியத்தை தேடாமல் பகுத்தறிவாளர் என்ற பெயரில் சத்தியத்திற்கு தூரமாகின்றார்கள்.

இப்படிப்பட்ட நிலையில் சத்தியவாதிகள் என்னும் (ஆஸ்திகர்கள் என்னும்) எதனையாவதும் சம்பிரதாயம் என்று சொல்லலாம், பகுத்தறிவாளர் என்பவர்கள் எதையாவது

மூடநம்பிக்கை என்று சொல்வார்கள். இவர் இருவர்கள் மத்தியில் உண்மையான சம்பிரதாயம் எந்த நாளோ கண்ணுக்கு தெரியாமல் போனது. சத்தியவாதிகள் என்ற பெயரில் அசத்தியவாதிகள் இருந்தாலும் இந்த காலத்தில், பகுத்தறிவாளர் பெயரில் நாத்திகர்கள் இருந்தாலும் இந்த காலத்தில் அனுசரிக்கும் ஒவ்வொன்றும் ஆஸ்திகர்களுக்கு சம்பிரதாயம் ஆனாலும், தெரியாத ஒவ்வொரு நாத்திகர்களுக்கு மூடநம்பிக்கையானது.

இப்படிப்பட்ட நேரத்தில், இந்த பக்கம் நாத்திகர்களுக்கு அந்த பக்கம் ஆஸ்திகர்களுக்கு சம்பிரதாயம் என்றால் என்ன சூத்திரம் முறையாக தெரிய வேண்டும். பூக்கள் தனித்தனியாக இருக்கும்போது அவற்றுக்கு மாலை என்று பெயர் வராது. நூல் (சூத்திரம்) கோர்க்கும் போது, ஒரு முறையாக, ஒரு வரிசையாக ஏற்பட்டதினால் மாலை என்று சொல்கின்றோம். அதன் போலவே யாருக்கு இஷ்டம் வந்தபடி அவர் செய்கின்ற வேலைக்கு சம்பிரதாயம் என்ற பெயர் பொருந்தாது. சாஸ்திரம் என்னும் சூத்திரத்தால் சம்பந்தப்பட்ட போது ஒரு அர்த்தத்தில் எங்கேயாவது ஒரே முறையாக இருப்பதினால் அந்த வேலையை சம்பிரதாயம் என்று சொல்கின்றோம். பூக்கள் நூலால் கோர்க்காமல் போனால் எப்படி மாலை ஆகாதோ, அதன் போலவே காரியம் சாஸ்திரத்தினால் கோர்க்காமல் போனால் சம்பிரதாயம் அல்ல. ஒரு அங்குலம் (இன்ச்) தடிமான கயிற்றை பாதிப் பாதியாக குறைத்து கொண்டு போனால் சிறிய அளவு நூலாகும். அங்குலத்தில் ஆறாவது தடிமான ஊசியால் தடிமான நூலாலை கொண்டு பூக்களை மாலையாக கோர்க்கலாம். அதன் போலவே சாஸ்திரங்களில் ஆறாவதான, ஐந்தாவது ஸ்தானத்தை தாண்டி ஆறாவது ஸ்தானத்தில் உள்ள பிரம்ம வித்யா சாஸ்திரத்தினால் ஒரு காரியத்தை இயக்கும் போது மட்டுமே அந்த வேலை சம்பிரதாயம் ஆகும். சூத்திரம் முறை இல்லாமல் போனால் பூக்கள் மாலை எப்படி ஆகாதோ, அதன் போலவே பிரம்ம வித்யா சாஸ்திரம் முறை இல்லாத காரியங்கள் சம்பிரதாயங்கள் அல்ல. மாலையில் நூல் மறைந்திருப்பது போல் காரியத்தில் எண்ணம் இணைந்து இருக்க வேண்டும். அறுக்காத நூல் இல்லாமல் மாலை இருக்காது, கெடாத எண்ணம் இல்லாமல் சம்பிரதாயம் இருக்காது. இப்போது சிலர் ஒரு கேள்வி கேட்கலாம். சிலர் திருமண காரியத்தில் தளம்பரம் போடுவதில், அட்சதை

போடுவதில் முதலியன வேலைகளை சம்பிரதாயங்கள் என்ற பெயர் வைத்து செய்கின்றார்கள் அல்லவா! அப்படிப்பட்ட போது சம்பிரதாயங்கள் யாருக்கும் தெரியாமல் போனது என்று நீங்கள் எப்படி சொல்கின்றீர்கள் என்று கேட்கலாம். அதற்கு பதில் என்னவென்றால்! காளை மாடு கழுத்தில் பூமாலை இருந்தாலும் அந்த காளைக்கு இது ஆகாரம் என்று தெரியாது, அதனுடைய மதிப்பும் தெரியாது. அதன் கழுத்தில் பூமாலை இருந்தாலும், தடிமான கயிறு இருந்தாலும் இரண்டும் ஒன்றுதான். அதன் போலவே விவரம் இல்லாத அஞ்ஞானி ஒரு வேலையில் சம்பிரதாயம் இருந்தாலும் அவனுக்கு இது சம்பிரதாயம் என்று தெரியாது, அதனுடைய மதிப்பும் தெரியாது. அவன் வேலையில் சம்பிரதாயம் இருந்தாலும் அந்த சம்பிரதாயம் இல்லாமல் இருந்தாலும் இரண்டும் ஒன்றுதான். திருமணம் காரியங்களில் திருமணம் செய்கின்றவர்களுக்கும், செய்து கொண்டவர்களுக்கும், பார்ப்பவர்களுக்கும் அர்த்தம் தெரியாத போது அது சம்பிரதாயமாக இருந்தாலும் தெரியாத ரகசியம் தான், மேலும் அது சாதாரணமான வேலைகளில் ஒரு வேலை ஆகின்றது, மற்றும் சம்பிராதாயமாக யாருக்கும் ஆகவில்லை. இதன் மத்தியில் ஒரு பெரிய திருமணம் நடந்தது. டி.வி சேனல் கொண்டவர்களும் கூட அந்த நிகழ்ச்சியை டி.வியில் காட்டினார்கள். அங்குள்ள புரோகிதர்கள் அந்த திருமணத்தில் ஒவ்வொரு காரியங்கள் சம்பிரதாயமாக செய்தோம் என்று சொல்வது கேட்டோம். வாய் வார்த்தையால் அந்த விதமாக சொல்கின்றார்கள் மேலும் அங்கு உள்ள புரோகிதர்களுக்கும், மணமகளுக்கு, மணமகனுக்கு திருமணத்திற்கு வந்த விருந்தாளிகளுக்கும் சம்பிரதாயம் என்ற வார்த்தைக்கு அர்த்தமே தெரியாது என்று சொல்லலாம். அங்கு செய்கின்ற ஒரு வேலை கூட அர்த்தம் தெரியாமல் போனது. அர்த்தம் தெரியாத வேலை வீணானது. மேலும் அது சம்பிரதாயம் சிறிதளவு கூட அல்லவென்று தெரிந்து போனது. சம்பிரதாயம் தெரியாமல் போனதினால் சிலர் ரிஜிஸ்டர் ஆபீசுக்கு போய் கணவன் மனைவியை, மனைவி கணவனை ரிஜிஸ்டர் திருமணம் செய்து கொள்கின்றார்கள். இந்த விதமாக சிறிது காலம் கடந்து போனால் எதிர்காலத்தில் சம்பிரதாயங்கள் என்ற வார்த்தையே தெரியாமல் போகும். அப்படிப்பட்ட அபாயம் வராமல் சம்பிரதாயங்கள் என்றால் சூத்திரம் பிரகாரம், சாஸ்திரம் பிரகாரம் ஒவ்வொரு மனிதனுக்கும் தெரிய வேண்டியது இருக்கும். இனி சம்பிரதாயங்கள் என்றால்

என்ன சொல்ல வேண்டிய வரையே கேட்டு தெரிந்து கொள்ளலாம்.

ஒவ்வொரு நாளும் மனிதன் தன்னுடைய வாழ்க்கையில் ஏதோ ஒரு வேலை செய்து கொண்டே இருக்கிறான். ஒவ்வொரு வேலை பின் ஏதோ ஒரு ஆதாயம் இருக்கிறது. ஆதாயம் எந்த வடிவத்தில் இருந்தாலும் அது தெரியும்படி இருக்கும். தனம், தானியம், தங்கம் எந்த வடிவத்தில் இருந்தாலும் அது தெரியும்படி பலனாகவே கணக்கிடப்படும். காரியத்திற்கு பதிலுக்கு தெரிகின்றதை ஆதாயம் என்று சொல்கின்றோம். முக்கியமாக கவனிக்க வேண்டியது என்னவென்றால் ஒவ்வொரு காரியத்திலும் தெரிகின்ற ஆதாயம் இருக்கும் படி தெரியாத ஆதாயம் கூட ஒன்று இருக்கின்றது. அதனை கர்ம பலன் என்கின்றார்கள். தெரிகின்ற பலன் தன, தான்ய, தங்கம், பொருள் வாகன வடிவத்தில் பலவிதமாக இருக்கும் போது தெரியாத பலனான கர்மம் வெறும் இரண்டு ரகமாகவே இருக்கின்றது. அதில் ஒன்று பாவம், இரண்டாவது புண்ணியம். இதனைப் பொறுத்து வேலையில் வருகின்ற ஆதாயங்கள் இரண்டு ரகமாக தெரிகின்றது, தெரியாதது என்று தெரிகின்றது. தெரிகின்றது பலவிதமாக இருக்கும்போது, தெரியாதது இரண்டு ரகம் மட்டும்தான் என்று கூட தெரிகின்றது. மனிதன் வாழ்க்கையில் தெரிகின்ற ஆதாயத்தை விட தெரியாத ஆதாயம் மிக முக்கியமானது. தெரிகின்ற ஆதாயம் அந்த வாழ்க்கையிலே உபயோகப்படலாம், உபயோகப்படாமலும் போகலாம். தெரியாத ஆதாயம் பிறகு ஜென்மம் வரை வந்து கண்டிப்பாக சம்பாதித்தவனுக்கே உபயோகப்படுகின்றது. எத்தனை விதமாக பார்த்தாலும் தெரிகின்ற ஆதாயத்தை விட தெரியாத ஆதாயமே மிக முக்கியமானது. அதனால் வேலையில் வரும் தெரியாத கர்ம பலனுக்கு தனித்துவம் ஏற்படுத்தி, **“பிர” என்னும் சத்தத்தை இணைத்து பிர+ஆதாயம்=பிரதாயம் என்று சொல்லினார்கள். இதனைப் பொறுத்து ஆதாயம் என்றால் தெரிகின்ற தன, தங்கம், பொருள், வாகனங்கள் என்னும், “பிரதாயம்” என்றால் தெரியாத பாவ புண்ணியம் என்று தெரிந்து கொள்ள வேண்டும்.**

தற்போது வாழ்க்கையில் உபயோகப்படும் தனம் ஆதாயம் மட்டுமல்லாமல், பிறகு வாழ்க்கையில் உபயோகப்படுவது கர்மபிரதாயம் என்று தெரிகின்றது.

ஆதாயம் என்றாலும் பிரதாயம் என்றாலும் மனிதன் அனுபவிப்பது. ஒரு மனிதன் சம்பாதித்துக் கொண்ட சம்பாதனைகள் அனுபவித்துக் கொண்டிருப்பதும் அனுபவிக்காததும் கூட இருக்கிறது. இதனைப் பொறுத்து ஆதாயங்கள் மூன்று ரகமாக பிரிக்கப்படலாம். அனுபவிக்கின்ற ஆதாயங்கள் இரண்டு ரகங்கள், அனுபவிக்காத ஆதாயம் ஒரு ரகம். மொத்தம் மூன்று விதமான ஆதாயங்கள் இருக்கின்றது. மூன்றாவது ரகமான ஆதாயம் கூட தெரியாமல் இருந்தாலும், கர்மத்தினால் தலையில் சேரும்போது கர்மத்திற்கு எதிர்ப்பாக இருப்பது கர்மத்தை நாசனம் செய்வதாக இருக்கும். இந்த மூன்றாவது ஆதாயத்தை தெய்வ ஞானம் என்று சொல்கின்றோம். முதலாவது விட இரண்டாவது முக்கியமானது, இரண்டாவது விட மூன்றாவது மிக தனித்துவமானது. **தனத்தை விட விதி (கர்மம்) பெரியது. விதியை விட ஞானம் பெரியது. ஹிந்தி பாஷையிலும் சமஸ்கிருத பாஷையிலும் "ச" என்றால் பக்தி, ஞானம் என்ற விவரம் இருக்கிறது. சந்த் என்றால் பக்தர்கள், ஞானிகள் சொல்வதும் கூட இருக்கிறது. நல்லதை பெரியதை தெய்வீக அர்த்தத்தை குறித்து "ச" "பிர" என்பதை தெய்வ ஞானத்திற்கு சேர்த்து ச+பிர+ஆதாயம்=சம்பிரதாயம் என்று சொல்லினார்கள்.** ஒரு வேலையில் தெரியாத ஆதாயம் தெய்வ ஞானம் இருந்தால், அந்த வேலையில் அர்த்தமான ஆதாயம் நம் தலையில் ஏறிய போது அது சாதாரணமான ஆதாயம் அல்லாமல் கர்மத்தினால் பிரதாயம், கர்மத்தை விட மீறிய சம்பிரதாயம் ஆகின்றது. ஒரு வேலையில் தெய்வ ஞானம் சம்பந்தப்பட்டு இருக்கும்போது அதில் உள்ள விவரம் நம் தலையில் ஏறாத போது அது சம்பிரதாயமாக கணக்கிடப்படாது. ஒரு வேளை தெய்வ ஞானம் அர்த்தத்தில் சேர்ந்து இருக்கின்றது என்று தெரிந்து செய்த போது அது சம்பிரதாயமாகும்.

ஐந்தாவது சாஸ்திரமான ஜோதிட சாஸ்திரம் பிரகாரம் தெய்வ ஞானத்திற்கு அதிபதி சந்திரன். அதனால் ஞான சின்னமாக சந்திரனை தெரிவிக்கின்றோம். கர்ம சேஷம் இருக்கின்ற யோகி அந்த ஜென்மத்தில் மோக்ஷம் அடையாமல் போனால் மறு ஜென்மத்தில் சந்திர தேஜஸ்சு கொண்டு பிறப்பார் கூட பகவத்கீதா அக்ஷர பரப்பிரம்மயோகத்தில் 25ஆவது ஸ்லோகத்தில் **"சந்திரமாசம்**

**ஜோதிர்யோகி ப்ராப்பியனிவர்த்ததே”** என்று சுயமாக பகவானே கூறினார். இதனைப் பொறுத்து சந்திர கிரகம் ஞான சின்னமானது என்று தெரிந்து தெய்வ ஞானம் கொண்ட மனிதனை சந்திரனுக்கு சமமாக ஒப்பிட்டு இந்து என்று அழைத்தார்கள். தெய்வ ஞானம் கொண்ட வேலையை இந்து சம்பிரதாயம் என்று கூட அழைக்கப்பட்டார்கள். **எந்த மதத்திலும் தெய்வ ஞானம் கொண்டவன் இந்து தான், தெய்வ ஞானம் இருந்த எந்த காரியமாவதும் இந்து சம்பிரதாயமே.** சந்திர பிம்பம் ஞானத்திற்கு சின்னம் ஆகும்போது, நட்சத்திரம் மோக்ஷத்திற்கு (கடவுளுக்கு) அடையாளம் என்று எங்கள் ரசனையில் **“தேவாலய ரகசியங்கள்”** இந்த புத்தகத்தில் முதலிலேயே தெரிவித்தோம். அபிவிருத்தி அடைகின்ற சந்திர வட்டத்தை தலை மேல் வைத்துக்கொண்ட சங்கரன் என் தலையில் தெய்வ ஞானம் அபிவிருத்தி ஆகின்றது என்று தெரிவிக்கும் படி தெரிகின்றது. சந்திரனுடைய விவரம் தெரிந்தவர் ஆனதினால் சங்கரனை இந்து என்னும், தலைமேல் அர்த்தம் தெரிந்து கொண்டு சந்திர வட்டத்தை வைத்துக்கொண்ட வேலை செய்தார் என்பதினால் இந்து சம்பிரதாயம் அனுசரித்து காண்பித்தார் என்று சொல்லலாம். ஒரு சந்திர வட்டத்தை வைத்துக்கொண்ட சங்கரனை நாம் இந்து என்று சொல்லும் போது சந்திர வட்டத்தை, நட்சத்திரத்தை வைத்துக் கொண்டவரை என்ன சொல்ல வேண்டும்? இந்து என்றே சொல்ல வேண்டும். அவர் அந்த வேலையை அர்த்தம் மதிப்பு தெரிந்து செய்தால் அது இந்து சம்பிரதாயமே என்று சொல்ல வேண்டும். ஞானம் விவரம் இல்லாத வேலை சம்பிரதாயம் அல்ல. இந்த நாள் வேறு மதங்களில் கூட கால் மெட்டிகள், சந்திர வட்டம், நட்சத்திர கொடிகள் இருந்து அங்கு கூட இந்து சம்பிரதாயம் அறிகுறிகள் தெரிகின்றது. ஞாயிற்றுக்கிழமை விடுமுறை நாள் குர்தாயுகத்தில் இருந்து நடைமுறைக்கு வந்த தூய்மையான இந்து சம்பிரதாயம். இந்த நாளில் கூட இந்த நாட்டிலும், வெளிநாட்டிலும் ஞாயிற்றுக்கிழமை விடுமுறை நாட்களாகவே இருந்து உங்களுடைய புத்திக்கு என்னுடைய மதிப்பு தெரியாமல் இருந்தாலும் நான் சஜீவமாகவே இருக்கிறேன் என்று இளக்காரமாக தெரிவிக்கின்றது. எங்களுடைய மதம் வேறு என்பவரை விட்டு இந்து நாட்டில் பிறந்து இறுதிக்கு ஹிந்துக்கள் ஆகிவிட்டார்கள் நீங்களும் கூட என்னை

அடையாளிக்காமல் போனால் உங்களை நான் என்ன சொல்ல வேண்டும் என்று கேள்வி வருகின்றது.

தர்மங்களுக்கு கிலானி ஏற்படலாம் நாசனம் ஏற்படாது என்ற விஷயம் கீதாவில் பகவானே கூறினார். அதனால் நமக்கு தெரியாமல் இருந்தாலும் இந்து சம்பிரதாயங்கள் சிறிதளவு கூட மாறாமல், நாசனம் ஆகாமல் நம் மத்தியிலேயே இருக்கின்றது. இந்து சம்பிரதாயங்கள் வெளிநாடுகளிலும் கூட தெரிகின்றது. இதனைப் பொறுத்து பூர்வம் இந்து சம்பிரதாயங்கள் விஷ்வ வியாப்தியாக இருக்கிறது என்று தெரிகின்றது. இந்த நாள் அவற்றின் மதிப்பு தெரிந்தால் நாடு வெளிநாடுகளில் உள்ளவர் எல்லோரும் இந்துக்களே ஆகுவார்கள். அந்த நாள் விஷ்வ இந்துத்துவம் ஏற்படும். சம்பிரதாயம் விவரங்கள் தெரியாமல் போனால் நாடு முழுவதும் இந்துத்துவம் கூட ஏற்படாது என்று தெரிவிக்கின்றோம். அதனால் சிலர்களாவது நம் மத்தியில் சம்பிரதாயங்களை தெரிந்து கொண்டு முதல் இந்த நாட்டில் இந்துத்துவத்தை ஏற்படுத்தினால் பிறகு விஸ்வ வியாப்த்தமாக அதற்கு தானே ஆகும். அப்படி ஆகாமல் நாங்கள் ஹிந்துக்கள் என்றாலும் விஷ்வ ஹிந்துக்கள் என்றாலும் பிரயோஜனம் இருக்காது. நாம் முதலில் இந்துக்களாக மாறி வேறவர்களுக்கு நீ கூட இந்துவே என்னும் ஞாபகத்தை தெரிவித்தால் நல்லது. நாம் இந்துக்களாக மாறுவதற்கு நம் மத்தியில் பூர்வத்திலிருந்து அர்த்தம் இல்லாமல் அனுசரணையில் இருந்த வேலைகளை தெரிந்து கொள்ளலாம். அவற்றின் உள்ள அர்த்தம் விவரம் தெரிந்து கொள்ளலாம். **ஒவ்வொருவரும் தெரிகின்ற ஆதாயத்தை விட தெரியாத ஆதாயமான சம்பிரதாயத்திற்கு மதிப்பை கொடுங்கள்.** இந்துக்களாக மாறுவதற்கு சம்பிரதாயங்கள் என்னவென்று தெரிந்து கொள்ளுங்கள்.

## குழந்தையை முறத்தில் வைப்பது

மனிதன் வாழ்க்கை பிறப்பில் ஆரம்பிக்கின்றது. பிறப்பில் முதலான வாழ்க்கை மரணத்தால் இறுதியாகின்றது. பிறப்பில் ஆரம்பமான பிராரப்த கர்மம் மரணத்தால் அந்த ஜென்மத்தில் முடிந்து விடுகின்றது. பிறப்பிலும், மரணத்திலும் மத்திய வாழ்க்கையில் இந்து தர்மங்கள் மனிதர்களில்

சேர்ந்து இருக்கின்றது. முதலில் பிறக்கின்ற விஷயத்தை பார்க்கலாம். குழந்தை பிறந்த பிறகு உயிர் வந்த உடனே, தொப்புள் கொடியை கத்திரிக்காமலே, முறத்தில் குழந்தையை படுக்க வைக்கும் முறை பூர்வத்தில் இருந்து உள்ளது. இப்போதும் எங்கேயாவது ஒரு சதவீதம் முறத்தில் படுக்க வைக்கும் சம்பிரதாயம் இருக்கிறதோ என்னமோ மேலும் 99 சதவீதம் முழுமையாக இல்லாமல் போனது என்று சொல்லலாம். அந்த சம்பிரதாயம் இப்போது இருப்பது போல எங்கும் தெரியவில்லை பூர்வம் எல்லோரும் பிறந்த குழந்தையை முறத்தில் வைப்பார்கள். அப்படி படுக்க வைப்பதால் பார்ப்பவர்களுக்கு சிறுது ஞானம் அர்த்தமாகும் படி செய்தார்கள். பூர்வம் எல்லோரும் அந்த வேலைக்கு அர்த்தம் தெரிந்து தவறாமல் அப்படி படுக்க வைப்பார்கள். முறத்திலேயே தொப்புள் கொடியை அறுப்பார்கள். தொப்புள் கொடியை அறுத்த பிறகு முறத்திலிருந்து எடுத்துக் கொள்வார்கள். அந்த நாள் அவர்களுடைய சம்பிரதாயத்திற்கு அர்த்தம் என்னவென்று அந்த காலத்திற்குப் போய் பார்த்தால் இந்த விதமாக இருக்கின்றது.

பூர்வம் எல்லோரும் அவரவர்கள் வீடுகளில் முறத்தை உபயோகிப்பார்கள். முறம் என்றால் என்னவென்று கூட இந்த காலத்தில் சிலருக்கு தெரியாமல் போனது. இப்போதும் சிறிய சிறிய கிராமங்களில் தானியத்தை சுத்தம் செய்வதற்கு முறத்தை உபயோகப்படுத்துவார்கள். நாம் தின்கின்ற ஆகார தானியங்களை முதலில் முறத்தில் போட்டு தானியத்தில் இருந்த உமி குப்பைகள் போவதற்கு முறத்தால் புடைத்த பிறகு சமையலுக்கு உபயோகப்படுத்துவது இப்போதும் ஆங்காங்கே உள்ளது. நாம் தின்று அனுபவிக்கும் தானியம் இறுதியாக முறத்திலிருந்து சமையல் பாத்திரத்திற்கு போகின்றது. நாம் வாழ்வதற்கு ஆகார தானியங்கள் முறத்திலிருந்து வருகின்றது. அதன் போன்று உலகத்தில் வாழ்க்கை கடத்துவதற்கு தேவைப்படும் கர்மங்கள் கர்ம நிலையங்களில் இருந்து வருகின்றது. ஒரு வாழ்க்கை கடத்துவதற்கு கர்மத்தை கொடுக்கின்ற பிராரப்த நிலையத்தை வாழ்வதற்கு ஆகாரத்தை கொடுக்கும் முறமாக ஒப்பிட்டு நீ பிராரப்த கர்மத்தில் சேர்ந்து இருக்கிறாய் என்று அர்த்தம் வரும்படி முறத்தில் குழந்தையை படுக்க வைப்பார்கள். பிராரப்த கர்மத்தில் குணங்கள் என்னும் பாசம் (கயிறால்) கட்டப்பட்டு இருக்கிறார் என்னும் தெரியும்படி

தொப்புள் கொடி கழுத்தை சுற்றி அல்லது கழுத்து மேல் வைத்து முறத்தில் படுக்க வைப்பார்கள். அங்கு நடக்கின்ற காட்சி அங்கு இருக்கின்றவர்கள் எல்லோரும் பார்க்கும் படி செய்து தெரியாதவர்களுக்கு முறையின் அர்த்தத்தை சொல்லிய பிறகு குழந்தைக்கு தொப்புள் கொடியை அறுத்து முறத்திலிருந்து எடுத்து பக்கத்தில் படுக்க வைப்பார்கள்.

குணங்கள் என்ற பிசுபிசுப்பு ஞானம் என்னும் கத்தியால் அறுத்த போது கர்மத்திலிருந்து வெளியே வந்து முக்தி அடைவாய் என்னும் அர்த்தம் தெரியும்படி தேகத்திற்கு சுற்றிக்கொண்டு இருக்கின்ற தொப்புள் கொடியை கத்தியால் அறுத்துவிட்டு முறத்திலிருந்து குழந்தையை வெளியே வைக்கின்றார்கள். மனிதன் பிறப்பிலேயே எவ்வளவோ ஞானத்தை தெரிவிக்கும் முறையை வைத்த பெரியோர்களுக்கு வாழ்த்துக்கள் சொல்ல வேண்டியதுதான். முறத்தை கர்ம கூடலியாக, குடலை குணத்தின் கயிறாக ஒப்பிட்டு ஞான வாளினால் குணத்தை அறுத்து கர்மத்திலிருந்து வெளிப்படுவது போல தொப்புள் கொடியை கத்தியால் அறுத்து முறத்திலிருந்து வெளியே எடுப்பது பெரிய அர்த்தத்தில் கூடியிருக்கின்ற சம்பிரதாயம் தானே! மனிதன் பிறப்பிலேயே முறம் கர்மம், மற்றும் குடல் பந்தம் என்பதை தெரிவித்து குடல் என்னும் பந்தத்தை அறுக்கும் படி, முறம் என்ற கர்மத்திலிருந்து வெளியேபடும்படி கூட தெரிவித்தார்கள்.

இப்போதும் எங்கேயாவதும் கூட யாராவது கஷ்டங்கள் அனுபவித்துக் கொண்டிருந்தால் அவனைப் பார்த்து இதெல்லாம் முறத்தால் விழுந்த போது எழுதிய எழுத்து என்று சிலர் சொல்வது கேட்டிருப்போம். பைபிளில் கூட இயேசு பிரபு பெரியவர் என்னும் அவருடைய கர்மத்தை அவரே நிர்ணயித்துக் கொண்டார் என்னும் சொல்வதற்கு ஒரு வாக்கியத்தை உபயோகித்தார். அது **"அவருடைய முறம் அவருடைய கையில் இருக்கிறது"** என்று கூறினார். இந்து என்றால் ஞானம் என்று அர்த்தம் அல்லவா! இந்து சம்பிரதாயம் என்றால், மனிதர்கள் கடவுள் பக்கம் போவதற்கு மார்க்கத்தைக் குறிக்கும் அர்த்தமாக இருக்கின்றது. மேலும் மனிதன் குழந்தையாக பிறக்கும் போதே கர்மத்திலிருந்து, குணங்கள் பந்தத்தில் இருந்து அவற்றை ஜெயிக்கும் ஞானத்தை முக்தி அடைவதும் தெரிவிக்கும் முறைக்கு

அடையாளமாக **“குழந்தையை முறத்தில் வைக்கும் சம்பிரதாயம்”** கிட்டத்தட்ட இல்லாமல் போனது என்று சொல்லலாம். எவ்வளவோ பெரிதான சம்பிரதாயம் முழுமையாக இல்லாமல் போகாமல் உடனே எல்லோரும் எல்லா மதத்தில் உள்ளவர்களும் முறம் சம்பிரதாயம் அனுசரிக்க வேண்டும் என்னும், தெரியாதவர்களுக்கு முறம் சம்பிரதாயத்தை பற்றி சொல்ல வேண்டும் என்னும், அப்படி செய்த போதே இந்து சம்பிரதாயங்கள் சிறிது வரை ஆவது அனுசரித்து காப்பாற்றப்படுபவர்கள் ஆகுவோம் என்று தெரிவிக்கின்றோம். அர்த்தமில்லாத பூஜைகள், வீணாகும் செலவுகள் சேமித்து இந்து சம்பிரதாயங்கள் பக்கம் உங்கள் பார்வையை செலுத்துங்கள்.

## தொட்டிலில் போடுவது

குழந்தை ஜென்மம் எடுத்த பிறகு முதலில் முறத்தில் வைத்து, குழந்தைக்கு சுவாசை வந்த பிறகு தொப்புள் கொடியை அறுத்து முறத்தில் இருந்து வெளியே எடுப்பது சம்பிரதாயம் என்று சொல்லினோம் அல்லவா! அதன் போலவே ஒரு நல்ல நாள் பார்த்து டோலா ரோஹனம் செய்வதும் கூட சம்பிரதாயமாக இருந்தது. டோலா ரோஹனம் என்றால் தொட்டிலில் குழந்தையை வைப்பது. பிறந்த குழந்தையை தொட்டிலில் படுக்க வைப்பதும் கூட முறைதானா! என்று சிலர் கேட்கலாம். இந்த காலத்தில் குழந்தை அழுகும் போது நிறுத்துவதற்காக அல்லது சுகமாக தூங்குவதற்காக குழந்தையை தொட்டிலில் போட்டு படுக்க வைக்கின்றார்கள். முதலில் தொட்டிலில் படுக்க வைப்பது அர்த்தத்தில் கூடியிருக்கின்ற வேலையாக பூர்வம் இருந்தது. பிறகு படுக்க வைப்பதற்கு எதற்காகவும் இருக்கலாம். முறத்தில் படுக்க வைத்து, அந்த முறத்திலேயே, தொப்புள் கொடியை அறுப்பது மனிதன் வாழ்க்கையில் சம்பிரதாயத்தில் கூடிய முதல் கட்டமாக, தொட்டிலில் முதலில் படுக்க வைப்பது இரண்டாவது சம்பிரதாயம் கட்டமாக நினைப்பார்கள்.

கர்மம் வளையத்தில் உள்ளே இருக்கின்ற விஷயம் முறம் தெரிவிக்கும் போது, தொப்புள் கொடி குணங்கள்

விஷயம் தெரிவிக்கும்போது, தொப்புளின் பந்தத்தை அறுத்து விடுவது ஞானம் என்னும் கட்கத்தால் (வாள்) குணங்களை ஜெயிப்பது என்னும், கர்மத்தில் இருந்து முக்தி அடைவது முறத்திலிருந்து வெளிப்படுவது தெரிவித்த பெரியோர்கள் இரண்டாவது சம்பிரதாயமான தொட்டிலுக்கு கூட அர்த்தம் எந்த விதமாக சொல்லினார்களோ பார்க்கலாம். மனிதன் ஜீவிதம் ஜென்மத்தில் ஆரம்பித்து, ஜீவிதம் இறுதியில் முக்தியால் முடிகின்றது. அதுவரை மரணத்தால் இடம் மாறியபோது ஜீவிதம் என்பது வரிசையாக இருக்கின்றது. அதனால் ஒரு பிறப்பில் ஆரம்பித்த ஜீவிதம் எத்தனையோ தேகங்கள் மாறியபோது இடைவெளி இல்லாததாக, இறுதிக்கு ஒரு முக்தியால் இறுதியாகி போகின்றது. ஜென்மத்திற்கு, முக்திக்கு நடுவில் உள்ளதெல்லாம் ஜீவிதம் என்றே சொல்லலாம். ஜீவன் பிறந்ததிலிருந்து இறுதி வரை ஜீவிதத்தில் கஷ்டங்கள், சுகங்கள் இரண்டும் வந்து போகும். கஷ்டங்கள் மனிதனுக்கு ஒரு ரகமான உணர்வை கொடுத்தால், சுகங்கள் அதற்கு எதிர்ப்பு திசையில் உணர்வு கொடுக்கும். கஷ்ட சுகங்கள் கிழக்கு மேற்கு போல ஒன்றின் ஒன்று எதிர்ப்பானது என்று எல்லோருக்கும் தெரியும். ஜீவனுக்கு மோக்ஷம் வரும் வரை கஷ்ட சுகங்கள் தவறாது மேலும், இன்று இருந்து உன்னுடைய வாழ்க்கை ஆரம்பம் ஆனது என்னும், இன்றிலிருந்து கஷ்ட சுகங்கள் மத்தியில் ஆடுவது தான் என்னும், வாழ்க்கையில் ஆடுவதை தொட்டில் வடிவத்தில் காட்டினார்கள். கஷ்ட சுகங்களில், நல்லது கெட்டதில், பாவ புண்ணியங்களில் எப்போதும் ஆடுவதே வாழ்க்கை என்னும் பார்ப்பவர்களுக்கு அர்த்தமாகும் படி டோலா ரோஹனத்தை வைத்தார்கள். தொட்டில் ஒரு பக்கத்தில் போய் அங்கு கம்மியம் கிடைக்காமல் மற்றொரு பக்கம் வந்து கொண்டிருக்கும். திசை, எதிர்ப்பு திசையில் ஆடுகின்றது தொட்டில். அதன் போலவே போகின்ற திசை, எதிர்ப்பு திசையில் ஆடுகின்றது வாழ்க்கை. வாழும் வாழ்க்கை காலம் எல்லாம் இந்த விதமாக இருக்கும் என்பதை தெரிவிப்பதற்கு குழந்தையை தொட்டிலில் ஆடவைத்து காண்பித்து அந்த காரியத்தை சம்பிரதாயமாக பெரியோர்கள் வைத்தார்கள். ஞானத்தில் கூடியிருக்கின்ற அர்த்தம் கொடுக்கின்றது சம்பிரதாயம். மேலும் இரண்டாவது சம்பிரதாயமான தொட்டில் ஊஞ்சல் மனிதர்கள் அர்த்தம் செய்து கொண்டாலும் வாழ்க்கையில் இருப்பது என்னவோ தெரியும்.

வாழ்க்கையில் கஷ்ட சுகங்கள் மத்தியில் ஆடுவது தவிர ஒன்றும் இல்லை என்னும் தெரிவதற்கு எல்லோரையும் அழைத்து, எல்லோரும் முன்பு குழந்தையை தொட்டிலில் வைத்து ஆடவைப்பார்கள். இப்போதும் எங்கேயாவது பெயருக்கு மட்டும் டோலா ரோஹனம் நாள் இருந்தாலும் அர்த்தமில்லை. பணம் இருக்கின்றவர்கள் அவர்களுடைய பெருந்தன்மையை பெறுவதற்கு அவர்களுடைய சந்தானத்திற்கு தெட்டில் போடும் நிகழ்ச்சி செய்கின்றார்கள் தவிர சம்பிரதாயமுறையாக செய்வதில்லை. பூர்வம் ராஜாக்களிலிருந்து ஏழை வரை இந்த சம்பிரதாயங்கள் முறையை அர்த்தமாகும் படி செய்வார்கள். அதனால் பூர்வ காலத்தில் எல்லோரும் ஆன்மீக சிந்தனையை கொண்டு இருந்தார்கள். இன்று சம்பிரதாயங்கள் தெரியாமல் போனதினால் ஆன்மீக சிந்தனையும், பாவ புண்ணியம் பயமும் மக்களில் இல்லாமல் போனது. புதிய புதிய கோவில்கள் கோபுரங்கள் வளர்ந்து கொண்டு போனாலும், எவ்வளவோ சுவாமிஜிகள் வந்து கொண்டிருந்தாலும் வாஸ்துவமாக மனிதனுக்கு தேவைப்படும் தெய்வ ஞானம் கிடைக்காமல் போனது. பலவிதமாக இருக்கின்ற தெய்வ ஞானம் சம்பந்தப்பட்ட சம்பிரதாயங்கள் இல்லாமல் போகின்றது. எத்தனையோ பேர் சுவாமிஜிகள் மனிதர்களால் உபன்யாசத்தில் பெரியவர்களாக என்னும் சொல்லிக் கொண்டிருந்தாலும் பூர்வ காலத்தில் இருந்த ஞானம் மட்டும் சொல்லாமல் போகின்றார்கள். 100 200 வருடம் கீழ் பிறந்தவர்கள் கூட தேவதையாக தயாராகிக் கொண்டிருக்கும் போது, யோகங்களில் பலவிதமான பெயர்கள் வைக்கப்பட்ட புதிய விதானம் எத்தனையோ வந்து கொண்டிருக்கும்போது, மனிதன் எந்த பக்கம் போக வேண்டுமோ அர்த்தமாகாமல் போகின்றது. இந்த சூழ்நிலையில் பூர்வ காலத்தில் இருந்த ஞானத்தை, பூர்வ காலத்தில் இருந்த பெரியோர்கள் தெரிவித்த சம்பிரதாயங்களை மனிதன் மறந்து போனான். இப்போது இருந்து நாம் புதிய தேவதைகளை புதிய யோக நினைவை விட்டு உண்மையான தெய்வ ஞானத்தை தெரிந்து கொள்வதற்கு முயற்சி செய்வோம்.

## உபநயனம்

நயனம் என்றால் கண் என்று அர்த்தம். மனிதனுக்கு இரண்டு கண்கள் இருக்கின்றது. இரண்டையும் நயனம் என்று சொல்கின்றோம். ஆனால் ஒன்றை கூட உப நயனம் என்று சொல்ல மாட்டோம். உபநயனம் என்பது கூட பார்வை கொண்ட கண் தான் முகத்திற்கு இருக்கின்ற இரண்டு கண்கள் போன்றது அல்ல. உப என்றால் வேறு ஒன்று என்று அர்த்தம் செய்து கொள்ள வேண்டும். இரண்டு கண்களால் பார்க்கின்ற விஷயங்கள் எல்லாம் உலகத்திற்கு சம்பந்தப்பட்ட விஷயங்கள்தான், இரண்டு கண்களால் பார்த்த விஷயங்களை மனசு ஞாபகத்தில் வைத்துக் கொண்டு மறுபடியும் அவற்றை காண்பித்துக் கொண்டிருக்கும். நேற்று நாள் ஒரு சினிமா பார்த்தோம் என்று நினைத்துக் கொள்ளலாம். அந்த சினிமாவில் கண்களினால் பார்த்த வடிவங்கள் சிலது மனசுக்கு நெருங்கி இருக்கும். இரண்டாவது நாள் வீட்டில் உட்கார்ந்து கொண்டு இருக்கும் போது சினிமா ஞாபகத்திற்கு வந்த உடனே பார்த்த வடிவங்கள் நேரில் பார்ப்பது போல் தெரிந்து கொண்டிருக்கும். இந்த விதமாக இரண்டு கண்களால் பார்த்த விஷயங்கள் மனோ ஞாபகத்தால் மறுபடியும் பார்ப்பதும் கூட நடக்கின்றது. அப்படி பார்த்த விஷயங்கள், கேட்ட விஷயங்கள், தின்ற பண்டங்கள் ருசிகள் மறுபடியும் மனோ நேத்திரத்தால் காட்டப்படுகின்றது. அதன் போல மனோ நேத்திரத்தால் பார்ப்பது மூன்றாவது கண்ணால் பார்ப்பது என்று சொல்லிக் கொண்டிருப்பார்கள். ஒரு விஷயம் பார்த்தது போல் ஞாபகத்திற்கு வருவது மனோ பார்வையில் பார்ப்பது போல் சொல்லிக் கொண்டிருப்பார்கள். அப்படியே கண்கள் இல்லாமலே முதல் பார்த்த சினிமாவின் வடிவம் பார்ப்பது மூன்றாவது கண்ணால் பார்ப்பது போல், மனோ நேத்திரத்தால் பார்ப்பது போல் சொல்லி, அதனை சூட்சும பார்வை என்று சிலர் சொல்லிக் கொண்டிருப்பார்கள்.

சிலர் சொல்லியது போல் கண்ணால் பார்த்த வடிவங்களை மனோ நேத்திரத்தால் பார்ப்பது உப நயனத்தால் பார்த்தது போல் அல்ல. ஸ்தூல கண்களால் பார்த்த விஷயங்கள் மறுபடியும் மனசினால் பார்த்தபோது அது உப நயனம் பார்வை அல்ல. மனசு உப நயனம் என்ற நேத்திரம் அல்ல. மனம் காட்டும் விசயங்கள் முதலில்

கண்களுக்கு காட்டப்பட்டதினால் மேலும் அது கண்கள் பார்வைக்கு சம்பந்தப்பட்ட விஷயங்கள் தான் ஆகும். மனோ நேத்திரத்தால் பார்த்து கண்களால் பார்க்காதது போது அந்த விஷயம் கண்களால் பார்த்ததாக கணக்கிடப்படுகின்றது. மனோ நேத்திரத்திற்கு சுயமாக பார்வையில்லை. கண், காது, மூக்கு, நாக்கு, தோலுக்கு உள்ள இந்திரிய சக்தியினால் மறுபடியும் மனசுக்கு காட்டப்படுகிறது மேலும் வாஸ்துவமாக மனசுக்கு காண்பிக்கும் சக்தி இல்லை. ஒரு நேரம் ஸ்தூல கண்களுக்கு பார்வை இல்லாமல் இருந்தால், எந்த வடிவத்தையும் பார்க்க முடியாமல் இருந்தால் மனசு கூட பார்வையில்லாததாகும். அதன் போலவே எல்லா உறுப்புக்களில் மனசு இருக்கும் என்று தெரிந்து கொள்ள வேண்டும். இதனினால் மனசு இந்திரியங்கள் விஷயங்கள் தவிர வேறவற்றை தெரிவிக்காது என்னும், அப்படி தெரிவிப்பதற்கு அதற்கு சுயமாக பார்வையில்லை என்று தெரிய வேண்டும்.

மனோ பார்வை இந்திரிய பார்வை போன்றது என்னும் சொல்வதினால், மனசுக்கு சுயமாக கண்கள் இல்லாததால் மனோ பார்வை மூன்றாவது பார்வை என்று சொல்லலாம் மேலும், மனோ நேத்திரத்தை உப நயனம் என்று சொல்லக்கூடாது. மனோ பார்வை பெரியவர்களை விட சிறியவர்களுக்கு அதிகமாக இருக்கும். உதாரணத்திற்கு குடும்பத்தில் இருக்கின்ற அனைவரும் ஒரு சினிமா பார்த்தார்கள் என்று நினைத்துக் கொள்ளுங்கள். சினிமாவில் சிறிய காட்சிகளில் இருந்து எல்லா காட்சிகள் சிறிய குழந்தைகளுக்கு நன்றாக ஞாபகம் வரும். அவருக்கு வருவது போல பெரியோர்களுக்கு ஞாபகம் வராது. அதுதான் பெரியோர்களுக்கு சிறியவர்களுக்கு இருக்கின்ற மனோ காட்சி வித்தியாசம் என்று சொல்லலாம். மனோ காட்சி சிறியவர்களுக்கு சிறிய வயதிலிருந்தே இருக்கும். மேலும் அவருக்கு மனோ காட்சி இன்னொருவர் தெரிவிக்க வேண்டிய அவசியம் இல்லை. உப நயனம் வேறு, மனோ நேத்திரம் வேறு. மேலும் உப நயனம் எல்லோருக்கும் தேவை. மனோ நேத்திரம் முதலில் இருந்து இருக்கிறது, மற்றும் அது யாருக்கும் தேவையில்லை. மனோ நேத்திரம் இருக்கின்றதினால் அது என்னவென்று அதனுடைய சாமர்த்தியம் என்னவென்று அர்த்தமானது. உப நயனம் என்றால் எது? அதனுடைய சாமர்த்தியம் என்ன என்பது

எல்லோருக்கும் கேள்வியாகவே இருக்கும். மற்றும் உப நயனம் என்றால் என்னவென்று தெரிந்து கொள்ளலாம். உபநயனம் ஸ்தூலமான இரண்டு கண்களுக்கு மற்றும், மூன்றாவது கண்ணான மனோ நேத்திரத்திற்கு சம்பந்தமில்லை. ஒன்று இரண்டு கண்களால் ஸ்தூலமாக இருக்கின்ற காட்சிகளை மூன்றாவது கண்ணால் சூட்சுமமாக பதுங்கி இருக்கின்ற ஸ்தூல காட்சிகளை பார்க்கலாம். உபநயனம் உலகத்திற்கு இந்திரியங்களுக்கு சம்பந்தமில்லாத விஷயங்கள் தெரிவிக்கின்றது. ஐந்து ஞான இந்திரியங்களுக்கு சம்பந்தப்பட்ட சப்த, பார்வை, ரச, வாசனை, தொடுதல் விஷயங்களை தெரிவிப்பது அல்ல. உபநயனம் நாம் நிவாசிக்கின்ற நாட்டை தெரிவிப்பது அல்ல. நாடு அல்லாத நாடான உபதேசத்தை தெரிவிப்பது உபநயனம். உப நயனத்தினால் உபதேசமான ஆத்மா ஸ்தானம் தெரியப்படும். உப நயனத்தால் ஆத்மாவை தெரிந்து கொள்ளும் பார்வை ஏற்படும். உப நயனம் என்ற காட்சி ஆத்மாவை தெரிவிக்கின்றது, அதனை ஆத்மா ஞான காட்சி என்று சொல்வார்கள். ஆத்மாவின் காட்சியான உபநயனம் குருக்களால் உருவாகும். சம்பூர்ண ஞானிகளாக இருக்கின்றவர்களிடம் ஒரு சுபகாலத்தில் ஞான காட்சியை சம்பாதித்துக்கொள்வது உப நயனம் செய்து கொள்வது என்று சொல்வார்கள். மனிதனுக்கு சிறிது வயது வந்த உடனே உப நயனம் செய்வது இந்து சம்பிரதாயங்களில் மூன்றாவது சம்பிரதாயம். மனிதனுக்கு 12 வயது வந்த பிறகு புத்திக்கு சிறிது பலம் வந்திருக்கும். மேலும் 12 வருடங்கள் பிறகு எப்போதாவது உபநயனம் செய்யலாம். முதன் முதலில் ஆத்மா ஞானம் போதனை குருவினால் போதிப்பதினால் அந்த நேரத்தில் இருந்து உப நயனம் கிடைக்கும் என்று பெரியோர்கள் சொல்லினார்கள். பிறகு எப்போதாவது ஆத்மா போதனை தெரிந்து கொள்வதினால் உப நயனத்திற்கு சிறிதாவது பார்வை கொடுப்பது போல் ஆகும். நயனத்திற்கு பார்வை ஏற்பட்ட பிறகு பார்க்க வேண்டியது உபதேசம். மேலும் சிறிது ஞானம் தெரிந்த நபருக்கு உபதேசம் தேவை. காட்சியை விட முதல் கண் தேவை. மேலும் உபதேசத்தை விட முதல் உபநயனம் தேவை. ஞான போதனையால் உபநயனத்தை முதல் அடைய வேண்டும்.

மனிதனுக்கு 12 வயது வந்த பிறகு பூர்வம் இந்து சம்பிரதாயம் பிரகாரம் ஒரு சுப முகூர்த்தத்தில் திங்கட்கிழமை

அன்று உபநயனம் செய்ய ஏற்பாடு செய்யப்பட்டது. நினைத்து கொண்ட நாளில் அனைத்து உறவினர்களுக்கும் அழைப்பிதழ் சொல்லி வர வைத்துக்கொண்டு, ஒரு குருவினால் முதன் முதலில் ஆத்மா ஞானம் போதனை செய்வார்கள். அப்படியே முதலில் ஆத்மா ஞானம் போதனையினால் அந்த சிறியவனுக்கு உபநயனம் ஏற்படும் என்று நினைப்பார்கள். அது அந்த நாள் பூர்வ உப நயனம் சம்பிரதாயமானால், அதனுடைய வடிவம் இன்று வேறு விதமாக மாறிப்போனது. சிலர்கள் ஐந்தியம் (பூணூல்) போட்டு, மந்திரத்தை சொல்லி உபநயனம் செய்தோம் என்று சொல்கின்றார்கள். காலம் கடந்து கொண்டிருக்கும் போது தர்மங்கள் அதர்மமாக மாறி போனது போல் சம்பிரதாயம் கூட மாறி போனது. சிலர்கள் சிறிய வயதில் ஞானம் என்னும் சம்பிரதாயத்தை மறந்து போனார்கள். உலகத்துக்கு சம்பந்தப்பட்ட படிப்பு தவிர பரமாத்மாவின் படிப்பு ஒன்றும் தெரியாத நிலையில் சிலர்கள் அவர்களுடைய குழந்தைகளை வளர்க்கின்றார்கள். 50 வருடம் வந்தாலும் அவர்களுக்கு ஞானத்தை பற்றி ஞாபகப்படுத்தினால் இப்போது எதற்கு முழுமையாக வயதான பின் அப்போது பார்க்கலாம் என்று சொல்லுபவர்கள் கூட இருக்கின்றார்கள். எவ்வளவு வயது வந்தாலும் உலக சம்பந்தம் அல்லாதது உபநயனம் என்பதை தெரிந்துக் கொள்ளாமல் அஞ்ஞானம் என்னும் குருட்டுத்தனத்தில் முழ்கிவிடுகின்றார்கள். குருட்டுத்தனம் போய் ஞான பார்வை ஏற்பட வேண்டும் என்றால் முதல் உபநயனம் எனப்படும் கண் தேவையாகும். பிறகு ஆர்வத்தை பொறுத்து பார்வை மேம்படுத்தி கொள்ளலாம்.

இந்து சம்பிரதாயங்களில் முக்கியமானது உபநயனம் காரியம். பூர்வம் உபநயனம் செய்யாமல் அவர்களுடைய பிள்ளைகளுக்கு திருமணம் செய்ய மாட்டார்கள். அந்த முறை பிராமணா, வைசியா முதலியன குலங்களில் இப்போதும் இருந்தாலும் சிறிது சம்பிரதாயம் முறையாக இல்லை என்றே சொல்லலாம். உபநயனத்திற்கு மூலம் ஆத்மஞானம் தான். அதனால் ஆத்மஞானம் தெரிவிக்காமல் மந்திரம் சொல்லினாலும் பூணூல் போட்டுக் கொண்டாலும் அந்த காரியம் உபநயனம் எனப்படாது. உபநயனம் செய்வது இந்துக்களுக்கு முக்கியமான நடைமுறை. இந்துக்களாக இருக்கின்றவர்கள் எல்லோரும் சம்பிரதாய முறையாக உள்ள உப நயனம் சிறிது புத்தி கிரகிக்கும் சக்தி வளர்ந்தால்

அவர்களுடைய பிள்ளைகளுக்கு செய்ய வேண்டும். கடவுள் ஞானம் சிறியவர்களுக்கு போதிப்பதில் கிறிஸ்தவர்கள் இஸ்லாம் மதத்தினர் முன் நிலையில் இருக்கிறார் என்று தெரிகின்றது. கடவுளுடைய ஞானம் எல்லோரை விட பின் தங்கியவர் ஹிந்துக்கள் தான் என்று தெரிகின்றது. ஹிந்துக்களில் பெரிய வயது இருக்கிறவர்களும் கூட ஞானத்திற்கு தூரமாக இருந்து அவர்களுடைய பிள்ளைகளை கூட தூரமாக வைத்தார்கள். தேவாலயங்களுக்கு போய் கோரிக்கைகள் வேண்டும் பக்தி தவிர ஞானம் தெரிந்து கொள்ளும் முறை ஒன்று கூட இல்லாமல் போனது. உண்மையைச் சொல்கின்றேன் என்று கவலைப்படாமல் இப்போதாவது சிறுது காலம் இருந்து போகும் வாழ்க்கை மீது பார்வையை செலுத்தாமல் சிறிதாவது தெய்வ ஞானம் மீது கூட பார்வை செலுத்த வேண்டும் என்று விரும்புகிறோம். இந்து சம்பிரதாயங்கள் தெய்வ சாராம்சம் கொண்டதென்னும் மற்றவர்களுக்கு கூட தெரியும்படி அனுசரிக்க வேண்டும். சாரம் இல்லாத ஆகாரம், தெய்வ ஞானம் இல்லாத வாழ்க்கை நிரார்த்தகம் என்னும் பெரியோர்கள் வாக்கியத்தை ஞாபகம் வைத்துக் கொண்டு ஞானம் அடைந்த வாழ்க்கையை கடத்த வேண்டும்.

## உபதேசம்

மனித வாழ்க்கையில் மிக முக்கியமான சம்பிரதாயம் உபதேசம் அடைவது. இந்து சம்பிரதாயங்களில் நான்காவதான உபதேசம் கண்டிப்பாக உப நயனம் அடைந்தவர்களே அடைய வேண்டியது இருக்கும். கண் இல்லாமல் போனால் பார்வையில்லாதது போல் உபநயனம் இல்லாதது உபதேசம் இருக்காது. உபதேசம் என்றால் நமக்கு பக்கத்தில் இருக்கின்ற தேசம் (நாடு) என்னும், இதுவரை நம் பார்க்காத தெரியாத பிரதேசம் என்று அர்த்தம். உபதேசம் பார்ப்பதற்கு அடைவதற்கு கண்டிப்பாக அதனை பார்க்க வேண்டிய கண் தேவை. அந்த கண்ணை உபநயனம் என்று சொல்கின்றோம். உபநயனம் பருவம் வயது வந்த பிறகு அடைந்து, படிப்படியாக பார்வையை அபிவிருத்தி செய்து கொண்டு முன்னொரு காலத்தில் குருவினால்

உபதேசம் பார்க்க வேண்டியது (அடைய வேண்டியது) இருக்கும். இந்த காலத்தில் உபநயனம் தெரியாமல் போனது, அதனால் உபதேசம் சிறிதளவு கூட தெரியாமல் போனது. சிலர் எங்கள் குருவிடம் உபதேசம் அடைந்தோம் என்று சொல்லலாம். சில சிஷ்யர்கள் எங்கள் குருவிடம் இருந்து உபதேசத்தை வாங்கிக் கொண்டு வந்தோம் என்று கூட சொல்லலாம். சிஷ்யர்கள் என்பவர்கள் இந்த விதமாக சொல்லிக் கொண்டிருக்கும்போது குருக்கள் என்பவர்கள் யார் வந்தாலும், எப்போது வந்தாலும் உபதேசம் கொடுப்பதற்கு தயாராக இருக்கின்றார்கள். இந்த முறை யெல்லாம் பார்த்தால் இந்து சம்பிரதாயங்கள் எவ்வளவு சீரழிந்த நிலைக்கு சேர்ந்து போனதோ அர்த்தம் ஆகின்றது.

பூர்வம் முறை பிரகாரம் உப நயனம் போல் உபதேசம் கூட திருமணம் ஆகாததற்கு முன்பே அடைய வேண்டியது இருக்கும். உப நயனம் இல்லாதவனுக்கு திருமணத்திற்கு பெண் கொடுக்க மாட்டார்கள். இந்த காலத்தில் முகமதிய மதத்தில் குர்ஆன் படிக்காத பெண்ணை நிக்கா செய்து கொள்ளாதது போல பூர்வம் உபநயனம் உபதேசம் அடையாதவனுக்கு அவர்கள் பெண்ணை கொடுப்பவர்கள் யாரும் இல்லை. அதனால் பருவம் வயது வந்தபோதே இந்து சம்பிரதாயங்களில் மூன்றாவதான உபநயனம், நான்காவது உபதேசம் இளைஞர்கள் கண்டிப்பாக அடைவார்கள். குருவினால் முதன் முதலில் ஞான போதனையினால் உப நயனம் ஏற்படுத்திக் கொள்ளலாம் என்று தெரிந்து கொண்டோம். பிறகு உபதேசம் எப்படி அடைய வேண்டுமோ தெரிந்து கொள்ளலாம். உப நயனம் அடைந்த பிறகு அவனுடைய ஆர்வத்தை பொறுத்து அவன் உபதேசத்திற்கு அருகதை பெற்றவன் ஆவான். ஆர்வம் எவ்வளவு அதிகமாக இருந்தால் அவ்வளவு விரைவாக உபதேசத்தை அடையலாம். உப நயனத்திற்கு புத்தி கிரகிக்கும் சக்தி எவ்வளவு தேவையோ அதன் போலவே உபதேசத்திற்கு ஆர்வம் சக்தி தேவை. புத்தி கிரகிப்பதினால் உபநயனத்திற்கு பார்வை நன்றாக வரும்படி செய்து கொண்ட பிறகு அந்த பார்வையினால் பார்க்க வேண்டியது உபதேசம் தான். அதனால் ஒரு சாதகமான செவ்வாய்க்கிழமை அன்று சுப முகூர்த்தத்தை பார்த்துக் கொண்டு ஞானத்தை போதித்து உபநயனம் செய்த குருவினால் உபதேசம் அடைவார்கள். உபதேசம் என்றால் குருவினால் ஞான சக்தியை அல்லது

ஞான அக்னியை தானம் செய்து கொள்வது. அதுவரை ஞானத்தை போதித்து உபநயனத்திற்கு பார்வையை கொண்டு வந்த குரு உபதேச நாளில் தன்னில் இருக்கின்ற ஞான அக்னியை சிஷ்யனுக்குள் பிரவேசிக்கும் படி செய்வார். அதுவரை ஞான தானம் செய்த குரு ஞான அக்னியை தானம் செய்வது உண்மையான உபதேசம் என்று சொல்ல வேண்டும்.

உபநயனம் என்றால் தனித்துவமான பார்வை கொண்டது என்னும், உபதேசம் நடந்த போது சிஷ்யனுக்கு என்ன தெரிகின்றது என்று சிலர் கேட்கலாம். அதற்கு பதில் என்னவென்றால்! உபதேசம் அடைந்த சமயத்தில் தனித்துவமாக தெரியப்படுவது எதுவும் இல்லை. **கண் அல்லாத கண் ஞான நேத்திரம், பார்வை அல்லாத பார்வை ஞான பார்வை, பார்வை அல்லாத பார்வை ஞான சக்தி (ஞான அக்னி), தேசம் அல்லாத தேசம் உபதேசம்.** மற்றும் உபதேசம் அடைந்தவனுக்கு தெரியப்படுவது எதுவும் இல்லை. உபதேசம் அடைந்தவன் பிறகு குரு சொல்லியது போல் யோக சாதனை செய்ய வேண்டியது இருக்கும். உபதேசம் அடைந்த பிறகு யோக சாதனை செய்வதினால் குரு கொடுத்த ஞான அக்னி பிரகாசிக்கும். யோகம் செய்யாதவனுக்கு ஞான அக்னி வளராது. உபதேசம் அடைந்த பிறகு ஞான அக்னி வளர்ந்து கர்மம் என்னும் விறகுகளை எரிக்கும் நிலை யோக சாதனை செய்த போதே கிடைக்கும் என்று தெரிந்து கொள்ள வேண்டும். பகவத் கீதாவில் பகவானான ஸ்ரீகிருஷ்ணனினால் சொல்லப்பட்ட இரண்டு ரகமான எக்னங்களில் ஞான எக்னங்களினால் உபயோகப்படும் அக்னி ஞான அக்னி தான் என்று மறக்க கூடாது. அக்னி அல்லாத அக்னி ஞான அக்னி, விறகு அல்லாத விறகுகள் கர்மம் என்னும் விறகுகளை எரிப்பதினால் கர்ம சேஷம் இல்லாமல் போய் மனிதன் முக்தி அடைகின்றான். இறுதிக்கு முக்தி அடைவதற்கு, கடவுளிடம் சேர்வதற்கு உபதேசம் கண்டிப்பாக தேவை ஆகும். அதனால் பூர்வம் ஞானம் தெரிந்த பெரியோர்கள் உபதேசத்தை சம்பிரதாயம் பிரகாரம் செய்தார்கள்.

மனிதன் கர்மத்திலிருந்து விடுதலை அடைவதற்கு பெரியோர்கள் செய்த முயற்சிகள் இந்து சம்பிரதாயங்கள். காலம் கடந்து கொண்டிருக்கும் போது சம்பிரதாயங்கள்

அழுக்கடைந்து தெரியாமல் போகின்றது. சிறிது வரை எங்கேயாவது சம்பிரதாயம் முறைகள் இருந்தாலும் அவற்றுக்கு அர்த்தம் தெரியாமல் போனது. இன்று கூட குருக்கள் இருக்கின்றார்கள், சிஷ்யர்களும் இருக்கின்றார்கள், உபதேசம் காரியங்கள் இருக்கின்றது. இருந்தாலும் உப நயனத்தில் ஞானம், உபதேசத்தில் ஞான சக்தி இல்லை. அதன் போலவே சிஷ்யர்கள் செய்யும் யோகத்தில் கர்மங்கள் எரிவதில்லை. பகவத்கீதாவில் கடவுள் சொல்லிய யோகத்தை இரண்டையும் விட்டு மனிதன் புதிய பெயர்களை வைத்துக்கொண்டு, புதிய யோகங்களை செய்கின்றான். அப்படிப்பட்ட யோகங்கள் எத்தனை செய்தாலும் கூலி இல்லாத வேலையாகும். பலன் இல்லாத சாதனையை எவ்வளவு செய்தாலும் என்ன பிரயோஜனம் என்று தெரியாமல் இருக்கின்றார்கள். மற்றொரு விசித்திரம் என்னவென்றால் சில குருக்கள் மோக்ஷம் மார்க்கத்தை தெரிவிப்பது யோகம் என்னும் சொல்லாமல், ஆரோக்கியம் சூத்திரங்களை சொல்லிக் கொண்டு தத்த தமாதி யோகங்கள் செய்தால் நோய்கள் போகும் என்னும், முகத்தின் மீது நினைவு வைத்துக் கொண்டால் நோய்கள் வராது என்னும், வலிகள் போக வேண்டும் என்றால் வலிமேல் நினைப்பு வைத்துக் கொள்ளுங்கள் என்னும் பலவிதமான ஆரோக்கிய யோகங்களை சொல்கின்றார்கள். தெய்வம் சொல்லிய கர்ம நிர்மூலன யோகங்கள் சொல்லாமல் நோய் நிர்மூலன யோகம் சொல்லினால் மனிதன் தெய்வ மாரக்கத்தின் பக்கம் பயணம் செய்வார்களா?

இந்து சம்பிரதாயங்கள் என்றால் என்ன? தெய்வ தர்மங்கள் என்றால் என்ன? என்னும் பார்வை இல்லாத போது சம்பிரதாயங்கள் பழுதடைந்து விடும், தர்மங்கள் அதர்மங்களாக மாறிப்போகும். இப்போது சம்பிரதாயங்கள் தெரியாமல் போனதினால், தர்மம் அதர்மங்களாக மாறியதனால் எங்கேயாவது ஆன்மீகம் உபதேசம் நடந்தால் அது பெயருக்கு மட்டும் உபதேசம் தான் உண்மையான உபதேசம் அல்ல. அப்படிப்பட்ட குரு உபதேசங்களில் அஷ்டாக்ஷரி, பஞ்ஷாக்ஷரி மந்திரத்தில், சோஹம் என்னும் மந்திரமே, ராமா என்னும் மந்திரமே எதனையோ ஒன்றை சிஷ்யன் காதில் போதிக்கப்படுகின்றது. பூர்வம் இந்திரிய அதீதமான ஞான அக்னியை குருக்கள் சிஷ்யர்களுக்கு தானம் செய்யும் போது இன்று இந்திரியதிற்கு சம்மந்த

சத்தம் மந்திரங்கள் உபதேசம் என்று போதிப்பது தெய்வ மார்க்கத்திற்கு எதிர்ப்பானது அல்லவா? தெய்வ மார்க்கத்தில், சம்பிரதாயம் முறையில் எத்தனையோ விதமாக கெட்டுப்போன நாம் இப்போதாவது ஜாக்கிரதையாக இருந்து நம்முடைய சம்பிரதாயம் என்னவென்று எவ்வளவு பெரியது என்று ஆலோசனை செய்யும் நிலைக்கு சேர வேண்டும். இறுதி சுவாசத்தில் இருக்கின்ற இந்து சம்பிரதாயங்கள் மறுபடியும் அனுசரிக்க முயற்சி செய்ய வேண்டும். அப்படி செய்யும்போது பெரியோர்கள் நமக்காக செய்த முயற்சிகள் நிறைவேறியது போல் ஆகும். நாம் கூட தெய்வ மார்க்கத்தை அனுசரித்து இறுதிக்கு மோக்ஷம் அடையலாம். மேலும் நீ சிறியவனாக இருந்தால் உபநயனம் உபதேசம் அடையலாம். பெரியவராக இருந்தால் உன்னுடைய பிள்ளைகளுக்காவது உபநயனம் உபதேசங்கள் சம்பிராப்தம் ஆகும்படி செய்யுங்கள்.

## திருமணம் - மணமகன், மணமகள்

திருமணம் என்ற சொல் அனைவருக்கும் தெரிந்திருக்கும். ஒவ்வொருவர் வாழ்க்கையில் திருமணம் ஒரு நாள் தவறாமல் வரும் அது மறந்து போகாத நாளாக இருக்கும். திருமணம் என்பது விசேஷமான அர்த்தத்தை கொடுக்கின்ற காரியமாக நம்முடைய பெரியோர்கள் வைத்தார்கள். முக்கியமாக சொல்ல வேண்டும் என்றால் பெரிய பெரிய அர்த்தங்களை தெரிவிக்கும் காரியங்களால் கூடி தனித்துவமான காரியம் என்று சொல்லலாம். இதில் முக்கியமாக முதலில் மணமகன், மணமகள் தயார் செய்யும் காரியத்தை விவரித்துக் கொள்ளலாம். அதுவரை சாதாரணமாக இருந்தவனை தனித்துவமாக மணமகனாக தயார் செய்வது எல்லோருக்கும் தெரிந்த விஷயம் தான். அதன் போலவே சாதாரணமாக இருக்கின்ற பெண்ணைக் கூட தனித்துவமான அலங்கார முறைகளில் மணமகளை தயார் செய்வதும் கூட தெரிந்த விஷயம் தான். இதில் தெரியாதது என்ன இருக்கிறது எல்லோருக்கும் தெரிந்த விஷயம் தானே! அப்படி நினைத்தபோது நமக்கு தெரியாத விஷயம் எத்தனையோ இருக்கின்றது என்று சொல்லிக் கொள்ளலாம். ஆண்களை மணமகனாக, பெண்ணை மணமகளாக செய்வது

இந்து சம்பிரதாய சித்தமான வேலை. அதன் போலவே திருமணத்திற்கு சம்பந்தப்பட்ட ஒவ்வொரு வேலை சம்பிரதாயமானது.

**சம்பிரதாயம் என்றால் விசேஷ அர்த்தத்தில் கூடியிருக்கின்ற தர்மத்தின் முறை என்று அர்த்தம்.** இந்துக்கள் சம்பிரதாயம் எல்லாவற்றிலும் எந்த தர்மம், எந்த அர்த்தம் சம்பந்தப்பட்டிருக்கிறதோ தெரியாத போது சம்பிரதாயம் அனுசரித்தாலும் அனுசரிக்காமல் போனாலும் ஒன்றுதான். முக்கியமாக அர்த்தம் தெரியாத போது அனுசரிக்கின்ற சம்பிரதாயங்கள் அதர்மமாக மாறுவதற்கு வாய்ப்பு உள்ளது. பூர்வ காலத்தில் இருந்த ஞானிகள் தெய்வ ஞானத்துடன் கூடியிருக்கின்ற தர்மங்கள் பிரகாரம் சிருஷ்டித்தது சம்பிரதாயங்கள். இப்போது திருமணம் முறையைப் பற்றி தெரிந்து கொள்ளலாம். தாய் தந்தைக்கு பிறந்தவரை பலானவர் சந்தானம் என்று சொல்வார்கள். இவன் யார் என்னும் ஒருவனைப் பற்றி கேட்டபோது அவன் பலான அவருடைய மகன் என்று நாம் பதில் அளிப்போம். அதன் போலவே பெண்களை பலானவர் மகள் என்று கூட சொல்வோம். உதாரணத்திற்கு ராமையா மகன், ராமையா மகள் இருவர் இளம் பெண் மற்றும் இளைஞர்களை பற்றி சொல்ல விரும்பினோம். அந்த இருவரில் ஒருவர் அண்ணனாக இருந்தால் ஒருவருர் தங்கையாக இருப்பார். அப்படி இல்லாமல் என்றால் ஒருவர் அக்காவாக இருந்தால் ஒருவர் தம்பியாக இருப்பார். இருவருக்கும் ஒரே தந்தையாகும் போது அவர் இருவர்களும் சகோதரி சகோதரனாக இருப்பார். இப்போது உண்மையான விஷயத்திற்கு வருவோம். திருமண காரியத்தில் மணமகனை, மணமகளை தயார் செய்வது எல்லோருக்கும் தெரிந்த விஷயம் தான். ஒரே திருமணத்திற்கு மகள் மகன் ஆனதால் மணமகனுக்கு மணமகள் சகோதரி சகோதரனாக சம்பந்தப்பட்டு இருக்கிறார் என்று சுலபமாக தெரிந்து போகின்றது. ராமையா மகனுக்கு, ராமையா மகளை இருவரைப் பற்றி எப்படி கூறினோமோ, அதன் போலவே இங்கு மணமகன் மணமகள் என்று சொல்கின்றோம். மேலும் திருமணம் தந்தைக்கு ஆனதால், அந்த தந்தைக்கு சந்ததியாக ஒரு இளம்பெண் இளைஞர் தயாரானார்கள். அதுவரை யாருக்கோ பிறந்து தனித்தனியாக தந்தையை உள்ளவர்கள் ஒரு நாள் அந்த தந்தை பெயர் சொல்லாமல் தனித்துவமாக மணமகன் மணமகள் சொல்லும்போது

ஆலோசனை செய்து பார்த்தால் அர்த்தமாகாத விசித்திரம் தானே! அர்த்தம் ஆகாத போது, விவரம் தெரியாத போது விசித்திரமாகவே இருக்கும். அப்படிப்பட்ட போது எத்தனையோ கேள்விகள் நம் முன் வரும் அது என்னவென்றால்! திருமணம் என்பது இருவரில் ஒன்றாகும் போது, திருமணத்திற்கு இருவர் மகன் மகள் ஆகும்போது அண்ணன் தங்கை முறையாகும் அல்லவா!. அப்படிப்பட்ட போது இருவரும் ஓரிடத்திலேயே சேர்ந்து சந்தானம் உற்பத்தி செய்யுங்கள் சொல்வது என்ன? அதுவரை தனித்தனியாக இருக்கின்ற வரை அந்த நாள் மகனுக்கு மகளை திருமணம் செய்து பிறகு பதி பத்தினி சொல்வது என்ன? இதன் போன்ற எத்தனையோ கேள்விகளுக்கு பதில் தேட வேண்டியது இருக்கும். திருமணத்திற்கு சம்பந்தப்பட்ட தர்மம் என்னவென்று பெரியோர்களினால் தெரிய வேண்டியது இருக்கும். பூர்வம் பெரியோர்கள் தெரிவித்த விவரம் இப்போது தெரிவிக்கின்றவர்கள் இல்லாமல் போனதினால் பூர்வம் என்ன சொல்லினாரோ விரித்துக் கொண்டு தெரிந்து கொள்ளலாம்.

பூமி மீது பிறந்த பெண் ஆண் ஒவ்வொரு மனிதனும் சிறிய வயதில் இருந்து இளம் வயது வரும் வரை தெய்வ ஞானம் தெரியாதவராக அவர் நினைவு எல்லாம் படிப்பு மீது, விளையாட்டுகள் மீது இருந்து வாழ்க்கையின் எல்லை இது தான் என்று தெரியாதவர்களாக இருப்பார்கள். அப்படிப்பட்டவர்களுக்கு வயது வந்த பிறகு ஒரு ஆண் ஒரு பெண் உடன் அந்த நாளிலிருந்து ஞான மார்க்கத்தில் நடந்து கொண்டு தெய்வத்தை தெரிந்து கொள்ளுங்கள் என்று தெரிவிக்கின்ற காரியமே திருமணம் காரியம். இதுவரை பலானவர் உடைய மகன் மகள் நினைத்த நீங்கள் உண்மையாக அவருடைய சந்ததி அல்லவென்று உங்களுடைய தந்தை தனித்துவமாக இருக்கின்றார் என்னும், உங்களுக்கு அல்ல உங்கள் போலவே எல்லோருக்கும் ஒரே தந்தை இருக்கிறார் என்று தெரிவிக்கும் அர்த்தத்தில் சம்பந்தப்பட்டிருப்பது மணமகனுக்கு, மணமகள் செய்வது. **பகவத்கீதாவில் குணத்ரய விபாக யோகத்தில் சர்வ ஜீவிகளுக்கு தந்தை நானே தாய் பிரக்ருதி என்னும் பகவான் கூறிய முக்கியமான ஞானம் உள்ளது.** அங்கு கடவுள் தெரிவித்த தர்மம் எல்லோருக்கும் தெரிவதற்கு அதனுடைய நடைமுறை காரிய வடிவத்தில் தெரிவிக்க வேண்டியது திருமணத்தில் மணமகன் மணமகள் என்று தெரிந்து கொள்ள

வேண்டும். எல்லோருக்கும் தந்தை பரமாத்மா, அதனுடைய அர்த்தமே நடைமுறையில் **"திருமணம்"** என்ற சொல் இருவருக்கும் தந்தையானது.

உலகம் முழுவதும் சிருஷ்டித்தவர், எல்லா மதத்திற்கு அதிபதி முழுவதுமாக எல்லோரிலும் வியாபித்து பெயர் உருவம் வடிவம் இல்லாதவரான பரமாத்மா என்னும் அடையாளமே **"திருமணம்"** என்ற சொல். திருமணம் தெய்வம் என்னும் அதற்கு இன்று இருந்து நீங்கள் ஞானோதயத்தால் மகன் மகள் பற்றி தெரிந்து கொள்ளுங்கள் என்பதை தெரிவிப்பதற்கு மணமகன், மணமகள் பெயர் வைத்தார் என்று தெரிந்து கொள்ள வேண்டும். அதுவரை அஞ்ஞானத்தில் இருக்கின்றவர்களும் கூட இந்த நாளில் இருந்து தெய்வம் என்றால் என்ன, நாம் யார் என்னும், நாம் எப்படி இருக்க வேண்டும் என்பதை பற்றி அமைக்கப்பட்டது திருமண காரியம்.

உபநயனம் உபதேசம் அடைந்தும் கூட அஞ்ஞானத்தில் மூழ்கி போனவர்களும் கூட, ஒரு நேரம் உபநயனம் உபதேசம் அடையாதவர், கடவுளுடைய ஞானம் என்னவென்று தெரியாமல் அஞ்ஞானத்தில் வாழ்ந்து கொண்டிருக்கின்றவர்கள், திருமண நாளிலிருந்து ஞானபரமாக மாறாமல் நாம் யாருடைய சந்தானம் என்று தெரியாமல் போனால் அவனுடைய திருமணம் அர்த்தமற்றது. ஞானம் தெரியாத வாழ்க்கை வீணாகும். குழந்தை பருவத்தில் இருந்து இளம் வயதில் நுழைந்தபோது வாழ்க்கை தெய்வ ஞானம் தெரிந்து கொள்வதற்கு அருகதை பெற்றிருக்கின்றது. மேலும் பூமி மீது பிறந்த பெண் ஆண் இருவரும் தெய்வ சந்தானம் என்னும் தெரிவித்து முதல் ஞான செய்தி திருமகன், திருமகள். ஞானத்தால் கூடி இருக்கின்ற எத்தனையோ விஷயங்கள் தெரிந்து கொள்வதற்கு ஜெகத் எல்லாம் தெய்வ சந்ததி விஷயங்களை தெரிந்து கொள்வதற்கு முதல் நாளே திருமண நாள். அந்த நாள் தன் வாழ்க்கையில் தெரிந்து கொள்ள வேண்டிய மற்ற ஞான தகவல்கள் எல்லாம் காரிய வடிவங்களாக வைத்தார்கள்.

அதனால் திருமண நாளை சம்பூர்ண ஞான தகவல் என்று சொல்வார்கள். அந்த நாள் அனுசரிக்க வேண்டியது அவற்றில் சிலவற்றை கீழ் எழுதினோம் பாருங்கள்.

## துணை மாப்பிள்ளை (துணை மணமகன்)

இந்து சம்பிரதாயம் பிரகாரம் திருமண காரியங்களில் திருமகன் பக்கத்தில் துணையாக மற்றொரு நபர் மணமகனாக இருப்பார். அவரை **“துணை மாப்பிளை”** என்று பெயர் வைத்து அழைக்கப்படுகின்றது. திருமண காரியங்கள் எல்லாம் ஆத்ம ஞானத்திற்கு சம்பந்தப்பட்டது தான் என்னும் முதலிலேயே ஒரு முறை இருக்கிறது. மேலும் துணை மாப்பிள்ளையும் கூட ஆத்ம ஞானத்தில் உள் பாகம் தான் என்று தெரிந்து கொள்ள வேண்டும். திருமண காரியத்தில் மணமகனுக்கு செய்யும் எல்லா வேலைகளும் பார்த்தால் தன் எதுவும் செய்யாமல் பக்கத்தில் உட்காருவதே துணை மணமகன் உடைய வேலை. மணமகன் செய்யும் வேலை, அவர் பேசுகின்ற வார்த்தை (மந்திரங்களை) பார்த்து கேட்டு மௌனமாக பக்கத்தில் இருப்பதே துணை மணமகனுடைய விதானம். அர்த்தமில்லாத வேலை திருமண காரியத்தில் இருக்காது. மேலும் தான் கூட மணமகன் சொல்லப்படும் துணை மணமகன் பக்கத்திலிருந்து எந்த ஒரு காரியம் செய்யாமல் அமைதியாக இருப்பதற்கு காரணம் என்ன இருக்கின்றதோ விவரித்துக் கொண்டு பார்க்கலாம்.

பூமி மீது பிறந்த ஒவ்வொரு மனிதனும் காலையில் எழுந்ததிலிருந்து இருந்து ஏதோ ஒரு வேலையை செய்து கொண்டே இருப்பான். ஒரு மனிதன் என்றால் தேகத்துடன் சஜீவமாக இருக்கின்றவன் என்று அர்த்தம். மனிதனை பிரித்தால் தேகம் வேறு ஜீவன் வேறு. ஒரு மனிதன் வேலை செய்து கொண்டிருக்கும் போது ஜீவன் செய்கின்றானா, தேகம் செய்கின்றதா என்னும் பரிசோதனை செய்து பார்த்தால் தேகம் செய்கின்றது போல் தெரிகின்றது. தேகம் செய்கின்ற வேலையை ஜீவன் கவனித்துக் கொண்டு அந்த வேலையை தானே செய்கின்றதாக பிரமித்துக் கொண்டிருக்கிறான் தவிர தன் சிறிதளவு கூட செய்யவில்லை. இப்போது ஒரு கேள்வி

வரும் அது என்னவென்றால்! வேலையை தேகம் செய்கின்ற போது ஜீவன் இல்லாத தேகம் வேலை செய்யுமா? என்று கேட்கலாம். அதற்கு எங்களுடைய பதில் என்னவென்றால் ஜீவன் இல்லாத தேகத்திற்கு வேலை செய்ய வேண்டிய அவசியம் இல்லை. ஜீவன் இருக்கும்போது மட்டும் தேகம் வேலை செய்து கொண்டு இருக்கும். அப்படியானால் ஜீவன் வேலை செய்யவில்லை. அப்படிப்பட்ட போது தேகம் சுயமாக வேலை செய்கின்றதா என்று சந்தேகம் வரலாம். அதற்கு பதிலாக தேகம் கூட சுயமாக வேலை செய்யவில்லை என்று சொல்லலாம். தேகம் வெறும் வேலை செய்யும் இயந்திரம் போன்றது மேலும் சொந்தமாக வேலை செய்யவில்லை. தேகம் கருவி போல இருக்கும்போது, வெறும் ஜட பொருள் மட்டுமே ஆகும்போது, ஜீவன் கூட வேலை செய்யாத போது நடக்கின்ற வேலை யார் செய்ய வைக்கின்றார் என்பது முக்கியமான கேள்வி வரலாம்.

தேகத்தில் இருக்கின்ற ஜீவன் வெறும் கஷ்ட சுகங்களை அனுபவிக்கின்றதற்கு மட்டும் இருக்கும்போது, தேகத்தில் நடக்கின்ற வேலைக்கு ஜீவனுடைய சக்தி சிறிது அளவு கூட உபயோகப்படாத போது, வேலை செய்வதற்கு ஜீவனுக்கு சிறிதளவு கூட சக்தி இல்லாத போது, தேகம் கூட சுயமாக வேலை செய்யாத போது, இந்த பக்கம் ஜீவன் மட்டும் அல்லாமல், அந்த பக்கம் தேகம் மட்டுமல்லாமல் மற்றவர் யாரோ இன்னொருவர் வேலைக்கு காரணமானவர் என்று சொல்லலாம். சஜீவ தேகத்தில் ஒன்று ஜீவன், இரண்டு தேகம் மட்டும் அல்லாமல் மூன்றாவது அவர் எல்லா வேலை செய்வதற்கு சக்தியானவர் ஒருவர் இருக்கின்றார். அவரை ஆத்மா என்று சொல்கின்றோம். ஆத்மா தேகத்தில் அமைதியாக யாருக்கும் தெரியாமல் இருக்கின்றது. தெரிகின்ற தேகத்தில் தெரியாத ஆத்மா இருக்கின்றது. தெரியாத ஆத்மா வெளியில் தேகத்தை அசைய வைத்து வேலை செய்ய வைக்கின்றது. தேகத்தில் சைதன்ய சக்தியாக இருந்து யாருக்கும் தெரியாத ஆத்மாவை தெரியப்படுத்தும் நோக்கமே **"துணை மணமகன்"** காட்டுவது. திருமணம் என்றால் தெய்வம் என்னும், மணமகன் என்றால் கடவுளுடைய குமாரன் என்று விவரமாக தெரிந்து கொண்டோம். கடவுள் சர்வ ஜீவராசிகளுக்கு தந்தை என்று பகவத்கீதாவில் குணத்ரயவிபாக யோகத்தில் நான்காவது சுலோகத்தில் **"ஸர்வ யோநிஷி கௌந்தேய! முர்தய ஸம்பவந்தியா,**

**தாஸாம் பிரம்ம மஹத்யோநிரஹம் பீஜப்ரத பிதா".** என்று சொல்லினார். **எந்த யோனியில் பிறந்த ஜீவராசிக்கும் தந்தை பரமாத்மா தாய் பிரக்ருதி என்று மேல் சுலோகத்தில் தெரிகின்றது.** தெரிகின்ற விஷ்வமெல்லாம் பிரித்துக் கொண்டு பார்த்தால் ஆத்மாக்கள் மூன்று, பிரக்ருதி ஒன்று தான் என்று தெரிகின்றது. மூன்று ஆத்மாக்களில் பரமாத்மா தந்தை ஸ்தானத்தில் இருக்கும் போது பிரக்ருதி தாய் ஸ்தானத்தில் இருக்கின்றது. மற்ற இரண்டு ஆத்மாக்களில் ஒன்று ஜீவாத்மா இரண்டாவது ஆத்மாவாக இருக்கின்றது. ஜீவாத்மாவை பிரக்ருதி புருஷர்களுக்கு பிறந்த குமாரனாக கணக்கிட்டோம். விவரமாக சொல்லிக் கொண்டால் கடவுளுடைய புத்திரனாக திருமகனாக தெரிந்து கொண்டோம். ஜீவாத்மா பிறகு மீதி இருக்கின்றது ஆத்மா ஒன்றுதான். ஜீவாத்மாவை திருமகன் என்று சொல்லினால் ஆத்மாவை என்னவென்று சொல்ல வேண்டுமோ கேள்வியை எடுத்துக் கொண்டு பார்க்கலாம்.

ஜீவன் ஜென்மிக்கின்றான் என்றால் ஒரு தேகத்தில் சேர்ந்து நிவாசிக்கின்றான். அப்படி சேர்ந்த தேகத்தில் எவ்வளவு காலம் இருக்க வேண்டும்? என்ன செய்ய வேண்டும்? என்ன சாப்பிட வேண்டும்? எந்தெந்த கஷ்ட சுகங்களை அனுபவிக்க வேண்டும்? யாருடன் சம்பந்தப்பட்டு இருக்க வேண்டும்? எந்த பகுதியில் இருக்க வேண்டும் என்னும் முதலியன எல்லாவற்றுக்கும் ஒரு விவரம் அந்த ஜீவனுடன் வந்து இருக்கும். அது ஒரு கணக்கு மட்டும் தான், அதனை **"கர்மம்"** என்று சொல்கின்றோம். அந்த கணக்கு பிரகாரம் ஜீவன் தேகத்தை நடத்த முடியாது, தேகம் சுயமாக நடக்க முடியாது. தேகத்தில் ஜீவன் சக்தி இல்லாதவனாக தலையில் ஓர் இடத்தில் மட்டும் சிறிய புள்ளியாக உருவம் கொண்டு இருக்கிறான். தேகத்திற்கு கூட சுயமாக அசைகின்ற சக்தி இல்லை. தேகம் எல்லா வேலை செய்வதற்கு, கர்மம் என்னும் கணக்கு பிரகாரம் தேகம் அசைந்து வேலை செய்வதற்கு, தேகம் உள்ளே எங்கேயோ தலையில் இருக்கின்ற ஜீவன் சுகங்களை அனுபவிப்பதற்கு ஆத்மா காரணமாக இருக்கின்றது. ஆத்மா சக்தி சொரூபமாக தேகத்தை அசைய வைக்கின்றது. அதனால் ஆத்மாவை சைதன்ய சக்தி (ஆத்மா சக்தி) என்று சொல்கின்றோம். இந்த பக்கம் தேகத்திற்கு அந்த பக்கம் ஜீவனுக்கு ஆதாரமான ஆத்மா ஜீவனுடன் தேகத்தில் இருக்கின்றது. ஜீவன் எங்கு இருக்குமோ ஆத்மா அங்கு இருக்கும். இதனைப் பொருத்து

பார்த்தால் ஜீவன் இல்லாத தேகம் இருக்கலாம் ஆத்மா இல்லாமல் ஜீவன் இருக்காது. ஒரு சஜீவமான தேகத்தில் நடக்கின்ற எல்லா வேலைகளும் ஜீவனுக்காக ஆத்மா செய்கின்றார். ஆத்மா செய்கின்றபோது ஜீவன் தேவைக்கான செய்யப்படும் வேலை மேலும் ஜீவனே செய்கின்றார் என்று எல்லோரும் நினைக்கின்றார்கள். ஜீவன் கூட தன் தான் செய்கின்றது போல் நினைக்கின்றான். ஆத்மா மட்டும் எல்லாம் செய்தாலும், தேகமெல்லாம் வியாபித்து இருந்தாலும் வெளியில் மட்டும் யாருக்கும் தெரியப்படவில்லை.

எல்லாம் அசைவுகளும் கர்ம பிரகாரம் அசைய வைக்கும் ஆத்மா தெரியாமல் போவது, வேலைக்கு சம்பந்தமில்லாத ஜீவாத்மா தன் தான் வேலை செய்கின்றது போல் நினைப்பது, ஜீவனுக்கு இருக்கின்ற அஞ்ஞானம் தான் என்று தெரிந்து கொள்ள வேண்டும். ஞானம் பிரகாரம் நமக்கு தெரியாமல் நம் பக்கத்திலேயே இருக்கின்ற ஆத்மாவை தெரிவிப்பது திருமணத்தில் துணை மணகனை பக்கத்தில் வைத்து காட்டுவது என்று தெரிந்து கொள்ள வேண்டும். ஜீவன் இல்லாத தேகம் இருக்கலாம் மேலும் ஆத்மா இல்லாத ஜீவன் இருக்க மாட்டான் என்று முதலிலேயே சொல்லினோம். ஜீவாத்மா ஆத்மா இரண்டும் ஜோடி ஆத்மாக்களாக இருக்கின்றது. ஒன்றை விட்டு ஒன்று இருக்காது. மரணத்தில் தேகத்தை விடும்போது, ஜென்மத்தில் தேகம் அடைந்தபோது இரண்டு ஆத்மாக்கள் ஜோடியாக பயணம் செய்கின்றது. அனுபவிக்கின்றதற்கு ஜீவாத்மா, அனுபவிக்கும்படி செய்வதற்கு ஆத்மா தேகத்தில் இருக்கின்றது. அதனால் இறப்பும் பிறப்பும் இரண்டும் ஜீவாத்மா ஆத்மாக்களினால் நடக்கின்றது. ஜீவாத்மாவுக்காகவே ஆத்மாவை கடவுள் சிருஷ்டித்தார். சிருஷ்டியில் ஒவ்வொரு ஜீவனுக்கும் ஒரு ஆத்மாவை துணையாக வைத்தார். **ஜீவாத்மா ஆத்மாக்களை பகவத் கீதாவில் ஷரடு, அக்ஷரடு என்று கூறினார். ஷராஷரன் இருவர் இணைந்து தேகத்தில் இருக்கிறார் என்று கூட தெரிவித்தார்.** ஷர புருஷனான ஜீவாத்மா, அக்ஷர புருஷனான ஆத்மா புருஷோத்தமனான பரமாத்மாவுக்கு பிறந்தவர்கள் என்று சொல்லலாம். அதனால் ஜீவாத்மாவை மணமகன் என்னும் சொல்லும் போது ஆத்மாவை துணை மணமகன் என்று சொல்ல வேண்டியிருந்தது. ஜீவாத்மாவுடன் ஆத்மா ஒன்று இருக்கிறது என்பதை தெரிவிப்பதற்காகவே

திருமணத்தில் மணமகனுடன் துணை மணமகனை வைக்கின்றோம்.

துணை மணமகன் இல்லாத திருமணம் பூர்வம் செய்ய மாட்டார்கள். திருமணம் காரியம் எல்லாம் அஞ்ஞானிகளுக்கு ஞானம் தெரிவிப்பதற்காக வடிவமைக்கப்பட்டது. மேலும் சாஸ்திரம் முறையாக தர்மம் முறையாக செய்யும் திருமண காரியங்களில் மணமகனுடன் துணை மணமகன் இணைந்து இருக்க வேண்டும். திருமணத்தில் மணமகனுடன் காரியங்கள் எல்லாம் செய்ய வைத்து இவற்றின் அனைத்திற்கு பின் ஆத்மா இருக்கிறது என்னும் தெரிவிப்பதற்கு துணை மணமகனாக ஒரு நபரை தெரிவிப்பது தர்மயுத்தமான வேலை. ஜீவாத்மாவுடன் பிறக்கின்றது, ஜீவாத்மாவுடன் மரணிக்கின்றது. மேலும் ஆத்மா எப்போதும் துணையாக இருக்கிறது என்று தெரிவிப்பதற்காக **“துணை”** என்று சொல்லப்பட்டது. பரமாத்மாவினால் ஜீவனுடன் ஆத்மா பிறக்கப்பட்டதால் மேலும் கடவுளுக்கு ஜீவாத்மா, ஆத்மா இருவரும் குமாரனே என்று சொல்லலாம். இதனைப் பொருத்து ஜீவாத்மா மணமகன் ஆகும்போது ஆத்மா கூட மணமகனே ஆகும். மேலும் ஆத்மாவை துணை மணமகன் என்று சொல்கின்றோம். ஜீவாத்மா ஆத்மாக்கள் இருப்பதை தெரிவிப்பதற்கு ஜீவாத்மாவை மணமகன் என்னும் சொல்லி ஒரு மனிதனை, ஆத்மாவை துணை மணமகன் என்று இரண்டாவது மனிதனை திருமண காரியத்தில் காட்டுகின்றோம்.

## வாள்

எந்த நாள் மணமகன் ஆகி நீ தெய்வ புத்திரன் என்னும் சொல்கின்றாரோ அந்த நாளில் இருந்து நீ தனித்துவமாக ஒருவருடன் போர் செய்ய வேண்டும் என்பதை தெரிவிக்கும் படி வாளை கையில் கொடுக்கின்றார்கள். அஞ்ஞானத்திலிருந்து தெய்வ மார்க்கத்தில் நுழைந்தவர்கள் மாயாவிடம் போராட வேண்டியது இருக்கும் என்று அன்றிலிருந்து மாயா உனக்கு பெரிய விரோதி என்னும், அது பலவிதமான உருவத்தில் இருக்கும் என்னும், அதனிடம் போராடி ஜெயிப்பதற்கு எப்போதும் சிப்பாயாக இருக்க

வேண்டும் என்று போதித்து அந்த அர்த்தத்தை கொடுக்கும்படி மணமகனுக்கு வாளை கொடுத்தார்கள். பூர்வ காலம் பெரிய வாளை கொடுத்து சிப்பாயாக தெரியும்படி பெரியோர்கள் செய்து காலம் கடந்து கொண்டிருக்கும் போது மாற்றம் அடைந்து வந்து இந்த நாள் சிறிய கத்தியை கையில் கொடுக்கின்றார்கள். அந்த சம்பிரதாயம் முழுமையாக இல்லாமல் போகாமல் சிறிய கத்தியாக இருந்ததற்கு நாம் சந்தோஷப்பட வேண்டும். பூர்வ காலத்தில் முறைகளுக்கு அர்த்தம் தெரிந்து செய்வார்கள். இன்று அர்த்தம் மாறிப்போனது. முறை மட்டும் சிறிது மிச்சம் இருக்கின்றது. தனித்துவமாக மஞ்சள் துணியை அணிந்து கொண்டு மஞ்சளை பூசிக்கொண்டு நான் புனிதமானவன் என்பது போல் தெரியும்படி திருமண மணமகன் தனக்கு தானே நான் யார் மகன், எனக்குள்ள புனிதம் என்னவென்று யோசனை செய்யவில்லை. அதன் போலவே சிறிய கத்தியை கையில் வைத்துக் கொண்ட மணமகன் நான் யார் மேல் போர் செய்ய வேண்டும் என்று நினைப்பதில்லை. இந்த விதமாக இன்று இருந்து அர்த்தமற்றதாக இருக்காமல், அர்த்தம் செய்து கொண்டு நடைமுறையை அர்த்தத்தில் செய்யுங்கள். இந்த விஷயத்தை தெரிந்த நீங்கள் திருமண நாளன்று திருமணமகனுக்கு, திருமணமகளுக்கு தந்தையான பரம பிதா ஒருவர் தான் என்று தெரியப்படுத்துங்கள்.

அதன் போலவே மணமகனுக்கு வெளியில் கத்தியை கொடுப்பது மட்டுமல்லாமல் உள்ளே அர்த்தத்தில் ஞானம் என்னும் பெரிய வாளை கொடுத்து அவரை மாயாவிடம் போராடும் சிப்பாயாக தயார் செய்யுங்கள்.

## பாஷிங்கம் (பட்டம் கட்டுதல்)

மணமகன், மணமகள் திருமணம் செய்த உடனே அவர் தலை மீது நெற்றி பாகத்தில் அரிசியால் தயார் செய்யப்பட்ட பாஷிங்கம் கட்டும் வழக்கம் இருக்கின்றது. காலம் கடந்து கொண்டிருக்கும்போது அவற்றிலும் கூட மாற்றம் அடைந்து இந்த காலத்தில் பாஷிங்கங்கள் அரிசியில் தயார் செய்வது மட்டுமல்லாமல் வேறு விதமாக கூட

தயாரானது. அவற்றில் சிறிது மாற்றம் வந்த போது சில இடத்திலாவதும் அரிசியால் தயார் செய்யப்பட்ட பாஷிங்கங்கள் இருப்பது சந்தோஷம். இப்படிப்பட்ட நிலையில் அவற்றை பற்றி தெரிந்து கொள்வது தேவை. பூர்வம் எந்த நோக்கத்தில் பாஷிங்கம் பெரியோர்கள் வைத்தார்கள் என்றால்!

நம் தேகத்தில் ஏழு முக்கியமான நாடி மையங்கள் இருக்கிறது. அது தண்டுவடம் கீழ் பாகத்திலிருந்து சிரசு வரை தண்டுவடத்தில் இருந்து வியாபித்த நரம்பில் இருக்கிறது. பிரம்ம நாடி எனப்படும் அந்த நாடியில் மேல் இருக்கின்ற இரண்டு மையங்கள் மிக முக்கியமானது. புருவத்தின் மத்தியில் இருக்கின்ற நாடி மையத்தை பூமத்திய ஸ்தானம் என்னும், அதன் போலவே இறுதியில் மேல் இருக்கின்ற மையத்தை சஹஸ்ரம் என்று ஆன்மீகத்தில் சொல்லப்படுகின்றது. ஞான பார்வை வருவதற்கு பூ மத்திய ஸ்தானம், ஞானம் மற்றும் ஞான சக்தி நிற்க சஹஸ்ரம் அருகதை பெற்று இருக்கின்றது. கண் புருவம் மத்தியில் நாடி மையங்கள் ஞான பார்வைக்கு மையமாக இருக்கும் போது,

பூமி மீது தானியங்களில் அரிசி ஞானத்திற்கு அடையாளமாக ஞான சின்னங்களாக இருக்கின்றது. ஜோதிட சாஸ்திர முறையாக ஞானத்திற்கு அதிபதி சந்திரன், சந்திரன் தானியம் அரிசி. சந்திரனை மற்றும் அரிசியை ஞான சின்னமாக ஆன்மீகத்தில் கூட சொல்லிக் கொண்டிருப்பார்கள். இங்கு பாஷிங்கத்தில் அரிசியை சேர்த்து கட்டுவது கவனிக்க வேண்டிய விஷயம்.

வாழ்க்கையில் இளம் வயது வரும் வரை ஞானப்பார்வை இல்லாத இளம் பெண் உபநயனம் உபதேசம் அடையாமல் இருந்தாலும், அந்த திருமண நாளிலிருந்து ஞானப்பார்வை கொண்டிருக்க வேண்டும் என்னும் குறிப்புகளை தெரிவித்து அரிசியால் தயார் செய்யப்பட்ட அதுவும் நெல்லில் இருந்து கையால் உறிக்கப்பட்ட அரிசியால் தயார் செய்த பாஷிங்கத்தை கட்டுவார்கள். கையால் தயார் செய்யப்பட்ட நூலால் மூன்று வரிசையாக அரிசியை சேர்த்து கட்டியதை பூர்வம் மணமகனுக்கு மணமகளுக்கு முகத்தின் மீது புருவம் பூ மத்திய ஸ்தானத்தில் வைத்து கட்டுவார்கள். திருமண நாளிலிருந்து ஞான சக்தி கொண்டு இருக்க வேண்டும் என்று

ஞானத்தை சிறிது போதித்து பாஷிங்கத்தை கட்டுவார்கள். **ஞான நேத்திரம் பிரகாசிக்கும் ஸ்தானத்தில் வைக்கின்றதால் அதனை பிரகாச நேத்திரம் என்று சொல்வார்கள்.** பூர்வம் சத் சம்பிரதாயம் முறையாக அதனை பிரகாசங்கம் என்று சொல்வார்கள். இறுதிக்கு அது பாஷிங்கமாக இருக்கின்றது. பாஷிக்கின்றதால் பாஷிங்கம் (விளக்கம் தருவதினால்) பாஷிங்கம் என்று கூட சொல்கின்றார்கள். உருவத்திலும், பெயரிலும் சிறிது மாறி இருந்தாலும் சம்பிரதாயம் அடையாளமாக மிச்சம் இருக்கின்றதற்கு நாம் சந்தோஷப்பட வேண்டிய விஷயம். அதில் திருப்தி அடையாமல் சம்பிரதாய முறையாக இனி இருந்து அரிசியை பாஷிங்கமாக புழங்குவதற்கு முயற்சி செய்வோம். பூர்வ காலத்தில் இருந்த தர்மங்களை அனுசரிக்கலாம். ஞான நேத்திரம் கொண்டிருக்கலாம்.

## கன்னத்தில் பொட்டு (துளி பொட்டு)

திருமண காரியத்தில் திருமகள் திருமகன் முகத்தில் கன்னத்தின் மேல் கருப்பு துளி பொட்டை வைப்பார்கள். அதனுடைய விவரம் தெரியாமல் போனாலும் அப்படி வைப்பது பழக்கம் ஆகிப்போனது. கன்னத்தின் மேல் பொட்டை இந்த காலத்தில் ஜிஷ்டி பொட்டு என்னும் அதனை வைப்பதால் மணமகனுக்கு மணமகளுக்கு எந்த துருஷ்டிபடாது என்று கூட சிலர் சொல்லிக் கொண்டிருப்பார்கள். அதனால் இதனை சிலர்கள் துருஷ்டி பொட்டு என்னும் சிலர்கள், ஜிஷ்டி பொட்டு என்று சொல்லிக் கொண்டிருப்பார்கள். இந்த காலத்தில் கன்னத்தின் மேல் இருக்கின்ற பொட்டை பற்றி யார் என்ன நினைத்துக் கொண்டாலும் அது பூர்வத்திலிருந்து வந்து கொண்டிருந்த நடைமுறைதான் என்று சொல்லலாம். பூர்வம் இதனை துருஷ்டி பொட்டு என்னும் சொல்லி, ஜிஷ்டி பொட்டு என்று சொல்பவர்கள் அல்ல. பூர்வம் அர்த்தத்தில் கூடியிருக்கின்ற விதானம் தெரிவிப்பதற்கு அந்த விதமாக கன்னத்தின் மீது பொட்டு வைத்தார்கள். துருஷ்டி தோஷம் நிவாரணத்திற்கு வைக்கின்ற பொட்டு அல்ல மேலும் அதனை துருஷ்டி பொட்டு சொல்பவர்கள் அல்ல. திருமண காரியங்கள் எல்லாம் தெய்வ

ஞானத்தை போதிக்கின்றதனால் விதிப்படி கன்னத்தின் மேல் பொட்டு கூட ஞானத்திற்கு சம்பந்தப்பட்ட முறை தான் என்று தெரிந்து கொள்ள வேண்டும். கன்னத்தின் மேல் வைக்கும் துளி பொட்டை பார்ப்பதால் பார்த்தவர்கள் தெரிந்து கொள்ள வேண்டிய ஞானம் என்னவென்று தெரிந்து கொள்ளலாம்.

மனிதன் குழந்தையாக பிறக்கின்றான். பிறந்த ஒவ்வொரு குழந்தையும் கடவுள் சின்னத்தை வைக்கின்றார். பிறந்த ஒவ்வொரு குழந்தை தேகம் கடவுளின் நிலையமாக இருக்கின்றது. தேகம் பிரக்ருதி சம்பந்தப்பட்டதாக இருந்தாலும் தேகத்தில் பரமாத்மா ஆத்மா, ஜீவாத்மா, மூவரும் இருக்கின்றார்கள். பரமாத்மா விசாலமானவர் என்னும் தேகத்தில் கூட இருக்கின்றதனால் **“மத் ஸ்தானி ஸர்வ பூதானி”** என்னும் பகவத்கீதாவில் ராஜவித்யா ராஜகுஹ்ய யோகத்தில் நான்காவது சுலோகத்தில் கூறினார். **“மத்”** என்றால் என்னுடையது, ஸ்தானி என்றால் இடம் என்று அர்த்தம். பரமாத்மா விசாலமாக இருக்கின்றவர் மற்றும் அனைத்து ஜீவராசிகள் பரமாத்மாவில் இருக்கின்றது. அதன் போலவே பரமாத்மா எல்லா தேகத்திலும் கூட இருக்கின்றதனால் அவர் எல்லோரிலும் இருக்கின்றார் என்று சொல்லலாம். இதனைப் பொறுத்து ஒவ்வொரு தேகம் கடவுளினால் அடையாளிக்கப்படுகின்றது என்னும், அவருடைய பார்வையில் (துருஷ்டியில்) எல்லோரும் இருக்கின்றார்கள் என்று சொல்லலாம். இந்த விஷயத்தை ஒவ்வொரு மனிதனும் கிரகிக்கும்படி ஒவ்வொரு தேகத்தின் மீது பிறப்பிலேயே ஒரு **“மத்ஸ்தா”** வை வைத்தார்கள். காலம் கடந்து கொண்டிருக்கும்போது “மத்ஸ்தா” என்னும் சொல்லையை **“மத்ஸ”** என்று சொல்லாக அழைக்கின்றோம். தேகத்தின் மேல் கருப்பு மஸ்தாவை பிறந்த போதே பார்க்கலாம். தேகத்தின் மேல் பிறப்பிலேயே எங்கேயோ ஒரு இடத்தில் இருந்து மத்ஸ்தாவை **“பிறப்பு அடையாளம்”** என்று சொல்லப்படுகின்றது. பிறப்பிலேயே மத்ஸ பிறக்க வேண்டிய தேவை எதற்கு என்று யாரும் ஆலோசனை செய்யவில்லை. பிறப்பு மத்ஸ (பிறப்பு அடையாளம்) தேகத்தின் மேல் பிறப்பிலேயே இருந்ததினால் நீ பிறந்த போதே என்னால் அடையாளிக்கப்பட்டாய் என்று கடவுள் தெரிவித்தது போல தெரிகின்றது. ஒவ்வொருவரும் கடவுள் ஸ்தானமாக இருக்கின்றார் என்னும் தெரியப்படும் குறிப்பு **“மத்ஸ”** என்று

சொல்லலாம். பிறந்த போது பிறப்பு அடையாளம் மட்டுமல்லாமல் பிறகு வாழ்க்கையில் தேகத்தின் மேல் சிறிய சிறிய மத்ஸங்கள் வரும். இதனால் பிறந்த போது, பிறந்த பிறகு எப்போதும் உன்னுடைய தேகம் என்னுடைய ஆதீனத்தில் இருக்கிறது என்னும், நீ என்னால் அடையாளிக்கப்பட்டாய் என்னும் தெரிவிப்பதற்காகவே என்று தெரிகின்றது.

பிறந்த ஸ்ரீ தேகம், புருஷன் தேகம் மத்ஸங்கள் இருப்பது கடவுளின் இருப்பை தெரியப்படுத்துகின்றது. இந்த விஷயம் தெரிவிப்பதற்காக பூர்வ தெய்வ ஞானம் தெரிந்த பெரியோர்கள் திருமண காரியத்தில் மணமகள், மணமகன் முகத்தின் மீது தனித்துவமாக தெரியும் படி கன்னத்தில் மேல் கருப்பு பொட்டு வைப்பார்கள். **மணமகனுக்கு வலது பக்கம் கன்னத்தின் மேல் கருப்பு புள்ளி பொட்டு வைத்து, மணமகளுக்கு இடது பக்கம் கன்னத்தின் மேல் கருப்பு புள்ளி வைப்பார்கள். தேகத்தில் வலது பக்கம் பரமாத்மாவுக்கு சம்பந்தப்பட்டது என்னும், இடது பக்கம் பிரக்ருதிக்கு சம்பந்தப்பட்டது என்று பெரியோர்களுடைய எண்ணம். அர்த்தநாரீஸ்வரர் உருவம் கூட வலது பக்கம் ஈஸ்வரனாக இடது பக்கம் பார்வதியாக வரைந்து காண்பிப்பது இந்த அர்த்தத்தில் தான் என்று தெரிந்து கொள்ள வேண்டும்**. கன்னத்தின் மேல் கருப்பு பொட்டு பிறப்பு அடையாளம் (மத்ஸ) மாதிரி வைத்தது தான் என்று தெரிந்து கொள்ள வேண்டும். எவ்வளவோ தெய்வ ஞானம் தெரிவிப்பதற்காக வைத்த அடையாளமாக இருக்கின்ற மத்ஸவை துருஷ்டி பொட்டு, ஜிஷ்டி பொட்டு என்று நினைப்பது தவறு. பூர்வம் திருமண காரியத்தில் ஒவ்வொரு காரியத்திற்கும் அர்த்தம் மணமகனுக்கு மணமகளுக்கு தெரிவிப்பார்கள். அதுவரை தெரியாத தெய்வ விஷயம் அந்த நாளிலிருந்து மணமகளுக்கு மணமகனுக்கு தெரிய வேண்டும் என்னும் தவறாமல் கன்னத்தின் மேல் பொட்டு வைக்கப்படுவார்கள். அந்த முறை இந்த நாளில் கூட மிச்சம் இருந்தாலும் தெய்வ ஞான விஷயம் தெரியாமல் போனது.

இப்போதாவது பூர்வம் இருந்த பெரியோர்கள் சொல்லிய இந்து சம்பிரதாயம் பிரகாரம் அர்த்தம் தெரிந்து கொண்டு கன்னத்தின் மேல் பொட்டு வைத்து திருமணங்கள் செய்து கொள்ளுங்கள் என்று தெரிவிக்கிறோம்.

## மடி அரிசி – முடிச்சு அரிசி

திருமண காரியத்தில் மணமகனுக்கு முடிச்சு அரிசியை, மணப்பெண்ணுக்கு மடி அரிசி கட்டுகின்ற சம்பிரதாயம் கூட பூர்வம் இருந்தது. மணமகனுக்கு தோள்பட்டை மீது துண்டு துணி இறுதியில் சிறிது அரிசியை முடி போட்டு வைப்பார்கள். பட்டு சால்வையில் அரிசியை முடி போட்டு வலது தோள்பட்டை மேலிருந்து பின்பு இடது தோள்பட்டை கீழ் வரை கொண்டுவந்து வலது தோள்பட்டை பின்பு பக்கம் தொங்குகின்றது போல் வைப்பார்கள். முன்பு இருந்து வலது தோள்பட்டை மேல் இடது அக்குள் கீழ் மறுபடியும் வலது தோள்பட்டை மேல் சால்வை தெரிந்து கொண்டிருக்கும். அரிசி முடி மட்டும் வலது தோள்பட்டை பின்பு தொங்கிக் கொண்டிருக்கும். அப்படி வைப்பதினால் சத்தி மூட்டை (சோத்து மூட்டை) பின் தொங்கிக் கொண்டிருப்பது போல் இருக்கும். **“பெரியோர்கள் வார்த்தை சத்தி மூட்டை”** என்று பூர்வம் வாக்கியம் இருந்தது. பெரியோர்கள் வார்த்தை என்றால் **“தெரிந்தவர்கள் சொல்லிய ஆத்மஞானம் என்று அர்த்தம்”.** தெய்வ ஞானத்தை பெரியோர்கள் வார்த்தை என்று சொல்வது சகஜம். தெய்வ ஞானத்தை பெரியோர்களான ஞானிகள் இடத்தில் இருந்து தெரிந்து கொண்ட நான் எப்போதும் ஞானத்திலேயே இருக்கிறேன் என்று தெரிவிப்பதற்காக அந்த விதமாக முடி அரிசியை மணமகனுக்கு கட்டுவார்கள். மனிதர்களில் உள்ளே உள்ள ஞானம் வெளியில் தெரியாமல் இருக்கும். மேலும் எந்த மனிதனில் எவ்வளவு ஞானம் இருக்கிறதோ என்று சொல்ல முடியாது. பார்த்தால் ஞானம் தெரியப்படாது அதனால் அரிசியை ஞான சின்னமாக செய்து தெரியாமல் பின்னால் இருப்பது போல் செய்வார்கள். இது திருமண நேரத்தில் மணமகனுக்கு கட்டும் முடி அரிசியுடன் சம்பிரதாயம். **“ச” என்றால் நன்றான ஞானம் என்னும், “த்தி”**

**என்றால் புத்தி என்னும்,** நன்றாக ஞானம் கொண்ட புத்தியை சத்தி என்னும் போதிக்கின்ற ஞானிகளை பெரியோர்கள் என்று பூர்வம் சொல்லிக் கொண்டிருந்தார்கள். அதனால் ஞானம் தெரிந்தவரை சத்தி (சோத்து) மூட்டையை அடைந்தவர் என்று சொல்வார்கள். அப்படிப்பட்ட சத்தி மூட்டைக்கு சமமாக கைப்பிடி அரிசியை மூட்டை கட்டி திருமண பெரியோர்கள் வைப்பார்கள் என்று தெரிந்து கொள்ள வேண்டும். அதனை முடிச்சு அரிசி என்று சொல்வார்கள்.

மணமகளுக்கு வயிற்றுக்கு முன்பு அரிசியை முடி போட்டு வைப்பார்கள். அப்படி அரிசியை வைப்பது மடி அரிசி என்று சொல்கின்றோம். அரிசி என்றால் ஞான சின்னம் என்று தெரிகின்றது. அப்படி மடி அரிசியை மணமகளுக்கு வைப்பதில் பூர்வம் ஞானிகள் நோக்கம் என்னவென்று தெரிந்து கொள்ளலாம். பெண்களில் கர்ப்பம் உற்பத்தியாகும் ஸ்தானம் வயிறு. பெண்ணுக்கு கர்ப்பம் வந்தால் பிறக்கும் சந்ததி தெய்வ ஞானம் தெரிந்து இருக்க வேண்டும் என்ற நோக்கத்தில் வயிற்று இடத்தில் அரிசியை கட்டுவார்கள். குழந்தை பிறந்தால் மடியில் வைத்துக் கொள்வோம். மடியில் வளரும் குழந்தை ஞானம் இருப்பது போல் வளர்பேன் என்னும் பெண் தெரிவித்து, என் வயிற்றில் ஏற்படும் சந்ததி ஞானத்திலேயே வளர்ந்து ஞானத்திலேயே இருக்க வேண்டும் என்று தெரிவித்து மணமகள் மடி அரிசியை வைத்துக் கொள்கின்றது. மடி அரிசியில் அரிசியுடன் ஐந்து பொருட்களை வைக்கின்ற நடைமுறை கூட இருக்கின்றது. பிறக்கின்ற குழந்தை முதலில் பஞ்சபூதங்கள் விஷயங்களில் பிறந்திருந்தாலும், என் மடியில் வளர்ந்து ஐந்து பிரபஞ்ச விஷயங்கள் தெய்வ ஞானத்தில் மூழ்கி போக வேண்டும் என்னும் தெரியும்படி ஐந்து பொருட்களை மூழ்கியது போல் அரிசியை அதிகமாக கட்டுவார்கள். மணமகனுக்கு கைப்பிடி அரிசியை கட்டினால், மணமகளுக்கு 5 பொருட்கள் மூழ்கி போகும் படி அதிகம் அரிசியை கட்டும் நடைமுறை இருக்கின்றது. மடி அரிசி கட்டுவது, மடி அரிசியில் சிறிது சிறிதாக இருக்கின்ற ஐந்து பொருட்களை வைப்பது இப்போதும் இருந்தாலும் அவற்றின் அர்த்தம் தெரியாது. மடி அரிசியின் அர்த்தம் எந்த நாளோ தெரியாமல் போனாலும் மடி அரிசியை பெண்களுக்கு திருமணத்தில் கணவன் வீட்டுக்கு அனுப்பிய போதும் வயிற்று முன்பு மூட்டை கட்டும் நடைமுறை இப்போதும் இருக்கின்றது. புருஷர்களுக்கு

திருமண சமயத்தில் கட்டும் முடி அரிசியின் அர்த்தம் விவரம் தெரியாமல் போனது. அர்த்தம் தெரியாமல் இருந்தாலும் மடி அரிசி கட்டுவது இப்போதும் இருக்கின்றது. முடிச்சு அரிசியின் நடைமுறை இப்போது சில இடங்களில் இல்லை என்றே சொல்லலாம். திருமணம் என்றாலே கடவுள் என்னும், அரிசி என்றாலே ஞானம் என்னும் தெரியாமல் போனதினால் இன்று திருமண காரியங்கள் எல்லாம் அஞ்ஞானத்திலேயே கூடியிருக்கின்றது. இப்போதாவது திருமண காரியம் என்றால் தெய்வத்தை தெரிவிக்கும் காரியமான எண்ணத்தால் செய்து கொண்டால் சரியான இந்து சம்பிரதாயங்களை அனுசரிக்கின்றவராக ஆகுவோம். உண்மையான கணவன் மனைவி ஆகுவோம். அர்த்தம் தெரிந்து செய்து கொள்ளாத திருமணம் போலி திருமணமாகும், அவர் நாடக கணவன் மனைவி ஆகுவார்கள்.

## கால் மெட்டிகள்

பிறந்த வீடு புகுந்த வீடு பெண்களுக்கு மட்டும் இருக்கும். புருஷனுக்கு பிறந்த வீடு மட்டும் இருக்கும். புருஷனான பரமாத்மா எப்போதும் ஒரே விதமாக மாற்றம் அடையாதவராக இருப்பார் என்பதை தெரிவிப்பதற்கு பரமாத்மாவுக்கு அடையாளமாக இருக்கின்ற புருஷனுக்கு பிறந்த வீடு மட்டும் இருக்கும் என்று தெரிவித்தார்கள். ஸ்ரீயான பிரக்ருதி எப்போதும் ஒரே விதமாக இருக்காது என்னும், பிறந்த பிறகு மாற்றம் அடையும் என்பதை தெரியும்படி பிரக்ருதிக்கு அடையாளமாக இருக்கின்ற ஸ்ரீக்கு புகுந்த வீடு கூட இருக்கிறது என்று பெரியோர்கள் தெரிவித்தார்கள். பிறப்பதற்கும் இறப்பதற்கும் நடுவில் வாழ்க்கையும் இருக்கின்றது. வாழ்க்கை என்றால் வாழ்க்கையை கடத்துவது என்று அர்த்தம். பிரக்ருதியினால் தான் ஜீவிகள் ஜீவித விதானத்தை நடத்துகின்றது. அதனால் புகுந்த வீடு இருக்கிறது என்று பெண்ணுக்கு கூறி வந்தனர். இதனினால் புருஷ தத்துவமான பரமாத்மாவை (கடவுளை), ஸ்ரீ தத்துவம் கொண்ட பிரக்ருதியை தெரிந்து கொள்வார் என்று அப்படி தெரிவித்து வந்தனர்.

திருமணத்திற்குப் பிறகு பிறந்த வீட்டில் மகன் மகனாகவே இருப்பான், வீட்டுக்கு வந்த பெண் மட்டும் மருமகள் என்னும் புதிய பெயர் கொண்டிருக்கும். திருமணத்தில் மணமகன், மணமகள் என்னும் பெயர் கொண்டவர்கள் திருமணம் பிறகு மணமகன் மகனாகவே இருப்பது, மணமகள் மட்டும் மருமகளாக மாற்றம் அடைவதில் ஏதோ ஒரு விசேஷம் இருக்கிறது என்று சொல்லலாம். அது என்னவென்றால்! **மகன், மருமகள் என்னும் சொல் எவ்வளவோ தனித்துவமான அர்த்தத்தில் கூடியிருக்கின்றது.** மகன் ஒருமையுடன் கூடியிருப்பது. மருமகள் பன்மையுடன் கூடியிருப்பது. ஆன்மீகம் அர்த்தம் பிரகாரம் மகன் பரமாத்மா அம்சம், மருமகள் பிரக்ருதி அம்சம் என்று சொல்லலாம். அதன் பிரகாரம் மகன் ஒருமையுடன் சொல்லப்படும் பரமாத்மா அம்சம் கொண்ட ஜீவாத்மா, மருமகள் பன்மை என்னும் சொல்லப்படும் பிரக்ருதி அம்சம் கொண்ட குணங்கள் என்று அர்த்தம். **குணங்களுக்கு, ஜீவனுக்கு அடையாளமாக மருமகள், சொல்லப்படுகின்றது.** தேகத்தில் இருக்கின்ற குணங்களில் ஜீவன் இணைந்து போகின்றதினால் இணைந்து போகின்ற அவனை அல்லது கூடி போகின்ற அவனை ஒருமை மகன் என்று சொல்கின்றார்கள். அப்படியே குணங்கள் ஜீவனை தன்னில் இணைத்துக் கொள்கின்றது. மேலும் ஜீவனை இணைத்துக் கொண்ட குணங்களை பன்மையாக மருமகள் என்று சொல்லினார்கள். மகன் என்றால் கூடியிருப்பவன், மருமகள் என்றால் கூட படுவது என்று அர்த்தம். கூடுகின்றவன் ஜீவன், கூட படுவது குணங்கள் என்று ஞானத்தின் முறையாக அர்த்தம்.

தேகத்தில் ஜீவிக்கின்றவன் ஜீவன் ஜீவிதத்தை காரிய வடிவத்தில் நீட்டிக்கப்படுகின்றது குணங்கள். குணங்களுக்கு என்றால் பிரக்ருதிக்கு மற்றொரு பெயராக ஸ்ரீக்கு புகுந்த வீடு இருக்கிறது என்று சொல்வார்கள். புகுந்த வீடு என்றால் வாழ்க்கையை நடத்துவது என்று அர்த்தம். அதனை வெளி அர்த்தமாக ஒரு பெண் பிறந்த வீட்டிலிருந்து புகுந்த வீட்டுக்குப் போனால் இறக்கும் வரை அங்கே இருக்க வேண்டும் என்று சொல்வார்கள். இறக்கும் வரை என்றால் மரணிக்கும் வரை என்று அர்த்தம். மரணம் சுவாசை நின்ற போது தான் வரும். பஞ்ச பூதங்களில் சுவாசை இரண்டாவது. உயிரோடு இருந்த போது சுவாசை ஆத்மா சக்தியினால் நடக்கின்றது. புகுந்த வீட்டில் இருக்கின்ற பெண் தன் மரணம்

வரை தனக்கு சக்தியை கொடுக்கின்ற ஆத்மாவை மறக்க கூடாது என்று பெரியோர்கள் தெரிவித்தார்கள். ஜீவன் ஜீவிதத்தை குணங்களினால் நீட்டிப்பதற்கு தேகத்தில் ஆத்மா சக்தி உபயோகப்படுகின்றது. ஆத்மா தேகத்தில் சுவாசை ஆட வைக்கின்றவரை மட்டுமே ஜீவிதம் நீட்டப்படும். சுவாசை நின்று போனால் உள்ளே இருக்கின்ற குணங்கள் கூட நின்று போகும் என்ற சொல்.

வாழ்க்கை நடப்பதற்கு பஞ்சபூதங்கள் வேலை செய்கின்றது அதன் போலவே தேகத்தை நடத்துவதற்கு கால் வேலை செய்கின்றது. நடக்கின்ற வாழ்க்கைக்கு பஞ்சபூதங்கள் இருப்பது போல், நடக்கின்ற காலுக்கு கூட ஐந்து விரல்கள் இருக்கின்றது. காலில் இருக்கின்ற விரல்களை பஞ்சபூதங்களாக கணக்கிட்டால் முதல் கட்ட விரல் ஆகாசமாக, இரண்டாவது விரல் காற்றாக, மூன்றாவது விரல் அக்னியாக, நான்காவது விரல் நீராக, ஐந்தாவது விரல் பூமியாக அடையாளித்துக் கொள்ள வேண்டியது இருக்கும். இரண்டாவது விரலை காற்றாக கணக்கிடப்பட்டு தேகத்தில் இருக்கின்ற சுவாசைக்கு (உயிருக்கு) அடையாளமாக இருக்கின்றது. சுவாசையை உயிர் என்று கூட சொல்கின்றோம். தேகத்தில் உயிர் இருக்கின்ற வரை ஜீவன் இருப்பான். ஆத்மா இருக்கின்ற வரை உயிர் இருக்கும். உயிர் என்றால் சுவாசையை ஆத்ம சக்தியினால் நடக்கின்றது என்று மறக்கக்கூடாது. புகுந்த வீட்டில் இருக்கின்ற ஸ்ரீக்கு இறந்த வீடும் கூட அதே ஆக வேண்டும். அதற்காக உயிர் இருக்கும் வரை அங்கே மருமகள் என்ற பெயரில் இருக்க வேண்டும். நடந்து கொண்டிருக்கின்ற பிரக்ருதி ஜீவிதத்தை நடக்கின்ற காலால் ஒப்பிட்டபோது, காலுக்கு இருக்கின்ற விரலை பஞ்சபூதங்களாக ஒப்பிட்டபோது, அதில் இருக்கின்ற இரண்டாவது விரலை உயிராக ஒப்பிட்ட போது, அந்த உயிர் ஆத்மாவினால் நடக்கின்றது என்று தெரிவதற்கு ஸ்ரீக்கு காலுக்கு இருக்கின்ற இரண்டாவது விரலுக்கு **“மெட்டி”** என்ற பெயரில் மோதிரம் போல் இருக்கின்றதனை ஆத்மாவுக்கு அடையாளமாக வைக்கப்படுகின்றது. லோகங்களில் தங்கத்தை பரமாத்மாவுக்கு அடையாளமாக, வெள்ளியை ஆத்மாவுக்கு அடையாளமாக, செம்பை ஜீவனுக்கு அடையாளமாக பெரியோர்கள் நிர்ணயம் செய்து பரமாத்மாவுக்கு அடையாளமான தாலி பொட்டை தங்கத்திலும், ஆத்மாவுக்கு அடையாளமான மெட்டிகளை

வெள்ளியில் செய்வார்கள். இந்த நாளும் அதே நடைமுறை இருக்கும்போதும் வெள்ளி மெட்டிக்கு, தங்கத் தாலிக்கு அர்த்தம் இல்லாமல் போனதென்று சொல்லலாம்.

மரணம் வரும் வரை வாழ்க்கையை நீட்டிக்க வேண்டும் என்னும், ஜீவிதம் சுவாசைகளினால் நீட்டிக்கப்படுகின்றது என்னும், அந்த சுவாசை ஆத்மாவினால் நடக்கின்றது என்னும் தெரிவதற்கு திருமணமான ஒவ்வொரு ஸ்ரீக்கும் காலில் இருக்கின்ற இரண்டாவது விரலுக்கு மெட்டி போடுவது சம்பிரதாயமாக இருக்கின்றது. மெட்டி சம்பிரதாயம் இன்று கூட இருக்கும்போது சந்தோசமாக இருக்கின்றது, அவற்றின் விவரம் தெரியாமல் போனதற்கு சிறிது சிந்திக்க வேண்டியது தான். ஜீவிதத்தை மெட்டி என்னும், அது ஆத்மா மையமாக ஆத்மாவினால் நீட்டிக்கப்படுகின்றதற்கு வெள்ளியினால் மெட்டியை போட வேண்டும் என்னும், அந்த மெட்டிகள் கூட மருமகள் என்ற பெயர் கொண்ட ஸ்ரீகளே (பெண்களே) அணிய வேண்டும் என்று தெரிவது ஆத்மா ஞானமே ஆகும். திருமண காரியங்களில் ஆத்மா ஞானம் சம்பிரதாயங்கள் பெரியோர்கள் வைத்திருந்தாலும் அவற்றின் அர்த்தம் தெரியாமல் போனாலும் சில நடைமுறைகள் மட்டும் நம் மத்தியில் மீதி இருக்கின்றது. **மெட்டி அணிகின்ற முறை இந்த பக்கம் இந்து மதத்தில் மட்டுமல்லாமல் அந்த பக்கம் கிறிஸ்தவ மதத்திலும் மற்றும் இஸ்லாம் மதத்திலும் கூட பாரத நாட்டில் தெரிகின்றது.** நேரடியாக தெரியாமல் போனாலும் மறைமுகமாக கடவுளுடைய ஞானத்தை தெரிவிக்கின்ற சம்பிரதாயம் வேறு மதத்தில் கூட இருக்கின்றது சந்தோஷப்பட வேண்டிய விஷயம். மகன் போனால் மருமகள் என்ற சொல்லுக்கு அர்த்தம் இல்லை. மேலும் கணவன் இறந்த போன மனைவிக்கு மெட்டிகளை கழட்டப்படுகின்றது. மகன் மருமகன் ஆன்மீக அர்த்தம் கொண்ட சொல். மேலும் ஆன்மீக அர்த்தத்திலேயே மகன் போன பிறகு மெட்டிகளை கழட்டப்படுகின்றது. மெட்டி இல்லாத ஸ்ரீ கணவன் இல்லாத மனைவி என்பது போல் ஆத்மா இல்லாத பிரக்ருதி என்று தெரிந்து கொள்ள வேண்டும்.

# தாலிப் பொட்டு

சர்வ உலகத்தை சிருஷ்டித்தது பரமாத்மா இருந்தாலும் பரமாத்மா தெரியப்பட மாட்டார். சிருஷ்டிக்கப்பட்ட பிரக்ருதி மட்டும் தெரிகின்றது. பிரக்ருதி சுதந்திரமாக தெரிந்து கொண்டிருந்தாலும் தெரியாமல் இருக்கின்ற பரமாத்மா ஆதீனத்திலேயே இருக்கின்றது. பிரக்ருதியில் அணுவில் இருந்து பூகோளம் வரை, சூரிய கோளத்தில் இருந்து எவ்வளவோ பெரிய தான நட்சத்திர சமுதாயங்கள் வரை தன்னுடைய ஆதீனத்தில் வைத்துக் கொண்டு நடத்துகின்றது பரமாத்மா. பிரக்ருதி ஸ்ரீ தத்துவம் இருந்தாலும் பரமாத்மா புருஷ தத்துவமாக இருக்கின்றது. இந்த இரண்டும் இருக்கிறது என்னும் தெரியும்படி ஜெகத்தியில் ஸ்ரீ புருஷர்கள் தேகங்கள் தயாரானது. பிரக்ருதி புருஷர்களினால் ஜெகத் தயாராகின்றது என்னும் சித்தாந்தம் பிரகாரமே ஸ்ரீ புருஷர்களுக்கு சந்தானம் ஏற்ப்படுகின்றது. எப்போதும் பிரக்ருதி பரமாத்மா ஆதீனத்தில் இருக்கிறது என்று தெரிவிப்பதற்காக திருமண நாளன்று புருஷன் ஸ்ரீ கழுத்தில் ஒரு கயிறை முடிச்சு போடுகின்றான். **நீ பிரக்ருதி நான் புருஷன் அர்த்தம் வரும்படி பிரக்ருதி (தெலுங்கில் மூன்றெழுத்துக்கள்) மூன்று எழுத்துக்களுக்கு தகுந்தபடி கயிறால் மூன்று முடிச்சுகளை போடுகின்றார்கள்.** அந்த அடையாளதிற்கு தாலி பொட்டு என்று சொல்வது கூட இருக்கின்றது. அந்த நாளிலிருந்து ஸ்ரீ புருஷனின் ஆதீனத்தில் இருக்க வேண்டும் என்று எண்ணம் இருக்கும் படி ஆதீனத்திற்கு அடையாளமாக தங்கத் தாலி பொட்டு கட்டப்படுகின்றது. ஆதீனத்திற்கு குறிப்பானதினால் அதனை **“ஆலி பொட்டு”** என்று சொல்வார்கள் காலம் கடந்து கொண்டிருக்கும் போது ஆலி பொட்டு தாலி பொட்டாக மாறியது என்று கிரகிக்க வேண்டும்.

பிரக்ருதி மீது (கடவுளின் முன்னுரிமை) புருஷன் முன்னுரிமை தெரிவிப்பதற்கு அடையாளமே தாலி கட்டுவது என்று கிரகிக்க வேண்டும். பிரக்ருதி புருஷர்கள் விவரத்தை தெரிவிப்பது தாலி பொட்டு. பரமாத்மா ஞானம் இணைந்து இருப்பதினால் தாலி பொட்டை லோகத்தில் மதிப்பு கொண்ட புனிதமான தங்கத்தினால் தயார் செய்வார்கள். தாலி பொட்டு உருண்டை தங்கம் தகரத்தால் தயார் செய்து அதற்கு

நடுபாகத்தில் சிறிய குழியை வைப்பார்கள். ஒரு பக்கம் குழியை பார்த்தால் இரண்டாவது பக்கம் மேடாக தெரியும். சம்பிரதாயம் முறையில் தயார் செய்யும் தாலி பொட்டு ஒரு பக்கம் குழியாக இருந்து இன்னொரு பக்கம் உயரமாக இருக்கும். மேடு போல் இருக்கின்ற மேல் பாகம் புருஷன் அடையாளமாக பரமாத்மாவின் அடையாளமாக, குழியாக பள்ளத்தில் இருக்கின்ற பாகம் ஸ்ரீ அடையாளமாக பிரக்ருதி அடையாளம் என்று பூர்வம் பெரியோர்கள் தெரிவித்தார்கள். மணமகனுக்கு மணமகளுக்கு தாலி பொட்டு கட்டும்போது குழி பாகம் வெளியே தெரியும்படி, மேடாக இருக்கின்ற பாகம் தெரியாமல் உள் பக்கம் இருக்கும்படி கட்டுவார்கள். ஸ்ரீ தாலி போட்டுக்கொண்ட போது யாராவது தாலி பொட்டை பார்த்தால் பள்ளமாக இருக்கின்ற பாகம் தெரியும். அப்படி தெரிவதினால் தெரிகின்றது எல்லாம் பிரக்ருதி என்னும், உனக்கு எதிராக தெரிகின்றது எல்லாம் பிரக்ருதி சொரூபம் என்று தெரிகின்ற அர்த்தம் இணைந்திருக்கின்றது. தாலி பொட்டு பின்பக்கம் தெரியாத மேடு பாகம் இருக்கின்றது. அப்படி மேடு பாகம் தெரியாததினால் தெரியாத தெய்வம் பிரக்ருதிக்கு பின்னால் இருக்கிறார் என்னும், பிரக்ருதியை தாண்டினால் தான் தெய்வம் தெரியும் என்று அர்த்தம் இருக்கின்றது. இந்த விதமாக பெரியோர்கள் பிரக்ருதி பரமாத்மா விஷயங்கள் தாலி பொட்டில் இணைத்து வைத்தார்கள். இந்து தர்மயுத்தமாக தெய்வ ஞானம் பிரகாரம் கிட்டத்தட்ட ஒரு இன்ச் அகலம் உள்ள தங்க நாணயத்தின் மேல் நடுவில் சிறிது குழியாக ஒரு பக்கம் சிறிது மேடாக ஒரு பக்கம் வைத்து செய்வார்கள். தற்போது காலத்தில் சில பகுதிகளில் ஒரு நாணயம் இருக்கும் இடத்தில் இரண்டாவது நாணயம் கூட வந்தது. இந்த விதமாக இரண்டு நாணயம் போட்டுக் கொள்வது சம்பிரதாயத்திற்கு எதிர்ப்பானது, தர்மத்திற்கு எதிர்ப்பாகின்றது. சிலர்கள் சிறுது அகலம் கொண்ட நாணயத்தில் மேல் நடுவில் குழி வைக்காமல் மொத்தமாக நாணயங்கள் எல்லாம் குழியாக வைக்கின்றார்கள். மற்றும் சில பேர்கள் நடுவில் குழி கொண்ட நாணயத்தை போட்டுக் கொண்டாலும் குழி பாகம் உள் பக்கம் இருக்கும்படி வைத்துக் கொள்கின்றார்கள். இந்த விதமாக வைத்துக் கொள்வதும் கூட ஞானத்திற்கு எதிர்ப்பானதாகும். அதிக நாணயங்களை போட்டுக் கொள்வது, மேடு பாகம் மேல் தெரியும்படி போட்டுக் கொள்வது அர்த்தமில்லாத வேலையாகின்றது. அதனினால் இந்து சம்பிரதாயங்கள்

மறைந்து போய் அஞ்ஞானம் வளர்ந்து போகும். ஆலி பொட்டுக்கு அர்த்தம் தெரிந்து கொண்டு அணிவதினால் அவரில் இந்து தத்துவம் தெரியும். அப்படி ஆகாமல் போனால் பெயர் இந்துவாக இருந்தால் உண்மையாக இந்து அல்ல.

## அக்ஷந்தலு (அட்சதை)

ஷயம் என்றால் நாசனம் என்று அர்த்தம். அக்ஷயம் என்றால் நாசனம் ஆகாதது என்று அர்த்தம். ஷயம் ஆகாதது அக்ஷயமானது பரமாத்மா, பரமாத்மா ஞானம் அக்ஷயமானது. அக்ஷயமான ஞானத்தின் அடையாளமே அரிசியால் தயார் செய்யப்பட்ட அக்ஷந்தலு (அட்சதை). அக்ஷந்தலு (அட்சதை) என்றால் நாசனம் இல்லாத தெய்வ ஞானத்தில் கூடியிருப்பது என்று அர்த்தம். தாலி பொட்டு கட்டிய உடனே பூர்வ காலம் மணமகளுக்கு மணமகனுக்கு அட்சதையை வேறவர்களிடம் கொடுத்து அவர்களுடைய தலை மேல் போட வைப்பார்கள். இதுவரை மணமகன், மணமகளாக இருக்கின்ற நீங்கள் இப்போது இருந்து கணவன் மனைவியாக அல்லது சதி பதிகளாக மாறி உள்ளீர்கள் என்னும், இப்போது இருந்து நீங்கள் ஞான மார்க்கத்தில் ஞானம் அபிவிருத்தி செய்து கொள்ள வேண்டும் என்று அட்சதையை போடுவார்கள். பூர்வ காலத்தில் ஞானம் இஷ்டம் கொண்டவர்கள் ஞான சக்தி என்னும் ஞான அக்னி கொண்ட யோகிகள் அல்லது மகரிஷிகள் திருமண நாள் அன்று வர வழைத்து அவர் கையால் அட்சதை போடுவார்கள். வேறவர்கள் யாரும் போட மாட்டார்கள். அப்படி செய்வதில் ஞானிகள், யோகிகள் ஹஸ்தங்களில் இருந்து போடப்படும் அரிசி அட்சதை ஞானசக்தி கொண்டவை சதி பதி சிரசுகளை தொட்டு அந்த சக்தி அவர் தலையில் பிரவேசித்து அதுதான் உபதேசம் ஆகும். ஞான சக்தி அல்லது ஞான அக்னியை தானமாக அடைவது உபதேசம் என்று தெரிந்த பெரியோர்கள் பூர்வ காலம் ஞான அக்னி கொண்ட ஞானிகள், யோகிகள் கையினால் அட்சதை போடுவார்கள். யோகிகளுக்கு அல்லது மகரிஷிக்கு தவிர வேறு யாருக்கும் அட்சதையை கொடுக்கப்பட மாட்டார்கள். இன்று காலத்தில் அட்சதை

என்றால் என்ன? அது யார் கையால் போடப்பட வேண்டும் என்று தெரியாமல், அவற்றின் அர்த்தம் முக்கியத்துவம் தெரியாதவராக எல்லோரிடம் போடப்படுகின்றோம். அதுவும் யார் யாருக்கு போடுகின்றார்களோ தெரியாத நிலையில் வந்தவர்கள் எல்லோர் மீதும் தலை மேல் அட்சதை விழுகின்றது. இந்த கணக்கு பிரகாரம் அட்சதை போடும் சம்பிரதாயம் இன்றும் மீதி இருக்கும்போது அதனுடைய அர்த்தம் நூற்றுக்கு நூறு சதவீதம் தெரியாமல் போனது என்று தெரிந்து கொள்ள வேண்டும். எங்கேயாவது கோயில் கோபுரத்து மேல் லட்சுமி விஷ்ணுக்களுக்கு திருமண செய்யும் நிகழ்வு பொம்மை வடிவத்தில் இருப்பது பார்த்திருப்போம். அங்கு மங்களவாத்தியம் முதலியன அவர்கள் பக்கத்தில் நின்றிருக்கும் போது, ஒரே ஒரு மகரிஷி அவருக்கு அட்சதை போடும்படி தயார் செய்து பிரதிஷ்டித்து இருந்தாலும் அதனுடைய அர்த்தம் தெரியாமல் போனது. புராதனமாக தயாரன தேவாலயங்கள் மீது ஒருவரே அட்சதை போடும் சம்பிரதாயம் பொம்மைகள் வடிவத்தில் மீதி இருந்ததற்கு சந்தோஷப்படலாம். அப்படியானால் சும்மா இருக்காமல் இது நம்முடைய சம்பிரதாயம் என்னும் வேறவர்களுக்கு தெரிவித்து இந்து தர்மாச்சரணை நடக்கும் படி பார்ப்போம். ஞான அக்னி கொண்ட யோகிகளினால் அட்சதையை போட்டு அதுவரை உபதேசம் இல்லாதவர்களுக்கு அதுதான் முதல் உபதேசம் என்று தெரிவிக்கின்றோம். முதலிலேயே உபநயனம் உபதேசங்கள் அடைந்தவருக்கு ஞானம் அபிவிருத்தி வரும்படி செய்வோம்.

## தலம்பரங்கள்

திருமணம் வரை பொறுப்பு இல்லாமல் வளர்ந்த இளம் பெண்ணுக்கு இளைஞருக்கு திருமணத்திலிருந்து உலகத்தில் முழ்கி உலக தனத்தை சம்பாதித்து கொண்டு வாழ வேண்டும் என்னும் தெரிவிப்பது போல் அர்த்தமே இல்லாத திருமணம் இன்று காலத்தில் செய்கின்றார்கள். பூர்வ காலம் அப்படி அல்லாமல் தர்மயுத்தமான சம்பிரதாயம் முறை பிரகாரமே திருமணம் செய்வார்கள். திருமணம் என்பது மகத்துவமான ஞானம் உபதேசமாக நினைப்பார்கள். அக்ஷந்தலு (அட்சதை) என்பது ஞானக்கதிர்கள்

மகாத்மாக்கலிருந்து அவர்களுடைய சிரசை தொட்ட உடனே, வாழும் காலமெல்லாம் ஞானம் தெரிந்து கொண்டே வாழ்ந்து தாம்பத்ய வாழ்க்கையை கடத்த வேண்டும் என்று அந்த நாள் இருந்த பெரியோர்கள் செய்தி. தாம்பத்திய வாழ்க்கையில் மனைவிக்கு ஞானம் இல்லாமல் போனால் கணவன் தெரிவிக்க வேண்டும் என்னும், ஒரு நேரம் கணவனுக்கு ஞானம் இல்லாமல் போனால் மனைவி தெரிவிக்க வேண்டும் என்று அந்த நாள் இருந்த பெரியோர்கள் செய்தி. கணவன் மனைவிக்கு தலைக்கு ஞானம் சேர வேண்டும் என்னும், அதன் போலவே மனைவி கணவன் தலையில் ஞானம் சேர வேண்டும் என்று காட்டுவது தலம்பரங்கள் ஒருவர் தலையில் இன்னொருவர் போடுவது என்று தெரிந்து கொள்ள வேண்டும்.

அரிசி ஞான சின்னம் என்று முதலிலேயே தெரிந்து கொண்டோம். அம்பரம் என்றால் ஆகாசம். தலம்பரம் என்றால் ஆகாசத்தில் இருந்து தலைக்கு சேர்வது என்று அர்த்தம். ஞானம் ஆகாசத்தில் இருந்து சப்தம் வடிவத்தினால் சேருகின்றது. வெளியில் இருந்து வந்த சப்தம் காதினால் தலையில் சேருகின்றது. அதனால் ஞானத்தை தலம்பரம் என்று சொல்லினார்கள். மனைவியிடம் இருந்து கணவனுக்கு, கணவனிடம் இருந்து மனைவிக்கு ஞானம் வர வேண்டும் என்னும், ஒருவரின் ஒத்துழைப்பில் ஒருவர் உபதேசம் அடைந்து பிறகு ஞானத்தை வளர்த்துக் கொள்ள வேண்டும் என்று தெரிவிப்பது ஒருவர் தலையில் இன்னொருவர் தலம்பரங்கள் போட்டுக் கொள்வது பூர்வீகர்கள் எண்ணம். எவ்வளவோ பெரிய அர்த்தத்தில் கூடியிருக்கின்ற முறை இந்த காலத்தில் அர்த்தமில்லாமல் போனாலும் அந்த காரியமாவது மீதி இருக்கும்போது சந்தோஷப்பட வேண்டும். இதனினால் மகிழ்ச்சியடைந்து சும்மா இருக்காமல் இது தர்மயுத்தமான முறை என்னும், இந்த முறை அர்த்தத்தில் கூடியிருக்கும் போது பிரயோஜனம் மேலும், அப்படி செய்யாமல் போனால் திருமணம் சிறுவர்கள் விளையாடும் பொம்மை விளையாட்டுக்கு சமமானது என்று ஞாபகம் வைத்து கொள்ள வேண்டும்.

## அருந்ததி நட்சத்திரம்

தாலி கட்டிய பிறகு, மகானின் அக்ஷந்தலு (அட்தை) போட்டுக் கொண்ட பிறகு, தலம்பரங்கள் சிரசு மீது போட்டுக் கொண்ட பிறகு, இறுதியில் அருந்ததி நட்சத்திரம் காட்டுவார்கள். இந்த முறை கூட திருமணத்தில் முக்கியமான இறுதி சம்பிரதாயமாக இருக்கின்றது. அதனைப் பற்றி சிறிதாக விவரித்துக் கொண்டு பார்க்கலாம். சந்திரன் ஞான சின்னம் ஆனால் நட்சத்திரம் மோக்ஷத்திற்கு சின்னமாக இருக்கின்றது. சூரியன் சந்திரன் மீதி இருக்கின்ற நட்சத்திரங்கள் நமக்கு கிழக்கு மேற்க்காக இருக்கின்றார்கள். மேலும் பகல் ராத்திரியில் சிலது தெரியும், சிலது தெரியாமல் போவது நடக்கின்றது. வடக்கு தெற்கு பக்கம் இருக்கின்ற நட்சத்திரங்கள் நமக்கு மட்டும் எப்போதும் தெரிந்து கொண்டே இருக்கும். அதன் போலவே வடக்கு பக்கம் எப்போதும் தெரிகின்ற நட்சத்திரங்களில் மிகப்பெரிய நட்சத்திரம் அருந்ததி நட்சத்திரம். அது ராத்திரி பகலில் ஒரே கோணத்தில் இருந்து தெரிந்து கொண்டே இருக்கின்றது. பகல் சூரியன் வெளிச்சத்திற்கு முன்பு அது நம் பார்வைக்கு தெரியாமல் போனாலும் அருந்ததி நட்சத்திரம் எப்போதும் வடக்கு பக்கமே இருக்கின்றது. பூர்வம் ராத்திரி நேரத்தில் திருமணம் நடந்தால் புதிய தம்பதிகளுக்கு அந்த நட்சத்திரத்தை காண்பிப்பார்கள். ஒரு நேரம் பகல் நேரத்தில் திருமணம் நடந்தால் அந்த நட்சத்திரம் தெரியாது. மேலும் அந்த காலத்தில் நேலவெம்பலி செடியை கொண்டு வந்து பூமி மீது வைத்து அதன் மேல் தம்பதிகளை நிற்கவைத்து நட்சத்திரத்தை காண்பிப்பார்கள். நேல வெம்பலி செடியை மிதித்து நின்றால் சூரிய வெளிச்சம் தெரியாமல் போய் ராத்திரி போலவே இருந்து பகலிலேயே நட்சத்திரம் தெரியும். அதனால் பூர்வம் நேலவெம்பலி செடியை திருமணத்தில் கொண்டு வருவர்கள். அப்படி காண்பிப்பதினால் பிரயோஜனம் என்னவென்று சிலருக்கு சந்தேகம் வரலாம் அதற்கு பதில் கீழ் பார்க்கலாம்.

திருமண முறையில் பூமி மீது பிறந்த பெண் ஆண் எல்லோரும் தெய்வ சந்ததியின் மகள் மற்றும் மகன் அழைப்பின் மூலம் தெரிந்து கொண்டவர்கள், அந்த நாள் இருந்து ஞானநேத்திரத்தால் பார்வை கொண்டு இருப்போம் என்னும் பாஷிங்கத்தை கட்டியவர்கள், ஞான பார்வை

கொண்டு மாயாவின் பந்தம் அறுத்து விடுவேன் என்னும், மாயாவிடம் போராடும் சிப்பாயாக இருப்பேன் என்னும் வாளைப்பிடித்தவர்கள், முதல் தடவை மகாத்மாவினால் அட்சதையை போட்டுக் கொண்டு ஞான அக்னி ஏற்றிக் கொண்டவர்கள், அந்த ஞான அக்னி அணைந்து போகாமல் மனைவி கணவனினால் கணவன் மனைவினால் வளர்த்திக் கொள்வோம் என்னும் தலம்பரங்களை தலை மேல் போட்டுக்கொண்டு காட்டி அவர் இறுதிக்கு நாங்கள் சேருவது மோக்ஷம் என்ற சொல் நமக்கு தெரிவிக்கும்படி இறுதியாக நட்சத்திரத்தை பார்க்கின்றார்கள். இந்த விதமாக ஜீவன் தெய்வத்திலிருந்து தனித்தனியாக இருக்கிறான் என்னும் அவன் மறுபடியும் தெய்வத்தில் சேர்ந்து ஜென்மம் இல்லாமல் செய்து கொள்வதற்கு அனுசரிக்க வேண்டிய மார்க்கத்தை நடைமுறையில் எண்ணம் கொண்டு தெரிவிப்பதே திருமணத்தின் நடைமுறை அர்த்தம்.

## பந்திரி (பந்தல்)

ஜீவன் பஞ்சபூதங்களினால் தயாரான தேகத்தில் இருக்கும் போது இந்த விதானம் எல்லாம் அனுசரிக்க வேண்டும் என்னும் தெரிவிப்பதற்காக ஐந்து கால் கொண்ட பந்தலில் உள்ளே திருமணம் செய்வார்கள். இங்கு நான்கு கால் பந்தல் ஐந்து கால் பந்தல் எங்கே இருக்கிறது என்று சிலர் கேட்கலாம். அதற்கு பதில் என்னவென்றால்! பஞ்சபூதங்கள் என்றால் ஆகாசம், காற்று, அக்னி, நீர், பூமி. இவற்றின் அக்னி, நீர், பூமி கண்ணுக்குத் தெரியும்படி இருக்கும்போது காற்று தொடுதலால் தெரிகின்றது. ஆகாசம் மட்டும் தனித்துவமாக இருந்து மற்றதை விட தெரியாமல் இருக்கின்றது. அதனால் தெரிகின்ற நான்கு பந்தலின் கால்கள் நான்கு திசையில் புதைத்து அவற்றின் ஆதாரத்தினால் மேல் போடும் பந்தல் நடு பாகம் மட்டும் கோபுரம் போல் முனை மேல் இருக்கும் படி பூர்வம் நிர்மித்தார்கள். அப்போதும் பூமி மீது தாங்கி இருக்கின்ற கால்கள் நான்கு இருக்கும்போது ஐந்தாவது முனை மேல் காண்பித்தது போல் இருக்கும். பந்தல் நடுவில் மேல் இருக்கின்ற முனைக்கு ஆகாசம் என்னும், கீழ் முதல் பக்கம்

இருக்கின்ற வலது பக்கம் முனைக்கு காற்று என்னும், இடது பக்கம் முனைக்கு அக்னி என்னும், அப்படியே பின் இருப்பதற்கு நீர் பூமி என்னும் அடையாளமாக காற்று அக்னி ஒரு பக்கம் நீர் பூமி ஒரு பக்கம் நடுவில் ஆகாசம் என்பது போல் அர்த்தத்தில் பந்தலை தயார் செய்வார்கள். அப்படியே தயார் செய்த பந்தலில் சுற்று முற்றும் பார்க்கின்றவர்களுக்கு பாதி சந்திர வடிவம் தெரியும். இப்படிப்பட்ட பந்தல் இப்போது யாரும் போடவில்லை. தலம்பரங்கள் வரை பந்தல் கீழே எல்லா காரியங்கள் நடந்த பிறகு ஒரு அருந்ததி நட்சத்திரம் தரிசனத்திற்கு மட்டும் பந்தல் இருந்து வெளியில் வருவார்கள். அத்தோடு திருமணம் ஆனது போல் எண்ணம் என்றால் மோக்ஷம் அடைந்தது போல் ஆகும். மோக்ஷம் அடைந்தவர்களுக்கு மறுபடியும் ஜென்மம் இல்லை. மேலும் திருமண பந்தலில் இருந்து வந்த பிறகு மணமகன் மணமகள் பந்தலுக்கு உள்ளே போக மாட்டார்கள். அத்தோடு திருமண காரியம் எண்ணம் முழுமையாக முடிந்தது போல் ஆகும்.

பூர்வம் திருமணம் இந்துக்கள் சம்பிரதாயமாக நாடு முழுவதும் வியாபித்து இருந்தது. இந்துக்கள் என்றால் ஞானிகள் என்று அர்த்தம். பூர்வம் இது ஞானிகள் நாடானதினால் இந்து நாடு என்று பெயர் கொண்டது. காலம் கடந்து கொண்டிருக்கும்போது ஆலி பொட்டு தாலி பொட்டு ஆனது போல் அஞ்ஞானம் வளர்ந்து போய் இந்து நாடு ஹிந்து நாடானது. நாம் ஹிந்துக்களாக மாறினாலும், மற்ற சிலர்கள் வேறு மதத்திற்கு சேர்ந்தவர்களாக மாறினாலும் எல்லோரிலேயும் இந்து சம்பிரதாயங்கள் இப்போதும் சில சிறந்தது மீதி இருப்பது பார்த்தால் தர்மங்கள் இன்னும் இறுதி மூச்சு உடன் உயிரோடு இருக்கின்றதற்கு நிதர்சனம். இப்போதாவது தெய்வ ஞானம் தெரிந்துக் கொண்டு பலவீனமாக இருக்கின்ற தர்மங்களை ஞானம் எண்ணத்துடன் நடைமுறையை மறுபடியும் வரும் படி செய்யலாம். தர்மங்கள் எப்போதும் அழியாது. தர்மங்களுக்கு கிலானி (பலஹினம்) மட்டும் காலம் கடந்து கொண்டிருக்கும்போது ஏற்படும். அது மறுபடியும் புதுப்பிக்கப்படும்.

## திருமணத்திற்கு முகூர்த்தமா

திருமண காரியங்களுக்கு முகூர்த்தம் நிர்ணயிப்பது, முகூர்த்த நேரத்தில் திருமணம் செய்ய வேண்டும் என்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயம் தான். முகூர்த்தம் என்றால் என்னவென்று தெரியாமல் இருக்கும்போது புரோகிதர் நிர்ணயித்த நேரம் எல்லோரும் முகூர்த்தம் என்று சொல்லுவது நடக்கின்றது. முகூர்த்தம் என்றால் என்னவென்று தெரியாத மக்கள் ஏமாற்றப்படலாம் உங்களுக்காக அதிகமாக கஷ்டப்பட்டு நல்ல முகூர்த்தங்களை தேடினேன் என்று சொல்லும் புரோகிதர்கள் கூட சிலர் இருக்கின்றார்கள். திருமணம் செய்து கொள்ளுபவர் அவசரத்தை பொருத்து அதிகம் பணம் வாங்கிக் கொண்டு இல்லாத முகூர்த்தத்தை நிர்ணயிப்பவர்களும் கூட இருக்கின்றார்கள். சில புரோகிதர்கள் இந்த மாதத்தில் முகூர்த்தம் இல்லை என்று உண்மையை சொல்லினாலும், நீ கேட்கின்ற பணத்தை கொடுக்கிறேன் கஷ்டப்பட்டு வையுங்கள் என்று வேண்டுகின்ற மக்களும் கூட இருக்கின்றார்கள். நாங்கள் சொல்லிய நேரத்தில் முகூர்த்தங்களை வையுங்கள் என்று மிரட்டுபவர்களும் கூட இருக்கின்றார்கள். இல்லாத முகூர்த்தத்தை வைக்க முடியாமல் இடைஞ்சல் பட்டுக் கொண்டிருக்கின்ற சில புரோகிதர்கள் இருக்கும்போது, ஒரே நாளில் நான்கு நேரத்தில் நான்கு முகூர்த்தங்களை வைத்து எல்லா முகூர்த்தங்களுக்கு ஆஜராகி மந்திரங்களை படித்து பணத்தை வாங்கிக் கொண்ட புரோகிதர்கள் கூட இருக்கின்றார்கள். இவற்றை எல்லாவற்றையும் பார்த்தால் யோசனை செய்யும் எந்த மனிதனுக்காவதும் முகூர்த்தம் என்றால் என்னவென்று கேள்வி வராமல் இருக்காது.

அது மட்டுமல்லாமல் இந்து சம்பிரதாயங்களில் நமஸ்காரம் விஷயத்தில் மற்றொரு கட்டம் கூட இருக்கின்றது. அது என்னவென்றால்! மனிதன் தேகத்தில் நீச்சமானது கால், காலுக்கு போடும் செருப்பு கூட நீச்சமானது என்று நினைப்பார்கள். செருப்பு போட்ட கால்கள், செருப்பு போடாத கால்கள் வேறு நபர்களுக்கு தவறாக பட்டபோது, பட்டது எதிரில் இருக்கின்ற நபராக இருந்தாலும் அவனை சேர்ந்து இருக்கும் கடவுளுக்கு பட்டது போல் பூர்வம் அதன் போன்றே நினைப்பார்கள். அப்படி நினைப்பதினால் உடனே என்னுடையது தவறு என்று நினைத்து பட்ட நபரை கையால் தொட்டு தலை பக்கம் கையை அனுப்பி நமஸ்கரிப்பார்கள். எதிரில் இருந்த நபர் எப்படிப்பட்டவராக இருந்தாலும் கால் பட்ட உடனே நமஸ்கரிக்கும் முறையை பூர்வம் ஞானிகள் வைத்தார்கள். அப்படி செய்வதினால் தன்னுடைய தேகத்திலும் மட்டுமல்லாமல் எதிரில் இருக்கின்ற தேகத்திலும் கூட கடவுள் இருக்கிறார் என்னும், அந்த கடவுளுக்கு பெரிய பக்தி கொண்டு இருக்கிறேன் என்னும் தெரிவிப்பதற்காக பூர்வம் இதை செய்வார்கள். பூர்வம் இருந்த முறை இந்த நாள் ஆங்காங்கே இருக்கின்றது. பஸ்களில் அல்லது

ரயில்களிலும் எதிர் இருக்கின்ற மனிதனுக்கு தவறாக கால் பட்டால் கையால் அந்த நபரை தொட்டு கும்பிடுவதும் எப்போதாவது பார்த்துக் கொண்டே இருக்கிறோம். பூர்வம் பெரியோர்கள் எவ்வளவோ ஞானத்துடன் தெய்வ பக்தி இருக்கும்படி வைத்த சம்பிரதாயமே நமஸ்காரம்.

பூர்வம் தெய்வத்தின் மீது பணிவுடன் கீழ்படிதலாக இருக்கும் படி, தெய்வ ஞானம் எல்லோருக்கும் தெரியும்படி, யார் யாருக்கு நமஸ்காரம் செய்தாலும் அது கடவுளுக்கே சேரும் படி அர்த்தத்துடன் பெரியோர்கள் வைத்த நல்ல வேலையே நமஸ்காரம். இவ்வளவு பெரிய உணர்வுடன் இருக்கின்ற நமஸ்காரம் இந்த நாள் கடவுளுக்காக இருப்பதை மனிதர்களுக்காக நினைப்பது முழுமையான தவறு. நமஸ்காரத்திற்கு அருகதை பெற்றவர் ஒரு கடவுள் மட்டும் தான் வேறவர்களுக்கு அல்ல, அல்லாதது, பூர்வம் இருந்த ஞான சம்பிரதாயத்திற்கு அர்த்தம் தெரியாமல் போனதினால் முறைகளை பார்த்து யாருக்கு இஷ்டம் வரும்படி அவர் நினைக்க கூடாது. தற்போது நான் வைத்த நமஸ்காரம் உங்களுக்கு அல்ல உங்களில் உள்ள அல்லாஹ்வுக்கு (கடவுளுக்கு). கடவுளுக்கு பூஜை எண்ணத்துடன் நமஸ்காரம் வைப்பது தவறு எப்படி ஆகும். சலாம் பதில் சலாம் செய்வதில் சுபம் நடக்க வேண்டும் என்னும் ஆசீர்வதிக்கும்படி ஆகும் போது தெய்வம் எண்ணம், வேறவர்களுக்கு கடவுளைப் பற்றி தெரிவிக்கும் விதானம் இல்லை அல்லவா! அல்லாஹ் எல்லோரில் வியாபித்து இருக்கிறார் என்னும் அர்த்தத்துடன் நமஸ்தே என்று சொல்லுவது நன்றான விஷயம் தானே! நீங்களே சொல்லுங்கள்.

இந்துக்கள் ஞானத்தில் தெய்வத்திற்காக ஏற்படுத்திய நமஸ்காரம் இந்த நாளும் இருக்கின்றது. அதே சம்பிரதாயமே காலம் கடந்து கொண்டிருக்கும்போது, மதங்கள் தயாராகி பல வடிவங்களாக மாறிப்போனது. இந்துக்கள் ஹிந்துக்களாக முஸ்லிம்களாக, கிறிஸ்தவர்களாக மாறிப்போனதினால் அந்த நாள் இந்துக்களில் இருந்த அர்த்தம் இல்லாமல் போனது. ஹிந்துக்களில் ஆங்காங்கே இரண்டு கைகளால் நமஸ்காரம் மீதி இருந்தாலும் அந்த நாள் இருந்த இந்துக்கள் எண்ணம் இல்லை. அதனால் ஹிந்துக்களில் கூட அதர்மயுத்தமான ஒரு கை நமஸ்காரங்கள் ஆங்காங்கே தெரிகின்றது. ஆதியில் இருந்த இந்துக்கள் காலம் கடந்து கொண்டிருக்கும்போது

ஹிந்துக்களாக, முஸ்லிம்களாக, கிறிஸ்தவர்களாக மாறி போய் அவரில் நமஸ்காரங்கள் கூட வடிவமும் அர்த்தமும் மாறிப்போனது. ஆங்கில நாட்டில் சல்யூட்டாக, அரபு நாட்டில் சலாம்மாக, பாரத நாட்டில் நமஸ்தேவாக மாறிப்போனது. ஹிந்து, இஸ்லாம், கிறிஸ்தவர்கள் எல்லோரும் இந்து மதத்தில் பங்கு பெற்றதினால் நமஸ்காரத்தை யார் எப்படி அனுசரித்தாலும் அது கடவுளுக்காகவே இருக்க வேண்டும். இப்போது சொல்லுங்கள் நான் உங்களுக்கு வைத்த நமஸ்காரத்தில் ஏதாவது தவறு இருக்கிறதா?" என்று கேட்டோம்.

**இஸ்லாம் பெரியோர்கள்:-** "இந்த விதமாக கடவுள் மீது பக்தியுடன் கௌரவத்தால் வைப்பது எதுவும் தவறில்லை. உங்கள் வார்த்தையில் நமஸ்காரம் கடவுளுக்கே என்பது எங்களுக்கு சந்தோசம் தான் நீங்கள் சொல்லியது போல் எல்லோரும் அப்படி அல்லாமல் எதிர்பட்ட ஆபீசர்களுக்கு, தன்னுடைய தேவைக்கு வேலைக்கு வருபவனுக்கு, அவருடைய சுயநலத்திற்காக வைக்கின்றார்கள் அல்லவா! அதற்கு நீங்கள் என்ன சொல்கின்றீர்கள்" என்று கேட்டார்கள்.

**எங்களுடைய வார்த்தை:-** நான் முதலிலேயே சொல்லினேன் நமஸ்காரம் எல்லா ரகமான அர்த்தம் கெட்டுப் போய், அதனுடைய உண்மையான அர்த்தம் தெரியாமல் போனதினால் அதிலும் கூட சுயநலம் ஏற்பட்டது. அதனால் எந்த மதத்திற்கு சேர்ந்தவராக இருந்தாலும் கடவுள் மீது விசுவாசம் பக்தி இருக்கும் போது உண்மையான இந்து ஆகுவார்கள். அப்படி ஆகாமல் போனால் எவ்வளவோ புத்தியுடன் மனிதனுக்கு தெய்வம் ஞானம் ஏற்படுத்த வேண்டும் என்னும் வைத்த பெரியோர்கள் நடைமுறை எல்லாம் வீணாகும். இந்து சம்பிரதாயமான நமஸ்காரம் முறை இல்லாததாகும். இந்துக்கள் என்றால் ஞானிகள் என்னும், ஒரு மதத்திற்கு சேர்ந்தவர் அல்லவென்று, தெய்வ மார்க்கத்தில் இருக்கின்றவர்கள் யாராவதும் இந்துக்கள் என்று முதலில் இருந்து சொல்கின்றோம். மேலும் நீங்களும் கூட கடவுளின் குழந்தைகள் ஆனதினால் கடவுளுடைய ஞானத்தை பற்றி வேறவர்களுக்கு போதியுங்கள் இந்து சம்பிரதாயம் பிரகாரம் அர்த்தம் தெரிந்து கொண்டு வேறவர்களுக்கு நமஸ்காரம் வையுங்கள், வேறவர்கள் மீது கால் பட்டாலும் கடவுளுக்கு

பட்டதாக எண்ணம் கொண்டு நமஸ்கரியுங்கள். அப்படி செய்யுவதினால் மாய மார்க்கத்தை விட்டு தெய்வ மார்க்கத்தை அனுசரிப்பது போல் ஆகும். காலம் கடந்து கொண்டிருக்கும் போது பழுதடைந்து போன நமஸ்கார சம்பிரதாயம் தர்மத்தை உயர்த்துவது போல் ஆகும்.

## லாப சம்பிரதாயம்

ஒவ்வொரு மனிதனுக்கு, ஒவ்வொரு ஜீவ ராசிக்கு அர்ஷட்வர்க்கங்கள் என்று பெயர் கொண்ட குணங்கள் ஆறு இருக்கின்றது. ஜீவனுக்கு பகையாளி போன்றது குணங்கள் அதனால் அர்ஷட் என்று சொல்லினார்கள். ஆறு ஒரு குழுவாக சொல்லுவதினால் அவற்றை வர்க்கம் என்று கூட சொல்லினார்கள். எதிரி குணங்கள் ஆறு ஒரு வர்க்கமாக இருக்கின்றது என்றால் மற்றொரு வர்க்கம் கூட இருக்க வேண்டும். அப்படி இருக்கும் போது தான் வர்க்கம் என்ற பெயர் வரும். ஒரு வர்க்கத்திற்கு சேர்ந்த குணங்கள் பாவத்திற்கு காரணமான, மற்ற ஒரு வர்க்கம் புண்ணியத்திற்கு காரணமானது. புண்ணியத்திற்கு காரணமான குணங்கள் யாரும் எங்கும் சொல்லிக் கொள்ளவில்லை. மேலும் பாவத்தை சம்பாதிக்கும் குணங்கள் எதிரி வர்க்கத்தைப் பற்றி அதிகமாக சொல்லிக் கொள்ளுவது நடந்தது. அர்ஷட் வர்க்கத்தின் பெயர் பல பேருக்கு தெரியும் மேலும் நட்பு வர்க்கத்திற்கு சேர்ந்த பெயர்கள் யாருக்கும் தெரியாது. எங்கு அபாயம் இருக்கிறதோ அங்கு அந்த அபாயம் என்ற போர்டுகள் இருக்கும். அபாயம் இல்லாத இடத்தில் போர்டுகள் தேவையில்லை. அதன் போலவே எந்த குணங்களினால் அபாயம் இருக்கிறதோ அவற்றை பற்றி தெரிவிப்பதற்காக போர்டுகள் போன்ற நடைமுறைகள் நம் பெரியோர்கள் வைத்தார்கள். நல்ல குணங்களைப் பற்றி எங்கும் சொல்லவில்லை. கெட்ட குணங்களைப் பற்றி தெரிவிக்கும் நடைமுறையில் நமக்கு தெரிந்த ஒரு நடைமுறையை விவரித்துக் கொள்ளலாம்.

எதிரி குணங்களைப் பற்றி சம்பிரதாயமுறையாக வைத்த முறை பூர்வம் எல்லோருக்கும் தெரிந்திருக்கும்.

ஏதாவது தானியத்தை அளக்கும் போது, பொருளை எண்ணிக் கொள்ளும் போது, ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு, ஐந்து, ஆறு, ஏழு என்னும் சொல்ல வேண்டிய எண்ணிக்கை இருக்கும்போது அப்படி எப்போதும் எண்ண மாட்டார்கள். சம்பிரதாயமுறையாக கணக்கிடுவார்கள். முதலில் ஒன்று என்னும் ஆரம்பிக்காமல் லாபம் என்று ஆரம்பிப்பார்கள். லாபம் என்னும் சொல்லிய பிறகு இரண்டு மூன்று சொல்லி ஆறு வரை எண்ணிய பிறகு ஏழு என்று சொல்லாமல் ஆறோன் ஒன்று என்று சொல்வார்கள். பிறகு 8 என்னும் எண்ணுவது (கணக்கிடுவது) நடக்கின்றது. இந்த முறை பிரகாரம் எண்ணுவது பூர்வம் மட்டுமல்லாமல் இன்று நாள் கூட நடக்கின்றது. இந்த நாள் அளவு அளக்கின்ற சிலர்கள் பூர்வ நடைமுறை பிரகாரம் கணக்கிட்டு இருந்தாலும் பூர்வம் வைத்த எண்ணம் தெரியாது.

மனிதர்களில் ஆறு எதிரி குணங்களில் முதலாவது ஆசை என்ற குணங்கள் இருக்கின்றது. ஆசை எப்போதும் லாபத்தை வேண்டும். எல்லாவற்றையும் விட பெரியது, எல்லாவற்றையும் விட அதிகமாக மனிதனை துன்புறுத்துவது ஆசை என்ற குணம். அதனால் அது எல்லோருக்கும் தெரியும்படி எண்ணிக்கொண்ட போது எண்ணிக்கையில் முதலாவதானது காம குணத்தை லாபம் என்று பூர்வம் ஒன்றுக்கு பதிலாக சொல்லிக் கொண்டிருப்பார்கள். காமத்தில் ஆரம்பித்து பொறாமையால் முடிகின்ற குணங்கள் வர்க்கத்தை தனித்துவமாக அடையாளிக்கும்படி, கெட்ட குணங்கள் ஆறு தான் என்று தெரியும்படி ஆறுக்கு பிறகு ஏழு என்று சொல்லாமல் ஆறோன் ஒன்று என்று சொல்லுவார்கள். இந்த விதமாக எதிரிகள் வர்க்கங்களில் குணங்கள் எண்ணிக்கை இவ்வளவு தான் என்னும் தெரியும்படி, மற்றும் அதில் இருக்கின்ற முதலாவது குணம் வேறு பெயர் லாபம் என்னும் தெரியும்படி, முதலில் லாபம் என்னும் வரிசையாக ஆறுயிடம் நிறுத்தி இரண்டு தடவை ஆறுவை சொல்வார்கள். வரிசையாக ஆறு என்னும் சொல்லி பிறகு கூட ஆறோன் ஒன்று என்னும் சொல்வதினால் ஆறுவை இரண்டு தடவை சொல்லியது போலானது. அப்படி சொல்வதினால் முதலாவதான ஆசையைப் பற்றி இறுதியான பொறாமையைப் பற்றி ஞாபகம் செய்தது போலானது. மனிதனுக்கு எல்லா குணங்களையும் விட அதிகம் துன்புறுத்துவது இரண்டு குணங்கள் மட்டும்தான் இருக்கின்றது. அது முதலாவதான

ஆசை குணம் பிறகு ஆறாவதான பொறாமை குணம். இந்த இரண்டு குணங்களைப் பற்றி எல்லோருக்கும் தெரிய வேண்டிய தேவை இருக்கின்றது. அதனால் எண்ணிக்கையை எண்ணும்போது லாபம் என்று ஆரம்பித்து ஆறு பிறகு ஆறோன் ஒன்று சொல்வது நடக்கின்றது. பூர்வம் பெரியோர்கள் சொல்லிய சம்பிரதாயங்களில் ஆன்மீகம் உற்சாகமாக இருக்கும். இன்று நடைமுறையில் இருந்தாலும் அர்த்தங்கள் தெரியாமல் போனதினால் சம்பிரதாயங்களுக்கு மதிப்பு இல்லாமல் போனது. இப்போது இருந்து நாம் பூர்வம் இருந்த சம்பிரதாயம் பிரகாரம் கெட்ட குணங்களை தெரியும்படி முதலில் லாபம் என்று எண்ணை எண்ணும்போது சொல்லி இது நம்மில் இருக்கின்ற முதலாவது குணம் என்று வேறவர்களுக்கு தெரிவிக்க வேண்டும் என்று விரும்புகிறோம்.

## கட்டுவது பொட்டு வைக்கும் முறை

இந்து மதத்திலிருந்து பிரிந்து போனது ஹிந்து, கிறிஸ்டியன், இஸ்லாம் முதலியன மதங்கள் இருக்கின்றது. கிட்டதட்ட ஏழு கோடிகள் வருடங்கள் பூர்வமிலிருந்து இந்து மதம் இருக்கிறது. இப்போதும் இந்து மதம் இருந்தாலும் மாற்றம் அடைந்த பெயராக இருக்கின்றது. இந்து மதத்தில் இருந்து பிரிந்து போன மதங்கள் எல்லாவற்றிலும் இந்துத்துவம் இருக்கின்றது. மேலும் மதங்கள் பைத்தியம் பிடித்த மனிதர்கள் வெவ்வேறு மதங்கள் பெயர்கள் வைத்துக் கொண்டு அந்தந்த மதங்களுக்கு சேர்ந்தவர்கள் நாங்கள் என்று வாதிக்கின்றார்கள் தவிர அவர்கள் மதத்தில் தெய்வ ஞானம் இருக்கிறது என்னும் அதனால் அவர்களுடையது இந்து மதம் என்று தெரிந்து கொள்ளாமல் போகின்றார்கள். இறுதிக்கு இந்துக்கள் கூட அவர்கள் முதலில் இந்துக்கள் தான் என்று தெரிந்து கொள்ளாமல் போகின்றார்கள். இந்த நாள் பூமி மீது எத்தனை மதங்கள் இருக்கின்றதோ அவை எல்லாவற்றுக்கும் ஆதி மூலம் கொண்டது இந்து மதம். புதிய பெயர் வைத்துக் கொண்டதினால் அவர்கள் வேறு அல்ல. கடவுள் ஞானம் போதிக்கின்ற எந்த மதமாக இருந்தாலும் இந்து மதம்தான். இந்து என்றால் கடவுளுடைய ஞானம் என்று அர்த்தம். அந்த கணக்கு பிரகாரம் எல்லா மதங்கள்

வித்தியாசம் இல்லாமல் இந்து மதத்தில் பாகம் தான் என்று சொல்லலாம். உலகம் எல்லாவற்றுக்கும் கடவுள் ஒருவர்தான். அதன் போலவே உலகமெல்லாம் இந்து மதம் ஒன்றுதான் இருக்கின்றது. இருக்கின்ற ஒரு கடவுளை பல மதத்திற்குச் சேர்ந்தவர்கள் பல ரகமாக அழைக்கப்படுகின்றார்கள். அதன் போலவே அவர்களுடையது வேறு மதங்கள் என்று பிரமிக்கின்றார்கள். இறுதிக்கு எல்லோருடைய கம்யம் (முடிவு) ஒரே கடவுள் தான். ஏழு கோடி வருடங்கள் இருந்த இந்து மதம் பலவிதமாக மத வடிவம் அடைந்து வந்து தற்போது காலத்தில் இப்போது காலத்திற்கு 2000 வருடம் பூர்வத்திலிருந்து கிறிஸ்தவ மதமாக, 1400 வருடம் பூர்வத்திலிருந்து இஸ்லாம் மதமாக, இன்னும் பல மத வடிவமாக நின்று இருக்கின்றது. மாற்றம் அடைந்து போய்க் கொண்டிருக்கும்போது மீதி இருந்த இந்து மதம் சிறிது தன்னுடைய பெயரை இழந்து ஹிந்து மதமாக மாறிப்போனது. எதுவாக இருந்தாலும் எல்லா மதம் சாராம்சங்களில் இந்துத்துவம் மர்மமாக இருந்தாலும் அதனை உணர முடியாத மனிதர்கள் நான் ஹிந்து என்னுடைய மதம் வேறு என்னும், எங்களுடைய கடவுள் வேறு நினைத்துக் கொண்டிருக்கும் போது, அதன் போலவே சிலர்கள் நாங்கள் இஸ்லாம் மதத்திற்கு சேர்ந்தவர்கள் எங்களுடைய கடவுள் வேறு என்று நினைத்துக் கொண்டிருக்கின்றார்கள். மற்ற சிலர்கள் நாங்கள் கிறிஸ்தவர்கள் என்னும் எங்களுடைய மதம் கடவுள் வேறு என்று சொல்லிக் கொண்டிருக்கின்றார்கள். அது மட்டுமல்லாமல் நாங்கள் வேறு என்னும் தெரிவதற்கு, நாங்கள் பலான மதத்திற்கு சேர்ந்தவர்கள் என்று வேறவர்களுக்கு தெரிவதற்கு, அவரவர்கள் வாழ்க்கையில் மாற்றம் செய்து கொள்வது மட்டுமல்லாமல் உருவம் அலங்காரத்திலும் மாற்றங்கள் செய்து கொண்டார்கள்.

நாங்கள் பலான மதத்திற்கு சேர்ந்தவர்கள் என்னும் அடையாளம் காணுவது போல் முஸ்லிம்கள், ஹிந்துக்கள், கிறிஸ்தவர்கள் இருப்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயம் தான். அடையாளம் காணுவதற்கு அவர்களுடைய உருவம் என்று அவர்களும் கூட சொல்கின்றார்கள். பூர்வம் எல்லா மதத்திற்கும் ஆதாரமான இந்து மதத்திலும் கூட சில கட்டுவது பொட்டு அலங்காரங்கள் இருந்தது. இந்து மதத்தில் எந்த முறை இருந்தாலும் அது தெய்வ ஞானத்திற்கு

சம்பந்தமாக இருக்கும், அதற்காக அவற்றின் எல்லாவற்றுக்கும் அர்த்தம் இருந்தது. அர்த்தம் இருந்தாலும் முறை கொண்ட இந்து மதங்கள் சிறிது மாற்றமடைந்து ஹிந்து மதமாக மாறிய போதும் பழைய முறைகள் சிறிது காலம் இருந்தது. பிறகு எல்லாம் மாற்றம் அடைந்து விட்டது, மனிதர்களும் கூட இந்துக்களில் இருந்து முழுமையாக ஹிந்துக்களாக மாறிப் போனார்கள். பூர்வம் இருந்த இந்து சம்பிரதாயங்களில் அர்த்தம் கொண்ட கட்டுவது பொட்டு அலங்காரம் விஷயங்கள் பற்றி இப்போது தெரிந்து கொள்ளலாம்.

## தலக்கொண்டை

பூர்வம் ஸ்ரீ புருஷர்கள் (பெண்கள் ஆண்கள்) எல்லோரும் தலை முடியை வளர்த்துவார்கள். வளர்த்திய தலை முடியை தலையில் நடு பாகத்தில் கொண்டை போடுவார்கள். மனதின் ஆலோசனைக்கு சிரசு தான் ஸ்தானம். தலையில் ஆலோசனைகள் ரகரகமாக கணக்கில்லாமல் இருக்கின்றது. மேலும் ஆலோசனைகளை தலை முடியாக எண்ணிக்கொண்டு அவற்றினை முடிச்சு போடுவார்கள். தலை நடு பாகத்தில் பிரம்ம நாடி இருக்கின்றது. தலை மேல் இதனுடைய ஸ்தானம் “புனக” என்று சொல்வார்கள். நம்மில் இருக்கின்ற ஆலோசனைகள் சிதறி போகாமல் அடைத்து வைப்பதினால் மனதை நிறுத்தும்போது ஆத்மா தெரியும். ஆலோசனைகள் வந்து கொண்டிருக்கும்போது தேகத்தில் இருக்கின்ற ஆத்மா தெரியாது. பலவிதமான ஆலோசனைகள் தலைமுடியை எண்ணிக்கையாக ஒப்பிட்டு தலையில் இருக்கின்ற ஆலோசனைகள் வராமல் செய்யும் அர்த்தம் வரும் படி முடியை முடிச்சு போடுவார்கள். தலையில் இருக்கின்ற ஆலோசனை நின்றதினால் தலையில் மத்தியபாகத்தில் இருக்கின்ற ஆத்மா தெரியப்படும், மேலும் முடியை கூட தலைமத்திய பாகத்தில் முடிச்சு போடுவார்கள். பூர்வம் ஸ்ரீ புருஷர்கள் எல்லோரும் தலை மேல் முடிகளை குப்பாக (கொண்டையாக) கட்டுவார்கள். முடிகளை **“குப்பாக”** என்ற சொல் காலம் கடந்து கொண்டிருக்கும் போது சிறிதாக மாற்றமடைந்து **“கொப்பு”** ஆனது. ஞான

அர்த்தம் கொண்ட கொப்பு புருஷர்களுக்கு ஸ்ரீகளுக்கு இருந்தது. தலை மத்திய ஸ்தானம் ஆத்மா ஸ்தானம் என்னும், அந்த ஸ்தானத்திற்கு பூஜ்ஜிய எண்ணத்துடன் வாசனை கொண்ட வெள்ளை மல்லி பூவை சுற்றுவார்கள். பூர்வம் ஸ்ரீ புருஷர்கள் எல்லோரும் அவரவர்கள் கொப்பு மீது பூவை வைப்பார்கள். புருஷர்கள் பூக்களை வைக்கின்றார்கள் என்றால் விசித்திரமாக இருக்கின்றது அல்லவா! ஞான சின்னம் சந்திர பிம்பம் வெள்ளையாக இருக்கின்றது. அதன் போலவே வெள்ளையாக இருக்கின்ற மல்லிகை பூ கூட ஞான அர்த்தத்தை கொடுக்கின்றது. தன் தலை மீது தூய்மையான ஞானம் வர வேண்டும் என்னும் பூஜ்ஜிய எண்ணத்துடன் தூய்மையாக இருக்கின்றதற்கு மற்றொரு பெயரான வெள்ளை நிறம் மல்லி பூக்களையே வைப்பார்கள். இந்த விதமாக பூர்வம் இந்துக்கள் எவ்வளவோ பக்தி எண்ணத்துடன் தலை முடிச்சு தலை மத்திய பாகத்தில் வைத்துக் கொள்வார்கள்.

இன்று காலத்தில் புருஷர்களில் தலை மீது கொப்பு மாயமாகி போனது. ஸ்ரீகளிலும் கூட கிராப்புகள் ஜடைகள் வந்து கொப்பு போடுகின்றவர்கள் இல்லாமல் போனார்கள். எங்கேயாவது யாராவது கொப்பு போடுகின்றவர்கள் இருந்தால் அந்த கொப்பு தலை மத்தியில் இல்லாமல் தலை பின்பக்கம் இருக்கும். பெண்கள் எல்லோரும் பூக்கள் வைத்துக் கொள்வது இந்த நாளும் இருந்தாலும் அது கடவுளுக்கு அல்ல. வைக்கின்ற பூக்கள் கூட அலங்காரத்திற்கு கவர்ச்சிக்கு மட்டும் வைத்துக் கொண்டிருக்கின்றார்கள். பூர்வம் எவ்வளவோ ஞானத்துடன் கூடியிருந்த முறை சம்பிரதாயம் இன்று அர்த்தம் இல்லாமல் போனது. கொப்பு கட்டி பூ வைப்பது ஞான சம்பிரதாயம் என்ற வார்த்தை தெரியாமல் போனது. இப்போதும் நூறு ஆண்டுகளுக்கு முன்பு கூட ஆண்களுக்கு கொப்பு இருந்தது. பஞ்சாப் மாநிலத்தில் சிங் என்பவர்கள் இப்போதும் தலையின் மீது முடியை முடிச்சு போடுவது பார்த்தால் பூர்வம் இருந்த சம்பிரதாயம் அங்கு மட்டும் மீதி இருக்கின்றது என்று தெரிகின்றது. அங்கு கூட ஆண்கள் பூ வைக்கின்ற சம்பிரதாயம் இல்லை.

இப்போதாவது ஞானம் தெரிந்து கொண்டு சம்பிரதாயம் பிரகாரம் புருஷர்கள் கொப்பு போட்டு பூ வைத்துக் கொள்ளலாம். மேலும் மற்றவர்களுக்கு சம்பிர தாயத்தின் மதிப்பு தெரியாது. மேலும் பூ வைக்கின்றவனை ஆண்மை

அற்றவர்கள் என்று நினைக்கும் ஆபத்து கூட இருக்கின்றது. அதனால் முதலில் இந்து சம்பிரதாயங்களை பற்றி மக்களுக்கு தெரிவிக்க வேண்டிய பொறுப்பு இருக்கின்றது. எல்லோருக்கும் தெரிந்த போது நடைமுறைக்கு அர்த்தம் ஏற்படும். இல்லாமல் போனால் தவறாக நினைப்பது அச்சுறுத்தலாக இருக்கலாம். இந்து சம்பிரதாயங்களில் தலை மீது கொண்டைகள் போடுவதில் ஸ்ரீகள் முக்கியமான வேலையாக வைத்துக் கொள்ள வேண்டும் என்று விரும்புகிறோம். அப்படி ஆகாமல் போனால் கொண்டை சம்பிரதாயம் நம் தலை முறையோடு முடிந்து போகும்.

## மொட்டை அடித்துக்கொள்வது

பூர்வம் நாயி பிராமணர் என்பவர்கள் (மங்களவார்) கோயில் இடத்தில் மங்கள வாத்தியங்கள் வாசிப்பதற்கு இருப்பார்கள். அப்படியே யாராவது பக்தர்கள் மொட்டை அடித்துக் கொள்வதற்கு வேண்டுதல் இருந்தால் அந்த வேண்டுதலை செலுத்துவதற்கு தலை முடியை எடுத்து மொட்டை அடித்துக் கொள்வார்கள். மங்கள கத்தியை மொட்டை அடிப்பதற்கு மட்டுமே புழங்குவார்கள். தெய்வ சேவைக்காக பிராமணர்கள், நாயி பிராமணர்கள் தேவாலயங்கள் இடத்தில் தெரியப்படுவார்கள். கர்ப்ப கோயில் உள் வேலை பிராமணர்களுக்கு, கர்ப்ப கோயில் வெளியில் வேலை நாயி பிராமணர்களுக்கு இருந்தது. பிராமணர்கள் நாயி பிராமணர்கள் ஒரே தந்தைக்கு பிறந்தவர்களாக இருந்தாலும் தாய்கள் வெவ்வேறு. மேலும் கோயிலில் இருக்கின்ற வேலைகளை, திருமணத்தில் வேலைகளை, மரணித்தவனுக்கு கர்ம காண்டம் வேலையை இரண்டு பேரும் பிரித்துக் கொண்டு செய்வார்கள். நாயி என்றாலே நாயி என்று பல பாஷைகளில் அர்த்தம் இருக்கின்றது. புத்திசாலியான பிராமணர்கள் தன் மாற்றாந்தாய் மகன்களுக்கு நாயி பிராமணர்கள் என்று பெயர் வைத்தார்கள். அவர்களுடைய சகோதரர்களை சிறுமைப்படுத்துவதற்கு வைத்த பெயர் என்னும் தெரியாமல் மங்களவர்கள் இப்போதும் நாங்கள் நாயி பிராமணர்கள் என்று சொல்லிக் கொள்வது பார்த்துக் கொண்டே இருக்கிறோம். மங்கள என்றால் சுபம் என்னும்,

மங்களவர்கள் என்றால் சுபகரமானவர்கள் என்னும் அர்த்தம் இருக்கும்போது மங்களவர்கள் என்றால் ஏதோ குறைந்தது போல நாயி பிராமணர்கள் என்றால் ஏதோ சிறந்தவர்கள் என்னும் சொல்லிக் கொள்ளுவது, நாயி பிராமணர்கள் என்னும் போர்டு வைத்துக் கொள்வது பார்த்தால் விசித்திரமாக இருக்கிறது அல்லவா!

பூர்வம் ஸ்ரீரங்கன் தேவாலயங்களுக்கு ஒரு ஞானி போய், அங்கு ஞானம் பிரகாரம் தன்னுடைய நோக்கத்தை தெரிவிப்பதற்கு நான் ஆலோசனைகள் இல்லாமல் செய்து கொண்டேன் என்னும், தலை மீது ஆலோசனைகளுக்கு எண்ணிக்கை அடையாளமாக இருக்கின்ற முடிகளை முழுமையாக இல்லாமல் செய்து கொண்டு, முடிகள் இல்லாத மொட்டையை பிரதிமை முன்பு காண்பித்துக் கொள்ள வேண்டும் என்று நினைத்துக் கொண்டார். அது ஒரு சுபகரமான, மங்களகரமான வேலையாக இருப்பதினால் புனிதமான பிராமணர்கள் அந்த வேலையை செய்து கொள்ள வேண்டும் என்னும் கோயில் வெளி வேலைகளை பிரித்துக்கொண்ட பிராமணர்கள் பார்த்து தன்னுடைய நோக்கத்தை தெரிவித்தார். தேவாலயங்களிடம் கடவுள் சேவை செய்யும் வெளியில் இருக்கின்ற பிராமணர்கள் அந்த வேலைக்கு ஒப்புக்கொண்டு ஒரு சானை கொண்ட கத்தியால் தலை மேல் இருக்கின்ற முடிகளை எடுத்துவிட்டார்கள். முதலில் இதன் போன்ற தேவாலயங்களில் ஆரம்பித்த மொட்டை அடிக்கின்ற வேலைகளை இன்று கடைவீதிகளில் கடைகளாக மாறியது. தெய்வ சேவை வடிவத்தில் ஆரம்பித்த இந்த வேலை இன்று அவர்களுக்கு வாழ்வுக்கு ஆதாரமானது. யோகம் சம்பாதித்த ஞானி தன்னுடைய ஞானத்தை சம்பிரதாய நடைமுறையாக, ஆச்சரணை முறையாக தெரிவிப்பதற்கு தலை மேல் இருக்கின்ற முடிகளை எடுத்து விடுவார்கள். ஆத்மா ஞானம் தெரிவிக்கும் சுபகரமான அந்த வேலையை செய்ததற்கு தலைமுடி அகற்றிய பிராமணர்களை மங்கலம் செய்தவர்கள் ஆனதினால் மங்களவார் என்று கொடுத்த தலைப்பு இன்றும் இருந்தாலும் அது ஏதோ கெட்டதாக, நாயி பிராமணர்கள் என்று சொல்வதில் ஏதோ பெரியதாக நினைக்கின்றார்கள்.

அந்த நாள் அதன் போல ஆரம்பித்த தலை முடியை அகற்றி காண்பிக்கும் சம்பிரதாயம் இந்த நாளும்

திருப்பதியில் எப்போதும் நடந்து கொண்டே இருக்கின்றது. மேலும் அந்த நாளில் இருந்த அர்த்தம் சிறிதளவு கூட இல்லை. கடவுளுக்கு ஏதோ நம் முடிகளால் வேலை இருக்கும்படி எனக்கு இந்த கோரிக்கையை நிறைவேற்று உனக்கு தலை முடியை கொடுக்கிறேன் என்று வேண்டுகின்றார்கள். ஞான சம்பிரதாயமான தலை முடிகளை, அதன் போலவே ஆலோசனைகள் இல்லாமல் செய்தேன் என்று தெரிவிப்பதற்கு மொட்டை தலையை காண்பிப்பதில் அர்த்தம் இல்லாமல் போனது. கோயில் இடத்தில் மொட்டை அடித்துக் கொள்வதற்கு பூர்வம் போலவே இந்த முறை தலைமுடிகளை வளர்த்தி மங்கலவர்களிடம் வெட்டிக் கொள்வது இன்றும் இருந்தாலும், முடிகளை வளர்ப்பதில் அர்த்தம் இல்லை, மொட்டை அடித்துக் கொள்வதிலும் அர்த்தம் இல்லை. பூர்வம் இந்த முறை இருந்தது என்னும் சொல்வதற்கு இன்றும் கோயில்களில் தலைமுடிகளை சமர்ப்பிப்பது இருப்பது சந்தோஷமான விஷயம். மொட்டை அடித்துக் கொள்வது எவ்வளவோ ஞான அர்த்தம் கொண்ட சம்பிரதாயம் அர்த்தமில்லாமல் போவது மட்டுமல்லாமல் அதனை அமல் செய்த பிராமணர்கள் இறுதிக்கு நாயி பிராமணர்கள் என்ற பெயர் சொல்லிக் கொண்டு சுபகரமான மங்களவார் என்று சொல்லிக் கொள்ளாமல் போவது கவலைப்பட வேண்டிய விஷயம்.

## மூன்று விபூதி ரேகைகள்

பூர்வம் பரமாத்மா ஞானம் தெரிவிக்கும் வேலைகளை சம்பிரதாயமாக எண்ணிக் கொண்டு அனுசரிப்பதினால் புதியதாக பிறந்து வளர்ந்தவர்களுக்காக பரம்பரையாக ஞானத்தை தெரிவிக்க வேண்டும் என்று அந்த நாளில் இருந்த பெரியோர்கள் லட்சியம். அந்த முறையில் நெற்றி மேல் மூன்று விபூதி ரேகைகளை வைத்தார்கள். மூன்று வெள்ளை ரேகைகள் வைப்பது மட்டுமல்லாமல் அவற்றில் இருக்கின்ற நடுவில் உள்ள ரேகைக்கு செந்தூரத்தால் பொட்டு வைப்பார்கள். அப்படி நடுவில் இருக்கின்ற ரேகைக்கு செந்தூரம் பொட்டு வைப்பதினால் மூன்று ரேகைகளில் நடுவில் இருக்கின்ற ரேகைக்கு தனித்துவம் ஏற்பட்டது.

இதெல்லாம் செய்வதில் ஏதோ ஒரு நோக்கம் இருக்கும் அல்லவா! அந்த நாள் இருந்த அவர்களுடைய நோக்கம் தெரிந்து கொள்ளலாம்.

மனிதனுக்கு முக்கியமான தேக பாகம் தலை முகம். யாரையாவது அடையாளிக்க வேண்டுமென்றால் அவர்களுடைய முகத்தை பார்த்து அடையாளம் காணலாம். யாருடைய மனோ எண்ணங்கள் தெரிந்து கொள்ள வேண்டும் என்றால் முகத்தைப் பார்த்து தெரிந்து கொள்ளலாம். முகம் எல்லோருக்கும் ஒரு அடையாளம் கார்டு போன்றது. அதனால் யாரை அடையாளிக்க வேண்டும் என்றால் முகத்தை பார்க்க வேண்டியது தான். வெளி நபர் அடையாளத்திற்கு, உள் ஆளுமை மனோ எண்ணம் அடையாளத்திற்கு முகம் முக்கியமான உருவம். அதனால் பூர்வம் பெரியோர்கள் முகம் மீது மிக முக்கியமான கடவுளுடைய விஷயத்தை ஒரு அடையாளமாக தெரிவித்தார்கள். முகத்தின் மீது அடையாளமாக வைத்து தெரிவித்த சின்னமே **மூன்று விபூதி ரேகைகள்.** முகத்தின் முதல் பாகத்தில் எல்லோருக்கும் சிறிது இடம் இருக்கும். மூக்குக்கு மேல் பாகத்தில் இருப்பதினால் மூளைக்கு சமமான பாகத்தில் நெற்றி பாகம் இருக்கின்றது. சிரசு தெய்வ நிலையம் மற்றும் மாயா நிலையம். நம் தலையில் கடவுள் இருக்கிறார், மாயாவும் இருக்கிறது. மாயாவுக்கு இன்னொரு உருவம் குணங்கள். மாயா குணங்கள் உருவத்தில் இருக்கின்றது. அதனால் மாயாவின் முடிவில்லாத விகாரமான தலைமேல் இருக்கின்ற எண்ணற்ற முடிகளை அடையாளமாக சொல்லிக் கொண்டோம். அவற்றை முடிச்சு போடுவதோ, வெட்டுவதோ இல்லாமல் மொட்டை செய்து கொள்ளுவதே, மாயாவை ஜெயிக்கும் அடையாளம் என்று தெரிந்து கொண்டோம். மனிதன் மாயாவிலிருந்து வெளிப்பட்டால் தெரியப்படுவது கடவுள். அதனால் முதலில் மாயாவுக்கு அடையாளமாக கணக்கில்லாத முடிகளை தலை மேல் இருக்கும் படி செய்து, கீழ் நெற்றி பாகத்தை கடவுள் தயார் செய்தார். தலை மேல் பலவிதமான பிரிந்த வடிவத்தில் இருந்த மாயாவை ஜெயித்தால் பிறகு கடவுள் இந்த விதமாக இருக்கிறார் என்னும் தெரிவார் என்பதற்கு அடையாளமாக தெய்வ ஸ்தனமான நெற்றி பாகத்தில் கடவுளுடைய விவரம் தெரிவிப்பதற்காக மூன்று விபூதி ரேகைகளை வைத்தார்கள்.

கடவுள் மாசு இல்லாத தூய்மையானவர் என்று தெரிவிப்பதற்கு, சம்பூர்ண ஞானம் தெரிந்தவர் என்று தெரிவிப்பதற்கு தூய்மையான வெள்ளை நிறத்தை எண்ணிக்கொண்டு வெள்ளை ரேகைகளை நெற்றி மேல் வைத்தார்கள். மேல் மாயா கீழ் கடவுள் இருக்கும்படி கோயில் பிரதிமை மேல் பாகத்தில் மாயாவின் அடையாளமாக விக்ருதி உருவத்தை வைத்திருப்பது நாம் பார்த்தே இருப்போம். அதன் போலவே நம் தலையில் கூட மாயா மேல் கீழ் கடவுள் இருக்கும்படி அர்த்தத்துடன் மேல் எண்ணற்ற முடிகள் கீழ் நெற்றி பாகம் இருக்கின்றது. அதன் போல மூன்று ரேகைகளை எதற்கு வைத்தார் என்று சந்தேகம் சிலருக்கு வரலாம். அதற்கு பதில் என்னவென்றால்! கடவுள் ஒவ்வொரு தேகத்தில் மூன்று விதமாக இருக்கிறார். **ஒன்று ஜீவாத்மா, இரண்டாவது ஆத்மா, மூன்றாவது பரமாத்மா.** மூன்று விதமாக இருக்கின்ற கடவுளை மூன்று விபூதி ரேகை அடையாளம் கொண்டு முகத்தின் மேல் வைத்தார்கள். மேல் இருக்கின்ற ரேகை பரமாத்மா, நடுவில் இருக்கின்ற ரேகை ஆத்மா, கீழ் இருக்கின்ற ரேகை ஜீவாத்மா என்று அந்த நாள் இருந்த பெரியோர்களுடைய எண்ணம். மூன்று ரேகையில் கீழ் இருக்கின்ற ரேகை ஜீவாத்மா பரமாத்மாவின் அம்சமாக இருந்தாலும் கர்மத்தால் கட்டப்பட்டவன். ஜீவனாக இருக்கின்றவன் யாராவதும் முதல் ரேகை அடையாளமான பரமாத்மா கர்மம் இருக்கும் வரை தெரியப்பட மாட்டார். சஜீவமாக பூமி மீது இருக்கும் வரை யாரும் தெரிந்து கொள்ள முடியாது. பரமாத்மாவை தெரிந்து கொள்வதற்கு கர்மம் இல்லாமல் போக வேண்டும். கர்மங்கள் இல்லாமல் செய்து கொள்வதற்கு ஆராதிக்க வேண்டியது, தெரிய வேண்டியது இரண்டாவது ஆத்மாவே. ஆத்மா ஞானத்தை தெரிந்து கொள்வதால் ஞான அக்னி ஏற்பட்டு கர்மத்தை எரித்து விடும். கர்மம் இல்லாமல் போகும்போது பரமாத்மாவை சேரலாம். அதனால் நாம் தெரிந்து கொள்ள வேண்டியது இரண்டாவது ஆத்மாவை என்னும் நெற்றி மேல் இரண்டாவது ரேகையை செந்தூரத்தால் பொட்டு வைத்து அடையாளித்தார்கள். நெற்றி மேல் விபூதி ரேகை வைத்த பூர்வம் இருந்த பெரியோர்கள் இரண்டாவது ரேகையின் மேல் செந்தூரத்தால் பொட்டு வைத்துக் கொண்டு நாம் தெரிந்து ஆராதனை செய்ய வேண்டியது இதுதான் என்று தெரிவிப்பார்கள்.

இந்து சம்பிரதாயமான விபூதி ரேகைகளை இன்றும் வைத்துக் கொண்டிருப்பவர்களும் கூட இருக்கின்றார்கள். விபூதி வைக்கின்றவர்கள் இருக்கும் போதும் தெரியும்படி மூன்று ரேகைகளை வைத்துக் கொள்ளாமல் நெற்றியெல்லாம் விபூதிகளை பூசிக் கொண்டிருக்கின்றார்கள். எப்போதாவது மூன்று ரேகைகளை தனித்தனியாக தெரியும் படி வைக்கின்றவர்கள் இருந்தாலும் அவர் நடுவில் இருக்கின்ற ரேகைக்கு செந்தூரம் பொட்டு வைப்பது இல்லை. மூன்று ரேகைகளை விட்டு கீழ் பொட்டு வைக்கின்றார்கள். விபூதியை மூன்று ரேகைகளாக மட்டுமல்லாமல் கலந்து வைப்பது, ரேகைகள் இருந்தாலும் நடுவில் இருக்கின்ற ரேகைகளை அடையாளிக்காமல் போவது சம்பிரதாயம் எதிர்ப்பாகும். சரியான முறை இல்லாமல் போவதற்கு காரணம் விபூதி ரேகையின் அர்த்தம் தெரியாமல் போவது தான். விபூதி ரேகை அலங்காரமான சம்பிரதாயம் என்னும் அதனுடைய அர்த்தம் இதன் போன்று இருக்கின்றது என்னும் தெரியாமல் போனதினால் விபூதி பூசுவது வேறவர்களுக்கு வீணானதாக தெரிகின்றது. இந்த காலத்தில் விபூதி பூசுவது சுவாமிகளுக்கு மட்டும் நிரந்தரமாகிப் போனது. சுவாமிகள் கூட விபூதி பூசுவதை சம்பிரதாய முறையாக வைப்பதில்லை. சிலர்கள் விபூதிகள் வைத்துக் கொண்டிருந்தாலும் ரேகைகள் இருக்காது, ரேகைகள் இருந்தாலும் நடுவில் இருக்கின்ற ரேகைக்கு பொட்டு இருக்காது. இதன் போல சிறிது காலம் நடந்து கொண்டிருக்கும்போது இறுதிக்கு விபூதி வைக்கின்ற சம்பிரதாயமே இல்லாமல் போகும் ஆபத்து இருக்கிறது.

## மூக்குத்திகள்

தலை மீது கொண்டை முடிச்சு, நெற்றி மீது விபூதி ரேகைகள், மூக்குகளுக்கு மூக்குத்தி போடுவது முகத்தின் மீது மூன்று முக்கியமான சம்பிரதாயமாக பூர்வம் இருந்தது. இந்துக்களில் முகத்தின் மீது இருக்கின்ற மூன்று ஆச்சரணையில் இரண்டை புருஷர்கள், இரண்டை ஸ்ரீகள் சம்பிரதாயம் முறையாக அனுசரித்துக் கொண்டிருந்தார்கள். தலை கொண்டை, விபூதி ரேகைகள் புருஷர்கள் அனுசரித்துக் கொண்டிருக்கும் போது, தலை மீது கொண்டை

மூக்குத்திகள் போடும் முறை ஸ்ரீகளுக்கு இருந்தது. ஸ்ரீகள் புருவம் மத்திய ஸ்தானத்தில் மூக்கு மேல் கொனை மீது குங்கும பொட்டு வைப்பார்கள். புருவங்கள் மத்திய பாகத்தில் ஆத்மா நிவாசமாக இருக்கின்றது என்னும், ஆத்மாவை பூஜை செய்கின்றோம் என்ற நோக்கத்தில் குங்கும பொட்டு வைப்பார்கள். ஆண்கள் கூட விபூதி ரேகைகளில் ஆத்மாவை அடையாளித்து செந்தூரப்பொட்டு வைப்பார்கள். ஆண்கள் செந்தூரத்தால் ஆத்மாவை, பெண்கள் குங்குமத்தால் ஆத்மா ஸ்தானத்தை பூஜை எண்ணத்துடன் அடையாளிப்பார்கள். பெண்களுக்கு விபூதி வைப்பது இல்லாமல் இருந்தது. ஆண்களுக்கு மூக்குத்திகள் போடுவது இல்லாமல் இருந்தது.

பெண்களுக்கு முக்கிய சம்பிரதாயமான மூக்குத்திகள் போடுவது இன்று இதுவரை சிறிது மீதி இருக்கின்றது. இருந்தாலும் மூக்குத்தி போடும் சம்பிரதாயம் அர்த்தம் தெரியாது. பூர்வம் பெண்களில் மூக்குத்தி சம்பிரதாயம் என்னவென்று தெரிந்து கொள்ளலாம். நம் தேகத்தில் கிட்டதட்ட 31/2 லட்சம் நாடிகள் இருக்கின்றது, அவற்றில் ஆத்மா சைதன்ய சக்தி பாய்ந்து தேகத்தில் அனுஅனுவில் அசையவைத்து வேலை செய்ய வைக்கின்றது. லட்சம் நாடிகளில் பாய்ந்து கொண்டிருந்த ஆத்மா சைதன்ய சக்தி ஒரே மையத்திலிருந்து வருகின்றது. அந்த மையம் பிரம்ம நாடியில் இருக்கின்றது. இதனைப் பொறுத்து ஆத்மா பிரம்ம நாடியில் நிவாசித்துக் கொண்டிருக்கின்றது என்று தெரிகின்றது. பிரம்ம நாடியில் இருந்து ஆத்மா முதலில் இரண்டு நரம்புகளினால் தேகத்தில் அனைத்து இடத்திலும் வியாபித்து கொண்டிருக்கின்றது. முதல் ஆத்மா நுழைகின்ற துவாரங்களான இரண்டு நாடிகளை தெரிவிப்பது **“மூக்குத்தி போடும் சம்பிரதாயம்”**. தேகத்தில் ஜென்மம் ஆரம்பமாகும் போது பிரம்ம நாடியிலிருந்து ஆத்மா முதலில் வலது இடதாக இருக்கின்ற இரண்டு நாடிகளில் ஒரே தடவையாக பிரவேசிக்கிறது. வலது பக்கம் இருக்கின்ற நாடியை சூரிய நாடி என்னும், இடது பக்கம் இருக்கின்ற நாடியை சந்திர நாடி என்று சொல்கின்றோம். நடுவில் உள்ள பிரம்ம நாடியை சூஷ்மாங்க நாடி என்னும் வலது பக்கம் இருக்கின்ற சூரிய நாடியை இட நாடி என்னும், இடது பக்கம் இருக்கின்ற சந்திரநாடியை பிங்கள நாடி என்று கூட சொல்கின்றோம்.

இந்த விதமாக நம் தேகத்தில் ஆத்மா வியாபித்திருக்கின்றது என்னும் தெரிவிக்கும் சம்பிரதாயமாக மூக்குத்திகள் போடும் முறை இருந்தது. ஸ்ரீ மூக்கு துவாரத்தில் வலது மூக்குத்திக்கு சூரிய பிம்பத்தை போல் உருண்டை வடிவமாக மூக்குத்தி இருந்தது. அதன் போலவே இடது மூக்குத்திக்கு சந்திர பிம்பம் போலவே பாதி சந்திர வடிவம் கொண்ட மூக்குத்திகள் வைப்பார்கள். பூர்வம் மூக்குத்திகள் இருக்கிறது என்றால் அது சூரிய சந்திர வடிவம் தவிர வேறு விதமாக இருப்பது அல்ல. இந்த காலத்தில் அவற்றின் வடிவம் முழுமையாக மாறி போய் ரகரகமான மூக்குத்திகள் தயாரானது. பூர்வம் மூக்குத்திகள் இருந்ததற்கு என்று ஆதாரமாக ஆங்காங்கே வடிவம் மாறிய மூக்குத்திகள் இருக்கின்றது. பூர்வமும் சூரிய சந்திர வடிவம் கொண்ட மூக்குத்திகளே மட்டுமல்லாமல் பிரம்ம நாடியை தெரிவிக்கும் இரண்டு துவாரத்திற்கு நடுவில் மூக்கு முனை பாகத்தில் “புல்லாகு” ஒரு வளையம் போன்ற தங்கம் கொக்கியை மாட்டி அதற்கு ஒரு முத்து தொங்கவிடுவார்கள். இரண்டு துவாரம் நடுவில் வளையம் போன்றதை பிரம்ம நாடி என்று பூர்வம் அடையாளமாக வைத்தார்கள். பிரம்ம நாடியில் தூய்மையான ஆத்மா இருக்கின்றதால் ஆத்மாவை வெள்ளை முத்து போல் காண்பித்து நடுவில் தொங்க விட்டார்கள். இந்த அலங்காரத்தால் சூரிய சந்திர நாடிகள் மேலும் அவற்றின் நடுவில் இருக்கின்ற பிரம்ம நாடி தெரியும். அந்த விதமாக தெரிவதற்கு மூக்குத்தி போடும் முறை இருந்தது. இப்போதும் பரதநாட்டியம் செய்பவர்கள் அலங்காரத்தில் மூக்குத்திகள் இரண்டு வேறு வடிவத்தில் இருந்தாலும் நடுவில் இருக்கின்ற பிரம்ம நாடி அடையாளம் கொண்ட முத்து நடைமுறைப் பிரகாரம் இருக்கின்றது. எவ்வளவோ அர்த்தம் கொண்ட மூக்குத்திகள் மற்றும் புல்லாக்கு இந்து சம்பிரதாயங்களில் முக்கியமான அலங்காரம் முறை என்று தெரிந்து கொள்ள வேண்டும். இப்போது இருந்தாவது நம் வீடுகளில் ஸ்ரீகளினால் சூரிய சந்திர மூக்குத்திகள் வைத்து சம்பிரதாயத்தை காப்பாற்றிக் கொள்ளலாம்.

# வேட்டி கட்டுதல் சேலை கட்டுதல்

ஆண்கள் இடுப்பு சுற்றி கட்டிக் கொள்ளும் வேட்டியிலும், பெண்கள் கட்டிய சேலையிலும் கூட ஞானம் முறையை பூர்வம் பெரியோர்கள் வைத்தார்கள். இந்த காலத்தில் டவுசர்கள் வந்து ஆண்களுக்கு வேட்டி கட்டுவது இல்லாமல் போனது. அதன் போலவே பஞ்சாபி டிரஸ் வந்து பெண்களுக்கு சேலை கட்டுவது இல்லாமல் போனது. சிறிது காலத்திற்கு வேட்டி என்றால் என்ன ஆண்களுக்கு, சேலை என்றால் என்ன பெண்களுக்கு தெரியாமல் போகும் காலம் வரும். இப்போதும் ஆங்காங்கே வேட்டி கட்டும் ஆண்கள், சேலை கட்டும் ஸ்ரீகள் இருக்கிறார்கள். வேட்டி சேலை கட்டும் மக்கள் எங்கேயாவது இருந்தாலும் அவற்றில் உள்ள அர்த்தம் தெரியாது என்று சொல்லலாம். பூர்வம் இருந்த இப்போது இல்லாத வேட்டி கட்டும், சேலை கட்டும் முறை என்னவென்று தெரிந்து கொள்ளலாம்.

ஆண்கள் வேட்டி கட்டும்போது வயிறு முன்பு கொசுவம் வைத்து கட்டுவார்கள். கொசுவம் என்றால் வேட்டியை கட்டுவது. வேட்டியை இடுப்பு சுற்று கட்டியபோது, மீதி வேட்டியை ஏழு மடிப்புகளாக வைத்து வயிற்று முன்னால் சொருகுவார்கள். அதன் போலவே பெண்கள் சிறிது சேலையை ஏழு மடிப்பு கொசுவம் வைத்து இடுப்பு பின்னால் சொருகுவார்கள். பெண்கள் பின்னால் ஆண்கள் முன்னால் கொசுவம் சொருகுவது இந்த நாளும் கர்நாடகா பகுதிகளில் மீதி இருக்கின்றது. சில சம்பிரதாய பிராமண குடும்பகளிலும் கூட இருக்கின்றது. கர்நாடகா கிராமம் பகுதிகளில் இப்போதும் பெண்கள் ஆண்கள் கொசுவம் வைத்து கட்டுவது இருக்கின்றது. அங்கு முறை சிறிது மீதி இருந்தாலும் ஏழு மடிப்பு முறை பற்றி அங்குள்ளவருக்கு தெரியாது. ஏழு மடிப்புகள் வைக்காமல் ஏறக்குறைவாக வைத்துக் கொள்கின்றார்கள்.

நம் தேகத்தை நடத்தி அசைய வைத்த ஆத்மா ஏழு மையத்தில் வியாபித்து இருக்கிறது என்னும், ஏழு மையத்தால் வரும் சக்தியினால் நம் தேகத்தில் சுவாசை ஆடுகின்றது என்று தெரிவதற்காக தேகத்திற்கு சுற்றிய துணியை ஏழு மடிப்புகள் வைப்பது நடக்கின்றது. ஒவ்வொரு நாடி மையத்தால் சிறிது நேரம் தேகத்தில் இருக்கின்ற

சுவாசையை ஆத்மா நடத்துகின்றது. ஒரு மையத்தின் சுவாசையின் ஆரம்பத்தை இறுதியை ஒரு மடிப்பாக கணக்கிட்டு, நாளுக்கு ஏழு மையங்களினால் ஆடுகின்ற சுவாசைகளினால் தேகம் வாழ்கின்றது மேலும் தேகத்திற்கு சுற்றுகின்ற துணியை ஏழு மடிப்புகள் வைத்து ஏழு நாடி மையம் எல்லோருக்கும் தெரியும்படி செய்தார்கள். பூர்வம் ஆண்கள் வேட்டியை, பெண்கள் சேலையைக் கட்டி கொண்டு அவர்களுடைய வஸ்திரங்களை ஏழு மடிப்புகள் அர்த்தத்தால் வைத்துக் கொள்வார்கள். அப்படி செய்வதினால் இந்த தேகம் ஆத்மாவின் ஏழு நாடி மையங்களினால் வாழ்கின்றது என்று ஞாபகம் செய்து கொண்டிருப்பார்கள். பூர்வம் ஞானம் தெரிந்த முறைகளை பெரியோர்கள் நிர்ணயித்து வைத்தார்கள். அவற்றை அனுசரித்து ஞானத்தை அபிவிருத்தி செய்து கொள்பவர்கள் பூர்வம் இருந்தார்கள். காலம் கடந்து கொண்டிருக்கும்போது அர்த்தம் இல்லாமல் போனாலும் இப்போது நடைமுறைகள் சில பகுதிகளில் மட்டும் மீதி இருக்கின்றது. அர்த்தமற்ற முறைகள் சுவாசை நின்று போன தேகம் போன்றது. சிறிது வரை கட்டும் பொட்டு (ஞானமுறையான) சம்பிரதாயங்கள் நாம் அனுசரித்து, அவற்றுக்கு உயிரைக் கொடுத்து வேறவர்கள் அனுசரிக்கும் படி செய்வோம்.

இந்து சம்பிரதாயங்களில் மனிதன் தன் தேகத்திற்கு வைத்துக்கொண்ட நடைமுறைகளில் சிலது தெரிந்து கொள்ள வேண்டியது இருக்கும். அப்படிப்பட்டவை எத்தனையோ முறைகள் அர்த்தங்கள் எங்கள் ரசனையில் **"தேவாலய ரகசியங்கள்"** இந்த புத்தகத்தில் இருக்கின்றது.
ஜிக்னாசிகள் (ஆர்வமுள்ளவர்கள்) தேவாலய ரகசியங்களை படித்து தெரிந்து கொள்ள வேண்டியதாக வேண்டிக் கொள்கின்றோம்.

## சவ யாத்திரை (இறுதி ஊர்வலம்)

உலகத்தில் ஒவ்வொரு ஜீவிகள் நிர்ணயித்தபடி வாயு (ஆய்வு) பிரகாரம் ஜீவயாத்திரை நீட்டித்து மரணிப்பது சகஜம் தான். இந்த ஜீவயாத்திரை நிர்ணயிக்கப்பட்ட வாயு பிரகாரம்

ஒரு தேகத்தில் நடக்கின்றது. தேகம் என்னும் வாகனத்தில் நிர்ணயிக்கப்பட்ட வாயு அளவு பிரகாரம் பயணித்து, எங்கு வாயுவின் அளவு முடிகின்றதோ அங்கு தேகத்திலிருந்து ஜீவன் இறங்கி போக வேண்டியது இருக்கும். அதனை மரணம் என்று சொல்கின்றோம். இது ஒவ்வொரு ஜீவிகளுக்கு நடக்கின்ற விஷயம் தான்.

நாம் ஒரு ஊருக்கு புறப்பட்டு செல்லும்போது அந்த ஊர் எவ்வளவு தூரம் இருக்கின்றதோ, நாம் எங்கு இறங்க வேண்டுமோ, எல்லாம் ஞாபகம் வைத்துக் கொண்டு பயணம் செய்து கொண்டிருப்போம். கம்யம் (முடிவு) அதிக தூரமாக இருந்தால் அதற்கு தகுந்த செலவுக்கு எவ்வளவு பணம் தேவையோ அவ்வளவு பணம் பக்கத்தில் வைத்துக் கொள்வோம். அதன் போலவே அந்த பயணத்தில் யாருடன் நட்பு செய்தாலும் இறங்கும் வரை அந்த நட்பு இருக்கும் என்னும் தெரிந்து அதுவரை அறிமுகம் ஏற்படுத்திக் கொள்வோம். இது கம்யம் தெரிந்த பயணமானதினால் இந்த பயணத்தில் பந்தங்கள் அனு பந்தங்கள் எதுவும் வைத்துக் கொள்ள மாட்டோம்.

ஜீவித பயணத்தில் மரணம் **“கம்யம்”** எல்லோருக்கும் இருக்கிறது என்று தெரியும். மற்றும் அந்த கம்யம் எவ்வளவு தூரம் இருக்கிறது என்று தெரியாது. அது எப்போது வரும் என்று தெரியாது. 50 கிலோமீட்டர் வேகம் கொண்ட வாகனத்தில் பயணம் செய்தால், டில்லி போக வேண்டும் என்றால் 8 நாட்கள், அமெரிக்கா போக வேண்டும் என்றால் ஒரு மாதம் பயண காலம் என்னும் தெரிந்தாலும் சக பயணிகளுடன் ஒட்டும் ஒட்டாத நட்பு செய்வோம். அதனால் தேகம் என்னும் வாகன பயணம் **“இவ்வளவு காலம்”** என்னும் தெரியவில்லை என்றாலும் நம் கூட பயணம் செய்யுபவர்களிடம் முழுமையாக சம்பந்தம் ஏற்படுத்திக் கொள்வோம். நம்முடைய பயணம் ஒரு நாளோ, பாதி நாளோ தெரியாதபோது பந்தங்கள் ஏற்படுத்திக் கொள்வதில் அர்த்தம் இல்லை. டில்லி பயணம் தவறாமல் ஒரு வாரம் நாள் என்னும் தெரிந்தாலும் கூட பயணம் செய்பவர்களிடம் சம்பந்தம் வைத்துக் கொள்ள மாட்டோம். நம்முடைய தேகம் பயணம் காலம் வாரம் நாட்கள் என்று கூட நம்பிக்கை இல்லாத போது பந்தங்கள் ஏற்படுத்திக் கொள்வது ஞானம் முறை இல்லை என்று தெரிந்து கொள்ள வேண்டும். ஞானம்

பிரகாரம் யோசனை செய்தால் கூட பயணம் செய்கின்றவர்கள் தேகத்தில் வாழ்க்கை கடந்து கொண்டிருக்கும்போது யாருடைய கம்யம் அவர்களுடையது. எந்த கம்யத்திற்கு பயணமோ அதுவரையே நின்று போகும். **உன்னுடன் கண்டிப்பாக உன் கம்யம் வரை பயணம் செய்பவர் யாரும் இருக்க மாட்டார்கள். அந்த விஷயம் எல்லோரும் ஒப்புக் கொள்ள வேண்டியது தான்.** மேலும் இது சிறிது வரை வாஸ்தவம் தான் ஆனால் நமக்கு தெரியாத வாஸ்தவம் மற்றொன்று இருக்கின்றது. அது என்னவென்றால் சகஜமாக தெரிகின்ற உன்னுடன் உன் கூட இருக்கின்ற பயணிகள் உன் கம்யம் வரை வராமல் இருந்தாலும் உனக்கு தெரியாமல் உன்னுடன் பயணம் செய்பவர் மற்றும் "இருவர்" இருக்கின்றார்கள். அவர்களில் ஒருவர் பெயர் இருக்கின்றவர் மற்றொருவர் பெயர் இல்லாதவர். ஒருவர் பெயர் **"ஆத்மா"** இரண்டாவது அவருக்கு பெயர் இல்லை அதனால் "ஆத்மாவுக்கு" பரமாக (வேறாக) இருக்கின்றவர் என்ற அர்த்தத்துடன் **"பரமாத்மா"** என்னும், அவரையே "ஈஸ்வரன்" (அதிபதி) என்னும், "சிவன்" என்னும், கடவுள் என்று பலவிதமாக அழைக்கின்றோம்.

நீ "ஜீவாத்மா" என்று உனக்கு கூட தெரியும். மேலும் நீ தேகத்தில் பயணம் செய்கின்றாய் என்று மறந்தாய். மற்றும் உன்னுடன் எப்போதும் மற்ற "இருவர்" இருக்கிறார் என்று கூட தெரியாது. உன் தேகத்தில் "மூவர்" பயணிக்கிறார் என்ற விஷயம் யாருக்கும் தெரியாது.

அதன் போலவே அனைத்து ஜீவராசிகள் தேகத்திலும் மூன்று பேர் "பயணம்" நடக்கிறது. தேகத்தில் "ஆத்மா" "பரமாத்மாவுடன்" உனக்கு (ஜீவாத்மாவுக்கு) இருக்கின்ற "பந்தம்" என்ன? அவருடன் எவ்வளவு நட்பாக இருக்கிறோம் என்று யோசனை செய்தால் ஜீவாத்மா சிறிதளவு கூட அவருடன் சம்பந்தங்கள் வைத்துக் கொள்ளவில்லை. இப்போது இது படிக்கின்றவருக்கு உனக்கு இருக்கிறதா! என்றால் சிறிதளவு கூட இல்லை என்று சொல்லலாம். இருக்கின்றது எல்லாம் நம் முன்பு போகின்றவர் உடன், நம் பிறகு போகின்றவர்களுடன் பந்தங்கள் வைத்துக்கொண்டு, அவருடன் காலமெல்லாம் கடந்து கொண்டிருந்தால், உள்ளே ஆத்மா, பரமாத்மாவுடன் பந்தங்கள் ஏற்படுத்திக் கொள்ளும்

நேரமும் பொறுமையும் யாருக்கும் இல்லை. நீயும் யாரும் உள்ளே இருக்கின்றவர் பக்கம் பார்க்காமல் இருந்தாலும் அவருடைய பந்தம் எப்போதும் உன்னுடன் இருக்கின்றது. அவருடைய பந்தம் இல்லாமல் போனால் தேகத்தில் நாம் ஒரு நிமிஷம் கூட இருக்க முடியாது. தேகம் என்ற வாகனத்தில் ஜீவாத்மா, ஆத்மா, பரமாத்மாக்களுடன் பயணம் செய்து "கம்யம்" சேர்ந்த உடனே தேகத்தின் பந்தத்திலிருந்து ஜீவாத்மா இறங்கிப் போகும். அவர் ஒருவர் அல்ல அவருடன் ஆத்மா கூட இறங்கி போகும். **உன்னுடைய பயணம் ஆரம்பித்து உன்னுடன் கம்யத்தில் இறங்கிப் போகும் ஆத்மா ஒருவர் தான்.** இந்த விஷயம் பகவத்கீதாவில் "புருஷோத்தமபிராப்தியோகம்" என்னும் அத்தியாயத்தில் 8ஆவது சுலோகத்தில் சொல்லப்பட்டது.

**உன் கம்யத்தில் உன்னுடன் பயணிக்கும் ஆத்மா பரமாத்மா எனப்படும் இருவரில் ஒருவர் மட்டும் இறங்கி போகுவார். பரமாத்மா, ஆத்மாவை விட வேறாக இருக்கின்றதினால் பரமாத்மா அப்படியே தேகத்தில் இருப்பார்.**

சஜீவ யாத்திரையில் ஜீவன் சுக துக்கங்களை அனுபவித்துக் கொண்டிருப்பான். அந்த சுக துக்கங்கள் அனுபவங்களுக்கு தேவைப்படும் காரிய அனுசரணைகளுக்கு சைதன்யத்தை (சக்தியை) கொடுத்து தேகத்தை அசைவைக்கின்றவர் ஆத்மா. மூன்றாவதானவர் சாட்சியாக எல்லாவற்றையும் பார்த்து ஒன்றும் செய்யாமல் மௌனமாக இருப்பார். "ஜீவன்" தேகத்தில் இருக்கும் போது மற்றும் இல்லாதபோது எப்போதும் இருக்கின்றவர் மூன்றாவதானவர் **சிவன் அல்லது ஈஸ்வரன் அல்லது பரமாத்மா.** எதுவும் ஆகாத இந்த மூன்றாம் அவரை பரமாத்மா என்பதில் உள் அர்த்தத்துடன் தெரிந்து கொண்டோம் அல்லவா! அதன் போலவே ஈஸ்வரன் என்று எதற்கு சொல்கின்றோம் என்ற விவரத்தை தெரிந்து கொள்ளலாம்.

அதிபதி என்றால் மிஞ்சியவர், பெரியவர் என்னும் சிறந்தவர் என்று அர்த்தம் ஆகின்றது. அதன் போலவே லட்சாதிபதி என்றால் லட்சத்திற்கு அதிபதி என்னும், லட்சத்திற்கு மிஞ்சியவர் என்னும், லட்சங்கள் கொண்டவர் என்று அர்த்தமாகும். இந்த விதமாக லட்சாதீஈஸ்வரன்,

கோடீஸ்வரன் என்பதில் கோடிக்கு, லட்சத்திற்கு அதிபதி என்னும் அவற்றை விட பெரியவர் என்று தெரிகின்றது. இந்த உலகத்தில் லட்சம், கோடி அது, இது என்னும் சொல்லாமல் எல்லாவற்றுக்கும் அனைத்திற்கும் அதிபதியானவர் **“பரமாத்மா”** ஒருவர் தான். அதனால் பலானதற்கு ஈஸ்வரன் என்னும் சொல்லாமல் மொத்தம் மீது ஒரே சொல்லாக ஈஸ்வரன் என்று சொல்ல நடந்தது. எங்கும் அடையாளிக்க முடியாததை, அனைத்திலும் இருக்கின்றதனை, எதற்கும் தெரியாததனை, உயிரோடு இருக்கின்றவனுக்கு ஞானிகளுக்கு, யோகிகளுக்கு, கூட தெரியாதது, அகமிய கோச்சரமானது, அதனால் அதனை **“சிவம்”** என்று பெயர் வைத்தோம். சிவம் என்றால் தெரியாதது என்று அர்த்தம். ஞானிகளுக்கு யோகிகளுக்கு “சிவம்” இருக்கிறது என்று தெரியும். அது என்னவென்று என்று சிறிதளவு கூட தெரியாது. ஜீவன் ஞான யோகத்தினால் தேகத்தில் இருக்கின்ற ஆத்மாவை தெரிந்து கொள்ளலாம், மேலும் “சிவம்” மட்டும் தெரிந்து கொள்ள முடியாது. கர்மம் முடிந்தபின் ஜென்மம் இல்லாத நிலைக்கு சேரும் யோகிகள் “சிவத்தில்” ஐக்கியமாகி போகுவார்கள். அது ஏதோ அப்போதே தெரியும் மேலும் முதலில் தெரியாது.

தேகத்தில் ஜீவ யாத்திரையில் “மரணம் என்னும் கம்யதில் ஆத்மா, ஜீவாத்மாக்கள் தேகத்திலிருந்து வெளியேறிய போது இறுதிக்கு தேகத்தில் மீதி இருக்கின்றது சிவம்” வாழ்ந்து கொண்டு இருக்கும் போது நீச்சமான குணங்களில் சம்பந்தம் இருக்கின்ற “ஜீவன்” தேகத்தில் இல்லை. ஜீவன் ஆத்மா இல்லாத தேகத்தில் எந்த நீச்சமான எண்ணங்கள் இல்லை. அப்போது அது சுத்தமான “சிவ” நிலையம். பரமாத்மா தவிர மற்றவர் யாரும் இல்லை. அதனால் அந்த விஷயத்தை உணர்ந்த ஞானிகள் ஒரு மனிதன் மரணித்த பிறகு அந்த தேகத்திற்கு இறுதி சடங்குகளுக்கு முன்பு முழுமையாக பக்தியுடன் பூஜை செய்வார்கள். இறந்த உடலுக்கு தெய்வ சம்பந்தமான விபூதி நாமத்துடன் அலங்கரித்து, கோவிந்தா நாமம் பெயரை சொல்லி பூஜை செய்து, எல்லோரையும் கும்பிடுங்கள் என்று சொல்வார்கள். அப்படிப்பட்ட சம்பிரதாயம் இப்போதும் இருக்கும்போது அது அர்த்தம் தெரியாத நடைமுறையானது. இப்போது கும்பிடுகின்றவர்கள் பக்தியுடன் மட்டுமல்லாமல் பயத்துடன் கும்பிடுகின்றார்கள். ஒரு நேரம் கும்பிடாத போது

இறந்து போனவர்கள் மறுபடியும் பேய்யாக வருவார்கள் என்னும் அவனுடைய பீடை வீட்டை சுற்றி இருக்கும் என்னும், கும்பிட்டால் அவனுடைய பீடை அத்துடன் போகும் என்று கும்பிடுகின்றார்கள்.

பூர்வம் அப்படி செய்யவில்லை. அவர்கள் ஒவ்வொரு வேலைகளை அர்த்தம் தெரிந்து செய்வார்கள். ஜீவன் போன பிறகு தேகத்தில் இறுதியாக மீதி இருப்பது “சிவம்” என்று அவர்களுக்கு தெரியும். அதனால் இறந்து போன தேகத்தை (முருத்த தேகம்) “சிவம்” என்று அழைப்பார்கள். காலம் கடந்து கொண்டிருக்கும் போது அதிலிருந்த எண்ணம் போனது. இறுதிக்கு “சிவம்” “சவமாக” (பிணமாக) மாறிப்போனது. சிவம் சவமானபோது பூர்வத்தில் இருந்த பூஜை முதலியன நடைமுறைகள் அப்படியே இருக்கின்றது. அதனால் அதனுடைய உண்மையான அர்த்தம் இன்று தெரியாமல் போனது என்று தெரிகின்றது.

கர்மம் முடிந்து போன யோகிகள் மறு ஜென்மத்திற்கு போகாமல் மூன்றாவது புருஷரான பரமாத்மாவில் ஐக்கியமாகி போகுவார்கள். அப்படிப்பட்டவர் மரணிக்கும் நேரத்தில் அவர்களுடைய தேகத்தை விட்டு போக மாட்டார்கள். தேகத்திலேயே இருக்கின்ற சிவத்தில் ஐக்கியமாகி போவார்கள். அப்படிப்பட்டவர்கள் தேகத்தை இறுதி நாளில் பூஜை செய்வது மட்டுமல்லாமல் சமாதியில் வைத்து எப்போதும் பூஜைகள் செய்வது பெரியோர்கள் நிர்ணயம். அப்படி செய்வதினால் சாக்ஷாத் பரமாத்மாவை ஆராதனை செய்வது போல் பலன் இருக்கின்றது என்று அவர்களுக்கு தெரியும்.

சவம் விஷயம் நாம் சிறிது தெரிந்து கொண்டோம். அது சவம் அல்ல, சிவம் என்று உண்மை தெரிந்தது. மேலும் சவத்தை சுப காரியமாக நினைக்க வேண்டும். எல்லோர் போல பீடை, பிசாசு என்று நினைக்க கூடாது. எந்த பூஜையில் கலந்து கொள்ளாமல் போனாலும் பரவாயில்லை. சவத்தை “சிவமாக” பாருங்கள். இறுதி சடங்குகள் செய்ய முடியாதவர்களுக்கு உதவி செய்யுங்கள். முஸ்லிம் மதத்தில் ஒன்றும் தெரியாதவர்களாக இருந்தாலும் சவத்தை பார்த்தவுடனே வேலைகளை எல்லாம் விட்டு போய்

போட்டியாக சிவ பெட்டியை தூக்குவதை பார்த்து இருப்பீர்கள். அதன் போலவே கிறிஸ்துவ மதத்தில் மதத்துக்கு சேர்ந்த குரு பைபிள் படித்து பக்தியாக இறுதி சடங்கு செய்வதை பார்த்து கொண்டு இருப்போம். எல்லாவற்றை விட முதல் பிறந்த (இந்து) ஹிந்து மதத்தில் பெயருக்கு மட்டும் முறையாக வீட்டில் இருக்கின்ற அவர்களே இஷ்டம் இல்லாமல் போனாலும் இறந்த தேகத்திற்கு ஸ்நானம் செய்ய வைத்து பொட்டு வைத்து அனுப்புகின்றார்கள். அர்த்தம் தெரியாத முறையில் பூஜை செய்து "சிவத்தை" சவம் என்னும் சொல்லிக் கொண்டிருக்கும் அனைவரும் சவத்தை சிவமாக பார்த்து உண்மையான பக்தியுடன் இறந்து போனவனுக்கு அல்ல அவனில் இருக்கின்ற கடவுளுக்கு என்ற எண்ணத்துடன் இறுதி சடங்குகள் செய்ய வேண்டும். இறந்து போனவர் யோகியாக இருந்தால் அப்படிப்பட்ட தேகம் கிடைப்பது அதிர்ஷ்டம் என்று நினைத்துக் கொண்டு தனித்துவமாக ஓர் இடத்திலே சமாதி செய்து எப்போதும் பூஜை செய்வது மிக நன்றானது. அப்படிப்பட்ட தேகம் இருக்கின்ற சமாதி தெய்வ சக்தி நிலையமாக இருக்கும். அந்த சமாதியை பூஜை செய்கின்றவர்களுக்கு அவர்களுடைய கர்மம் எரிந்து போகும்.

## இறக்கும் களம்

சவத்தை சிவமாக நினைத்து பூஜை செய்து கோவிந்த நாமத்தை சொல்லிக்கொண்டு சுடுகாட்டுக்கு எடுத்துக் கொண்டு போகுவது பூர்வம் நடந்தது என்று தெரிந்து கொண்டோம். எப்போதும் நம் முன் இருந்த நபர் திடீரென்று இறந்து போனதனால், அந்த நபரை ஒரு தடவையாக சவகமாக பார்த்ததினால், அந்த தேகத்தைப் பார்த்து பலான நபர் என்று நினைத்துக் கொண்டிருப்பார்கள் மேலும் உயர்ந்த சிவமாக சிலர்களால் ஒப்பிடமாட்டார்கள். அப்படிப்பட்டவர் இறந்து போன நபர் மீது மோக குணங்களினால் என் மகன் சிலர்கள், என் தம்பி என்னும் சிலர்கள் என்னுடைய சொந்தக்காரர் என்று சிலர்கள் துக்கம் கொண்டிருப்பார்கள். மமகாரம் விடாத மனிதர்கள் அவர்களுடைய குணங்களினால் கடந்ததை நினைவு செய்து கொண்டு அழுது கொண்டே

இருப்பார்கள். மரணித்த தேகத்தை சம்பிரதாயம் பிரகாரம் சிவமாக நினைத்து அலங்கரித்து, பூஜை செய்து, நமஸ்கரித்து சவயாத்திரை செய்து கொண்டிருக்கும்போது சிலருக்கு போனவன் மீது மமகாரம் விட்டுப் போகாமல் மரணித்த தேகத்தை பெரிய எண்ணத்துடன் பார்க்காமல் இருக்கிறார்கள். சுடுகாடு வரை கொண்டு போகின்ற வழியில் ஓரிடத்தில் மரணித்த தேகத்தை கீழே வைத்து மறுபடியும் எடுத்துக்கொண்டு போகுவது நடக்கும். அப்படி ஓரிடத்தில் இறக்கிய இடத்தை **"இறக்கும் களம்"** என்று சொல்வார்கள். வீட்டு இடத்திலிருந்து இறக்கும் களம் வரை சவயாத்திரை ஒரு பாகமாக, பிறகு இறக்கும் களம் இருந்து சுடுகாடு வரை ஒரு பாகமாக நினைப்பார்கள். போன நபர் மீது மமகாரம் விடாத மனிதர்கள் இறக்கும் களம் வரை வருவார்கள். இறக்கும் களத்தில் சவத்தை இறக்கி முகத்தின் மீது மூடிய துணியை எடுத்து எல்லோரையும் பாருங்கள் என்று சொல்வார்கள். ஐந்து நிமிடம் பார்த்தவுடன் அப்படியே மூடிவைத்து மறுபடியும் எடுத்து செல்வார்கள். அழுகின்றவர்கள் இறக்கும் களம் வரை மட்டும் வருவார்கள். பிறகு பாகத்தில் அவர்கள் பங்கு பெறாமல் வீட்டுக்கு திரும்புவார்கள்.

சவத்தை பூர்த்தி சிவமாக நினைத்து, மமகாரத்தை விட்டு, மனதில் பூர்த்தி தெய்வமாக நினைத்தவர் மட்டுமே இறக்கும் களம் பிறகு சவயாத்திரையில் பங்கு பெறுவார்கள். சவத்தை நடுவில் இறக்கி மறுபடியும் எடுத்துக் கொள்ளும் அந்த இடத்தை **"இறக்கும் களம்"** என்னும் பெயர் வைப்பதில் பூர்வம் அர்த்தம் இருந்தது. பண்ணையில் விளைந்த பயிர் காய் வடிவத்தில் இருக்கும். அந்த வடிவத்தில் இருக்கின்ற பயிர் விதை வடிவத்தில் மாறுவது களத்திலேயே. கொட்டை காய்க்கு ஒட்டிக்கொண்டு இருக்கும் வரை காய் ஆதீனத்திலேயே இருக்கும். காய்யில் இருக்கின்ற பொறைகளுக்கு ஒட்டப்பட்ட கொட்டை பொறையிலிருந்து களத்தில் வேறு செய்யப்படுகின்றது. ஒரு தடவை வேறு செய்யப்பட்ட கொட்டை மறுபடியும் எப்போதும் காய் ஆதீனத்திற்கு போகாது. அதனுடைய பொறையில் சிக்கிக் கொள்ளாது. ஒரு கொட்டை தன்னுடன் இருக்கின்ற எத்தனையோ கொட்டைகள் காய்யில் சிக்கிக் கொண்டு இருக்கின்றது. களத்தில் கொட்டை கீழ் பொறை நசுங்கிய போது அந்த முறையில் இருந்து கொட்டை வெளியேறுகிறது.

அப்படி வெளிப்பட்ட கொட்டை மறுபடியும் காய்யில் சேர முடியாது என்பதை எல்லோருக்கும் தெரிந்த விஷயம் தான். அதன் போலவே காய் எனப்படும் கர்மம் பொறைகளில் ஜீவன் சிக்கிக் கொண்டு இருக்கிறான் என்னும் தெரிவிப்பதற்காக பூர்வம் பெரியோர்கள் கொட்டை காய்களை காட்டினார்கள். கர்மத்தில் இருந்து வந்த ஜீவன் மறுபடியும் கர்மத்தில் சிக்கிக் கொள்ளாமல் சுதந்திரமாகி போவான் என்று தெரிவிப்பதற்காக களத்தை உதாரணமாக காண்பித்தார்கள்.

பூர்வம் ஞானத்தினால் கர்மத்தை இல்லாமல் செய்து கொண்டவர் மரணித்தபோது, அவர் மோக்ஷம் அடைந்தார் என்னும் மறுபடியும் ஜென்மம் வராது என்னும் தெரிந்த பெரியோர்கள் சவயாத்திரையில் இறக்கும் களம் என்று பெயர் வைத்து ஓரிடத்தில் இறக்கி வைப்பார்கள். அப்படி இறக்கி வைத்த பிறகு எடுத்துக்கொண்டு போவதினால் இறந்து போன நபர் மறுபடியும் ஜென்மத்திற்கு வரமாட்டார் என்னும், அவர் **கர்மம் என்னும் காய்யில் இருந்து யோகம் என்னும் களத்தினால் பிரிந்து போனார் என்று எல்லோருக்கும் தெரிவிப்பார்கள்.** அதுவரை அவருக்காக யாராவது அழுது கொண்டிருக்கும் போது அந்த வேலையால் அவர் கடவுளாகிப் போனார் என்னும், அவர் மீது உலகத்திற்கு சம்பந்தப்பட்ட மமகாரம் இருக்கக் கூடாது என்று தெரிவிப்பார்கள். இறக்கும் களம் வரை யாராவது அழுதாலும் பரவாயில்லை இறக்கும் களம் பிறகு யாரும் அழகக்கூடாது. அப்போது வரை வேறு எண்ணம் இருந்தாலும் அப்போதிருந்து முழுமை எண்ணம் மாற்றம் அடைந்து சவத்தை முழுமையாக சிவமாக நினைத்துக் கொள்ள வேண்டும். அதனால் அழுகின்றவர்கள் அங்கு இருந்து பின் திரும்பி வருவார்கள். பிறகு சிவம் என்னும் எண்ணம் கொண்டு இருக்கின்றவர்கள் மட்டும் சுடுகாடு வரை போய் மரணம் அடைந்த தேகத்தை பூமியில் புதைத்து வைப்பார்கள்.

இறக்கும் களம் என்ற பெயர் வைத்த இடம் தனித்துவமாக இருக்காது. நடுவில் எங்கேயாவது ஓரிடத்தில் இறக்கி வைத்து அதனுடைய அர்த்தம் வேறு அவர்களுக்கு தெரிவித்து மறுபடியும் எடுத்துக் கொண்டு செல்வார்கள். இந்த முறை மோக்ஷம் அடைந்த ஒரு யோகிகளுக்கு மட்டும் செய்கின்ற சம்பிரதாயம். அப்படி செய்வதினால் யோகிகள் உடைய மதிப்பு, மோக்ஷத்தின் முறை வேறவர்களுக்கு

தெரியப்படும். இறக்கும் களம் சம்பிரதாயம் யோகிகளுக்கு தவிர வேறவர்களுக்கு செய்யக்கூடாது. வேறவர்கள் கர்மத்தில் இருக்கின்றதினால் களத்திற்கு வராத காய்களுக்கு சமமானது. இந்த காலத்தில் இறக்கும் களம் சம்பிரதாயம் சில பகுதிகளில் இருக்கின்றது. இறக்கும் களம் என்னும் பெயர் வைத்து யோகிகள் ஆகாத சாமான்யமான மனிதர்களுக்கு கூட இறக்கி வைத்து எடுத்துக்கொண்டு போகின்றார்கள். அப்படி செய்வதில் இறக்கும் களத்தின் நோக்கம் கெட்டுப் போனதாக அர்த்தம் இல்லாமல் போனது. சில பகுதிகளில் யோகிகளுக்கு கூட இறக்கும் களம் இல்லை. இது எல்லாவற்றுக்கும் காரணம் சம்பிரதாயங்களில் உள்ள இறக்கும் களத்தின் சம்பிரதாயம் தெரியாமல் போனது என்று தெரிகின்றது. இப்போது தெரிந்து கொண்டோம் அல்லவா! இப்போது இருந்தாவது சம்பிரதாயத்தை சரியாக அனுசரித்து இறந்து போனது மோக்ஷம் அடைந்த யோகியாக இருந்தால் நடுவில் இறக்குவது, யோகிகள் அல்லாமல் போனால் இறக்காமல் கொண்டு போக வேண்டும்.

## பிண்டா கூடு (கர்ம காரியம்)

பிண்டா கூடு என்ற வார்த்தை அனைவரும் கேட்டிருப்பீர்கள். பிண்டா கூடு பற்றி நமக்கு தெரிந்தது என்னவென்றால்! ஒரு மனிதன் இறந்து போனால் கர்ம காரியம் என்ற பெயரில் இறந்து போனவன் பசியை தீர்ப்பதற்கு வைக்கும் ஆகாரம் பிண்டம் என்று சொல்வார்கள். ஒவ்வொரு பகுதிகளிலும் ஒவ்வொரு ரகமாக இந்த கர்ம காரியகள் பிராமணர்களினால் செய்ய வைப்பார்கள். சிலர்கள் மனிதன் இறந்து போன மூன்று நாட்களுக்கு, 11 நாட்களுக்கு, வருடத்திற்கு பிண்டம் வைப்பது செய்வார்கள். சிலர்கள் மாதத்திற்கு ஒரு தடவை மாத தேதி என்ற பெயரில் பிண்டம் வைப்பதும் நடக்கின்றது. மற்ற சில பேர்கள் வருடத்திற்கு ஒரு தடவை புண்ணிய சேத்திரத்தில் தர்ப்பணம் என்னும், திவசம் என்னும் ரக ரகமான பெயர்களில் இந்த காரியங்கள் செய்து கொண்டிருப்பார்கள். இந்த விஷயம் பற்றி சிலர்களை கேட்கும் போது அவர் சொல்லும் பதில் என்னவென்றால்! இறந்து போனவனை எமதூதர்கள் அழைத்துச் செல்லும்போது,

அதற்கு வருடம் காலம் அவரை நடந்து அழைத்து சென்றதினால் அந்த ஜீவன் பசியில் கஷ்டப்படுகிறான் என்னும், மாதத்திற்கு ஒரு தடவை கூட வைப்பதினால் ஜீவனுடைய பசி தீரும் என்று சொல்கின்றார்கள். இறந்து போன ஜீவன் ஒரு வருடத்திற்கு எமலோகத்தில் சேருவார் என்னும், அந்த நாள் இறந்த வருடம் நாளில் பிண்டம் வைப்பதினால் அவனுடைய பசி தீர்ந்து எமலோகத்திற்கு போகுவார் என்று சிலர் சொல்கின்றார்கள். எமலோகத்திற்கு போகும் வழியில் எமதூதர்களால் அழைத்து போகின்றவன் நாம் வைக்கின்ற பிண்டம் கூடுவை எப்படி தின்பார் என்று கேள்வி கேட்டால் இறந்து போனவன் காகம் உருவத்தில் வந்து தின்று போவான். இதை கேட்கின்றாய் அது கூட தெரியாதா! நீ உங்கள் அப்பாவுக்கு, உங்கள் தாத்தாவுக்கு பிண்டம் வைக்கவில்லையா? காகங்கள் தின்று போவது பார்க்கவில்லையா? என்று பேசுகிறார்கள்.

குண்டூர் புகையிலை மாடத்தில் இருந்தால் ஒன்றுதான் வாயில் இருந்தாலும் ஒன்றுதான் என்பது போல சிலர்கள் எந்த விஷயத்தையும் தெரிந்து கொள்ளாமல் தெரிந்து கொள்வதற்கு முயற்சி கூட செய்யாமல் எங்கிருந்தாலும் எப்படி இருந்தாலும் சுவையற்ற ருசி இல்லாத புகையிலைப் போல் இருப்பார்கள். குடிவாடா புகையிலை மாடத்தில் இருந்தாலும் நெடி தான் வாயில் இருந்தாலும் நெடி தான் என்பது போல சிலர்கள் ஒவ்வொன்றை தெரிந்து கொள்ள வேண்டும் என்று நெடி போன்று சுறுசுறுப்பாக இருப்பார்கள். அப்படிப்பட்டவர் மனதில் எத்தனையோ கேள்விகள் எழும்பும். ஒவ்வொன்றை தெரிந்து கொள்ள வேண்டும் என்று அவர்களுக்கு ஆசை இருக்கும். அவர்களுடைய கேள்வி இப்படிதான் இருக்கும். 1)பிண்டம் என்றால் அர்த்தம் என்ன? 2)பிண்டம் என்று சொல்லாமல் சோறு என்று சொல்லலாம் அல்லவா! 3)இறந்து போனவர் பிண்டம் தின்பார்களா? 4)அழைத்து செல்பவர் எம தூதர்கள் பிண்டம் தின்பதற்கு நம் போலீஸ்கள் போல ஏதாவது லஞ்சம் வாங்கிக் கொண்டு அவனை விட்டு விடுவார்களா? 5)இறந்தவன் அவர்களுடைய மகன்கள் வைக்கின்ற பிண்டத்திற்காக காகம் அவதாரத்தில் எதற்கு வருவார்கள்? 6)அப்படி காகம் அவதாரம் எடுத்து வந்து தின்று போவான் என்பதற்காக நான் எப்போதும் பார்க்கின்ற நொண்டி காகம் சுடுகாட்டில் எத்தனையோ பேர் பிண்டங்களை தின்றது, இந்த நொண்டி காகத்தை யாராக

சொல்லலாம்? 7)ஒவ்வொரு நாளும் எத்தனையோ லட்சக்கணக்கான மனிதர்கள் சில கோடிக்கணக்கான ஜீவராசிகள் இறந்து போகின்றது. அவரை அழைத்து செல்வதற்கு ஒரு ஜீவனுக்கு இருவர் எம தூதர் என்ற பிரகாரம் எம தூதர்கள் எத்தனை கோடி பேர்கள் இருப்பார்கள்? 8)அழைத்து செல்பவர்கள் எத்தனையோ கோடி பேர்கள் இருந்தால் எமலோகத்தில் பாவத்தை அனுபவிக்கும் படி செய்கின்றவர்கள் இனி எத்தனை கோடி பேர்கள் இருக்கலாம்? 9)அங்கு இருந்த எமதூதர்கள் இங்கு இருந்து போனவர்கள் எல்லோரும் சேர்த்து எத்தனை கோடி பேர்கள் ஆகுவார்கள்? 10)எமலோகம் எல்லாம் விசாலமாக இருக்கிறதா? 11)எமதூதர்கள் ஜீவனை அழைத்து செல்லும்போது வழியில் ஜீவனுக்கு பசியாகும் என்று சொல்லினார்களா? 12)ஜீவனுக்கு பசியானால் எம தூதர்களுக்கு பசி ஆகாதா? 13)எம தூர்கள் பசியானால் சாப்பிடுவதற்கு ஏதாவது கொண்டு வந்து இருப்பார்களா? 14)இல்லையெனில் அவர்களும் கூட கீழ் வந்து ஏதாவது சாப்பிட்டு போவார்களா? 15)பிண்டம் வைக்கின்றவர்கள் இறந்து போனவர் குடிகாரனாக இருந்தால் அவனுக்காக சாராயம், பிராந்தி வைத்து வருவது நாம் பார்த்திருப்போம். பித்துருக்கள் காகமாக வந்தால் அங்கு வைத்த சாராயத்தை எதற்கு குடிக்கவில்லை? 16)நம் பெரியோர்கள் பிண்டம் தின்பதற்கு காகம் உருவத்தில் வந்தால் அவர் மீது அன்பு இருந்தால் நாம் எப்படியாவது அந்த காகத்தை பிடித்துக் கொண்டு எங்களுடைய அப்பா தான் அல்லவா! என்று அன்புடன் அந்த நாள் நன்றாக சாப்பிட வைக்கலாம் அல்லவா! அப்படி பிடித்து வைத்துக் கொண்டு நம்மிடத்திலேயே வைத்துக் கொண்டால் அவனுக்கு எமலோகத்திற்கு போகும் கஷ்டம், அங்கு பாவம் அனுபவிக்க வேண்டிய கஷ்டங்கள் அனைத்தும் தவிர்ந்து போகும் அல்லவா! யாரும் அதன் போல எதற்கு செய்யாமல் இருக்கின்றார்கள்? 17)வாழ்ந்து கொண்டிருக்கும் போது சாப்பாடு போடாத மகன் மரணித்த பிறகு பிண்டம் வைக்காமல் போனால் என்ன? 18)தந்தை உயிரோடு இருக்கும்போது அவர் மீது இல்லாத அன்பு சடங்கு நாள் அன்று எதற்கு வருகின்றது? 19)பூர்வம் ஞானம் தெரிந்த பெரியோர்கள் இந்த சம்பிரதாயங்கள் வைத்தார்களா? வைத்திருந்தால் எந்த நோக்கத்தில் வைத்தார்கள்? 20)பிண்டம் எதற்கு வைக்க வேண்டும்? 21)எத்தனை நாளுக்கு

வைக்க வேண்டும்? 22)இந்த காரியத்தில் உண்மை சாராம்சம் விஷயம் ஏதாவது இருக்கிறதா? 23)இது வாஸ்தவத்திற்கு இந்து சம்பிரதாயமா? இதன் போன்ற இந்த விதமாக பலவிதமான கேள்விகள் சுறுசுறுப்பாக இருக்கின்ற புத்தி உள்ளவர்களில் வந்து கொண்டிருக்கும். உண்மையாக இப்படிப்பட்ட கேள்விகளுக்கு பதில் இருக்கின்றதா? என்று நாம் யோசனை செய்ய வேண்டியது இருக்கும். யோசனை செய்தால் என்ன பதில் கிடைக்கிறது என்று பார்க்கலாம்.

பிண்டம் என்றால் தேகம் என்று சொல்லலாம். எதற்கு என்றால் தாய் கர்ப்பத்தில் இருக்கின்றதை பிண்டம் என்று சொல்கின்றோம். தாய் கர்ப்பத்தில் பிண்டம் குறுக்கே திரும்பியது என்ற வார்த்தை கூட கேட்டிருப்போம். தாய் கர்ப்பத்தில் இருந்து பிரசவித்த தேகத்தில் ஆத்மா சைதன்யம் இருந்து வளர்ந்து பெரியதாகி பலவிதமான கர்மங்களை அனுசரிப்பது, புதியதாக பலவிதமான கர்மங்களை சம்பாதித்துக் கொள்வது இந்த இரண்டும் நடக்கின்றது. இந்த விதமாக நடந்து கொண்டிருக்கின்ற வேலையில் எவ்வளவு கர்மம் வந்தது என்னும் தெரியாமல் போனதினால் தற்போது வேலையில் அனுபவிக்கின்றது மட்டும் தெரிகின்றது. அனுபவிக்கும் போது சிலர்கள் இது என்னுடைய கர்மம் என்று தெரியாமலே சொல்லிக் கொண்டிருப்பார்கள். முற்பிறவியில் செய்த கர்மங்களை அனுபவிக்கின்றதற்காகவே நாம் பிறந்திருக்கிறோம். நொடி நொடியும் அனுபவிக்கின்றது எல்லாம் கர்மம் தான். இருக்கின்ற கர்மத்தை இல்லாமல் செய்து கொள்ளுவது அல்லது அனுபவிப்பது கர்மம் அனுபவம் என்று சொல்கின்றோம். ஆகார தின்பண்டங்களை சாப்பிட்டு இல்லாமல் செய்தது போல கர்மங்களை அனுபவித்து இல்லாமல் செய்கின்றோம். தின்கின்ற சாப்பாடு தூய்மையான தெலுங்கு பாஷையில் **“கூடு”** என்று சொல்கிறோம். தின்பதை “குடுச்சுட்டா” என்று சொல்கிறோம். கூடு குடுச்சுட்டா என்றால் சாப்பாடு சாப்பிடுவது என்று அர்த்தம். சாப்பாடு தின்று முடிந்தது போல கர்மத்தை கூட அனுபவித்து முடித்து விடுவோம். மற்றும் ஜீவன் எப்போதும் கர்மங்களை குடுச்சுன்னாடு (தின்கின்றான்) என்று பூர்வம் சொல்லிக் கொண்டிருந்தார்கள். நாம் தின்று முடிந்ததை சோறுடன் ஒப்பிட்டு கர்மங்களை கூட சொல்வார்கள். கர்மங்கள் எல்லாவற்றையும் சஜீவமாக இருக்கின்ற தேகமே அனுபவிக்க வேண்டியது இருப்பதினால் தேகத்தை பிண்டம்

என்னும், அனுபவிக்கின்ற கர்மத்தை கூடு என்னும், ஒரு மனிதனுடைய கர்மத்தை பிண்டா கூடு என்று சொல்வார்கள். தேகத்தால் அனுபவிக்கின்ற கர்மங்களை தெரிந்த பெரியோர்கள் பிண்டா கூடு என்று சொல்வார்கள். இந்த காலத்தில் கூட சந்தர்ப்பத்தைப் பொறுத்து உன்னுடைய பிண்டா கூடு என்று சொல்வது நடக்கின்றது. எப்போதும் ஒவ்வொரு ஜீவிகள் அனுபவிக்கின்ற கர்மத்தை பிண்டா கூடு என்று சொல்லப்பட்டது. இப்போதும் எப்போதாவது அது உன்னுடைய கர்மம் சொல்வதற்கு பதிலாக உன்னுடைய பிண்டா கூடு என்று சுயமாக நாங்களே சொல்கின்றோம். சிலருக்கு தெரியாமலேயே சொல்லிக் கொண்டு இருப்பார்கள்.

ஒரு நபர் மரணித்த பிறகு வெளி அர்த்தமாக பிண்டா கூடு வைப்பது பூர்வத்தில் இருந்து நடக்கின்ற சம்பிரதாயமே. மேலும் இறந்து போன நபர்கள் எல்லோருக்கும் பிண்டா கூடு வைப்பவர் அல்ல. பகவத்கீதாவில் சொல்லியது போல் இறந்து போனவன் தன்னுடைய வாழ்க்கையில் யோகியாக இருந்து மோக்ஷத்திற்கு அருகதை இருந்தால், பகவத்கீதாவில் சொல்லியது போல் அவனுடைய மரணம் பகல், சுக்ல பக்ஷம், உத்தராயணம் சூரியரசமி (ஒளி) இருக்கும்போது நடந்தால், அப்போது மரணித்த யோகி மறுபடியும் பிறக்க மாட்டார் என்னும், அவர் மோக்ஷம் அடைந்து கடவுளில் ஐக்கியமானார் என்று நினைப்பார்கள். அப்படிப்பட்டவருக்கு கர்மம் இல்லை என்னும் அவர் பிறக்க மாட்டார் என்னும் தெரிவிப்பதற்காக கர்ம காரியம் என்ற பெயரில் பிண்டா கூடு வைப்பது நடந்தது. சஜிவமாக இருக்கின்ற ஒவ்வொரு ஜீவிக்கு நவக்கிரகங்களினால் கர்மம் நடைமுறைக்கு வருகின்றது. மோக்ஷம் அடைந்தவனுக்கு நவக்கிரகங்களினால் சம்பந்தமில்லாமல் போகும். வாழ்ந்திருக்கும்போது கர்மத்தை கொடுக்கின்ற நவக்கிரகங்கள் மோக்ஷம் அடைந்தவனுக்கு கர்மம் இல்லாமல் போவதினால் கிரகங்கள் அவனை ஒன்றும் செய்யாது, ஜென்மத்திற்கு கொண்டு வராது. அதனால் கர்மத்திலிருந்து விடுவிக்கப்பட்டவன் என்னும் தெரிவிப்பதற்காக மோக்ஷம் அடைந்தவனுக்கு ஒன்பதாவது நாள் கர்ம காரியங்கள் செய்வார்கள்.

மோக்ஷம் அடைந்தவனுக்கு கர்மம் இல்லை என்று தெரிவிப்பதற்காக இறந்து போன நாளிலிருந்து சரியாக

ஒன்பதாவது நாட்களில் கர்மத்திற்கு சமமான சோறு உருண்டை என்றால் பிண்டா கூடு என்ற பெயர் வைத்த சோற்றை வெளிப்புற பகுதியில் வைத்து, விலங்குகள், பறவைகள் தின்றும் படி வைத்து, வைக்கப்பட்ட பிண்டா கூடுவை இல்லாமல் செய்வார்கள். அப்படி செய்வதில் பிண்டா கூடு எனப்படும் கர்மம் இனி இல்லை என்னும் வெளி அர்த்தத்திற்காக தெரியப்படுத்துவதற்கு பிண்டா கூடுவை இல்லாமல் செய்வார்கள். மோக்ஷம் அடைந்தவனுக்கு வைக்கப்பட்ட சோற்றை வேற எந்த ஜீவராசிகளும் திங்கலாம். ஒரு காகங்கள் மட்டும் சாப்பிட வேண்டும் என்று சொல்லுவது தவறு. பூர்வம் பெரியோர்கள் வைக்கப்பட்ட நடைமுறைகள் எல்லாம் வழி தவறி அதர்மங்கள் ஆனது போல் இந்த விஷயங்கள் கூட காலப்போக்கில் தெரியாமல் வேறு எண்ணத்திற்கு போனது. இறந்து போன பெரியோர்கள் காகங்கள் உருவத்தில் வந்து ஆகாரம் தின்று போவார் என்ற வார்த்தை வெறும் கட்டுக்கதை தவிர அதில் உண்மை இல்லை. இறந்து போனவன் மறுபடியும் காகம் போல் வருவது அசம்பவம், அசத்தியம். இந்த விஷயத்தைக் கூட வேமண்ணா யோகி கூட எதிர்ப்பு தெரிவித்து இப்படி கூறினார்.

***பிண்டங்களை செய்து பித்துருக்களுக்கு என்று காகங்களுக்கு வைக்கின்ற கழுதைகளா மலம் தின்கின்ற காகம் பித்துருக்கள் எப்படி ஆனது விஸ்வதாபி ராமா கேளடா வேமா.***

இந்த காலத்தில் இறந்து போன பெரியோர்களை காகங்களாக ஒப்பிட்டுவது, அந்த காகங்களுக்கு பிண்டா கூடுகளை வைப்பதை பார்த்து, அப்படிப்பட்டவர்களை கழுதைகளாக திட்டி மலங்களை தின்கின்ற காகம் பித்துருக்கள் எப்படி ஆகுவார் என்று கேள்வி கேட்டார். இந்த நடைமுறை தவறு என்று வேமன்ன யோகி கூட தன்னுடைய தத்துவத்தில் கூறினார். கர்மத்தை குறிக்கின்ற கூடு இல்லாமல் செய்வது முறைகளே அல்லாத காகங்களே திங்கவேண்டும் என்பது நடைமுறை அல்ல. அங்கு வைத்த ஆகாரம் பறவைகள் திங்கலாம், விலங்குகளும் திங்கலாம். இந்த நடைமுறை வெளிப்பகுதியில் வைக்கின்றவர்களுக்கு, நதி ஓரத்தில் கர்ம காரியங்கள் செய்கின்றவர்கள் நதியில் கலந்து விடுவார்கள். அப்போது நதியில் இருக்கின்ற நீரில் வாழும் ஜீவராசிகள் அந்த சோற்றை திங்கும். பிண்டம்

என்றால் தேகம் என்று சொல்லினோம் அல்லவா இறந்தவர் மேக்ஷம் அடைந்து இருப்பார். அப்படிப்பட்டவனுக்கு தேகம் தேவை இல்லை என்னும் பிண்டா கூடு என்ற பெயர் வைத்து செய்வது நல்லது தான். மேலும் இறந்து போனவர் மோக்ஷத்திற்கு போகாமல் இருந்தால், அவன் அஞ்ஞானியாக இருந்தாலும் அவனுக்கு கர்ம காரியம் செய்வது விசித்திரம் அல்லவா! நவகிரகங்கள் தலையீடு இவர் மீது இருக்காது என்னும் ஒன்பதாவது நாட்களில் கர்ம காரியத்தை பூர்வம் செய்து, இன்று ஒரு முறை இல்லாமல் பதினோராவது நாள் சிலர்கள், பத்தாவது நாள் சிலர்கள், ஐந்தாவது நாள் சிலர்கள், மூன்றாவது நாள் சிலர்கள், எல்லாவற்றை விட முக்கிய வருடம் நாள் என்று சிலர் செய்வது விசித்திரமல்லவா! தேகம் அனுபவிக்கின்ற கர்மத்தை பிண்டா கூடு என்ற பெயர் வைத்து வெளியே அர்த்தமாக பூர்வம் செய்யும்போது இந்த நாள் பிண்டா கூடு சாராயம், பிராந்தி, பீடி, சிகரெட் வைப்பது விசித்திரமல்லவா! மறுபடியும் ஜென்மம் அடையாத நிலைக்கு சேர்ந்தார் என்னும் மோக்ஷம் அடைந்தவருக்கு செய்த விதானத்தை மறந்து எமலோகத்திற்கு எமதூதர்கள் அழைத்துப் போவார் என்னும் சொல்வது அஞ்ஞானம் அல்லவா! வெளிப்பகுதிகளில் வேறு விலங்குகள், பறவைகள் பிண்டா கூடுவை தின்பது, தண்ணீரில் ஜல ஜீவராசிகள் தின்பது நடப்பது அங்கு வைத்தது இல்லாமல் போகின்றது. தேகத்திற்கு இருக்கின்ற கர்மம் போனது என்னும் பிண்டா கூடு வைப்பது என்றால் எவன் பெயரில் வைத்தோமோ அவனே மறுபடியும் வந்து தின்பான் என்பது சரியானது அல்லவே அல்ல.

தேகத்தை பிண்டம் என்னும், தேகம் அனுபவிக்கின்ற கர்மத்தை பிண்டா கூடு என்னும், கர்மம் துளி கூட இல்லாமல் முடிவது பிண்டா கூடு இல்லாமல் போவதென்னும், நவகிரகம் ஆதீனம் இனி இல்லை என்னும் தெரிவிப்பது இறந்து போன நாளிலிருந்து ஒன்பது நாட்களில் காரியம் செய்வது என்ற அர்த்தத்தில் பூர்வம் செய்வார்கள். **செய்ய வேண்டியது மோக்ஷமடைந்தவனுக்கு மட்டும்தான், செய்கின்றவர் ஞானம் தெரிந்த யாராவது இருக்கலாம் என்னும் பெரியோர்கள் தெரிவித்து இருக்கும்போது மகன்களே இந்த சடங்கு செய்ய வேண்டும் என்னும், மகன்களினால் வம்சத்திற்கு சேர்ந்தவர்களுடன் செய்ய வைப்பது அஞ்ஞானமே ஆகும்.** போனவன் மோக்ஷத்திற்கு போனார்

என்னும் தெரிவிப்பதற்கு சிறிதளவு ஞானம் தெரிந்தவர்கள் இந்த விதானம் இது தான் என்று செய்து வேறவர்களுக்கு தெரிவித்துக்கொண்டு போனால் இந்த சம்பிரதாயம் எல்லோருக்கும் தெரிந்திருக்கும். இந்த காலத்தில் பிண்டா கூடு காரியம் செய்யவேண்டியது என்பது இருக்கின்றது, மேலும் எதற்கு செய்ய வேண்டும்? எப்படி செய்ய வேண்டும் என்னும் விவரம் முழுமை இல்லாமல் போனது. இப்போதாவது வாழ்க்கையில் ஞானம், யோகம் தெரிந்து மோக்ஷம் அடைய வேண்டும் என்பவர் நோக்கத்துடன் இறந்து போனால், **பகவத்கீதாவில்** சொல்லியது போல் கால சூத்திரம் அவர்களுக்கு பொருத்தமானால், அப்படிப்பட்டவர்களுக்கு சிறிது ஞானம் தெரிந்தவர்களிடம், பிராமணர்களும், யோகிகளாக இருக்கின்றவர்களிடம் இந்த விதானத்தை செய்ய வைக்க வேண்டும். அவர் இப்படிப்பட்ட மோக்ஷம் நிலைக்கு சேர்ந்தார் என்று வெளியில் தெரிவிக்க வேண்டும். அது மட்டுமல்லாமல் சாதாரணமாக இருக்கின்ற அஞ்ஞானிகள் எல்லோருக்கும் காரியம் செய்வது, பிண்டா கூடு வைப்பது செய்யக்கூடாது. செய்யாமல் போனால் இவனுடைய பீடை எங்களுக்கு ஒட்டிக் கொள்ளும் என்று தவறாமல் செய்து இந்த பீடை இத்துடன் போக வேண்டும் என்று குளித்து வருவது சம்பிரதாய எதிர்ப்பாகும். பூர்வம் பெரியோர்கள் இந்த காரியத்தை இந்த காரியங்களை புனிதமாக அனுசரிக்க வேண்டும் என்று கூறினார்கள், மேலும் புனித மற்றதாக பீடை பிசாசு என்று செய்யக்கூடாது. இவ்வளவு சொல்லினாலும் சிலருக்கு சந்தேகம் விடாமல் தொடர்ந்து வருகிறது உண்மைதானா? இப்போது இருக்கின்ற இத்தனை பேருக்கு, எத்தனையோ பேர் சுவாமிகளுக்கு இந்த விஷயம் தெரியாமல் இருக்குமா! அப்படி நினைத்துக் கொண்டால் நாங்கள் எதுவும் சொல்ல முடியாது.

இந்து சம்பிரதாயங்களில் மனிதன் தன்னுடைய தேகத்திற்கு வைத்துக் கொண்ட சில முறைகளில் சிலதை தெரிந்து கொள்ள வேண்டியது இருக்கும். அப்படிப்பட்டதில் எத்தனையோ நடைமுறைகள் அர்த்தங்களை எங்கள் ரசனையில் **“தேவாலய ரகசியங்கள்”** புத்தகத்தில் இருக்கின்றது.

ஜிக்னாசிகள் (ஆர்வமுள்ளவர்கள்) தேவாலய ரகசியங்களை படித்து தெரிந்து கொள்ள வேண்டியதாக வேண்டிக் கொள்கிறோம்.

## தெற்கு திசையில் தலை வைப்பது

பகவத்கீதாவில் யோகிகள் ஆனவர்கள் எப்போது மரணித்தால் மோக்ஷம் அடைவார்களோ, எப்போது மரணித்தால் ஜென்மத்திற்கு போவார்களோ தெரிவித்தார். யோகிகள் ஆகாதவர்கள் சர்வ சாதாரணமாக எப்போது மரணித்தால் ஜென்மத்திற்கே போவார்கள். யோகிகள் ஆனவர்கள் மட்டும் மோக்ஷம் அடைவதற்கு வாய்ப்பு இருக்கின்றது, மேலும் அவர்களில் யார் மோக்ஷம் அடைந்தார்களோ தெரிந்து கொள்வதற்கு காலத்தின் நிலைகள் கீதாவில் கூறினார். அதன் பிரகாரம் மோக்ஷம் அடைந்த வரை சுலபமாக அடையாளிக்கலாம். அப்படியே மோக்ஷம் அடைந்த வரை பூர்வம் **"காலமாகி போனார்"** என்று சொல்வார்கள். காலமாகி போனார் என்றால் பரமாத்மாவில் இணைந்து போனார், ஜென்மத்திற்கு போகவில்லை என்று அர்த்தம். பரமாத்மா கால சொரூபன். கீதாவில் **"காலோஷ்மி"** காலமே நான் தான் என்று கூறினார். அதனால் முக்தி அடைந்தவனை காலமாகி போனான் என்பது சரியான வார்த்தை. மோக்ஷம் அடைந்தவனை மரணித்தார் என்னும் இறந்து போனான் என்று சொல்லக்கூடாது. சர்வ சாதாரணமான அவர்களுக்கு, மற்றும் மோக்ஷம் அடையாத யோகிகளுக்கு இறந்து போனார் என்ற வார்த்தை பொருந்தும். முக்தி (மோக்ஷம்) அடைந்தவருக்கு, அடையாதவருக்கு இருக்கின்ற வித்தியாசங்கள் எல்லோரும் அடையாளிக்கும்படி இறந்துபோன போது, கர்ம காண்டம் செய்யும்போது, சுடுகாட்டில் புதைத்து வைக்கும் போது வித்தியாசத்தை தெரிவித்தார்கள்.

**இறந்து போனார் என்னும் மோக்ஷம் அடையாத வரை பற்றி சொல்லினால், காலமாகி போனார் என்னும் முக்தி (மோக்ஷம்) அடைந்தவனை பற்றி சொல்வார்கள். அதன் போலவே முக்தி அடையாதவனுக்கு பிண்டா கூடு வைக்கின்ற**

**காரியங்கள் செய்ய மாட்டார்கள். மோக்ஷம் அடைந்தவனுக்கு மட்டும் பிண்டா கூடு வைப்பார்கள்.** கர்மத்திலிருந்து விடுபட்டு முக்தி அடைந்தவனுக்கு மட்டுமே சவயாத்திரையில் இறக்கும் களம் இருந்தது. இறந்து போனவனுக்கு இறக்கும் களம் வைக்க மாட்டார்கள். அதன் போலவே உயிரற்ற தேகத்தை பூமியில் புதைத்து வைக்கும் போது கூட சாதாரணமாக இறந்து போனவரை குழியில் தெற்கு திசையில் தலை வைத்து படுக்க வைத்தால் காலமாகி முக்தி அடைந்த வரை வடக்கு திசைக்கு தலை வைத்து புதைப்பார்கள். இந்த விதமாக இறந்து போனவர்களில் எல்லா முறைகளிலும் வித்தியாசங்கள் தெரிவித்து மோக்ஷத்திற்கு அடையாளம் மதிப்பை வைத்தார்கள். பூர்வம் பெரியோர்கள் எவ்வளவோ சிறந்த அர்த்தத்துடன் தர்மயுத்தமாக வைத்த வேலைகள் கூட முழுமையாக அர்த்தமில்லாமல் போய் அதர்மங்கள் நடைமுறை தயாரானது. பூர்வம் சம்பிரதாயம் பிரகாரம் வைத்த நடைமுறை எல்லாம் சிலது இன்று இருக்கும்போது எதற்கு செய்ய வேண்டும்? யாருக்கு செய்ய வேண்டும் என்று தெரியாமல் போனது. இப்போது வரை மனிதன் மரணித்த பிறகு சவயாத்திரைக்கு, இறக்கும் களத்திற்கு இந்து சம்பிரதாயம் பிரகாரம் அர்த்தம் சொல்லிக் கொண்டோம். இப்போது உயிரற்ற தேகம் கணனம் (புதைப்பது) பற்றி தெரிந்து கொள்ளலாம்.

பூமி மேல் சூரிய உதயம் கிழக்கு திசையில் உதிக்கின்றது. கிழக்கு திசையில் இருந்து ஆரம்பித்து பார்த்தால் கிழக்கிற்கு முழுமையாக எதிர்ப்பு திசையில் மேற்கு திசை என்று சொல்கின்றோம். அதன் போலவே கிழக்கு திசையை பார்த்த போது பின் இருக்கின்ற மேற்கு திசை வலது பக்கம் இருக்கின்ற தெற்கு திசை என்னும், இடது பக்கம் வடக்கு திசை என்று சொல்கின்றோம். கிழக்குக்கு தெற்கு திசை மத்தியில் இருக்கின்ற மூலத்தை ஆக்னேய திசை என்னும், தெற்கு திசைக்கு மேற்கு திசைக்கு மத்தியில் இருக்கின்ற மூலத்தை நய்ருதி திசை என்னும், மேற்குக்கு வடக்கிற்கு மத்தியில் இருக்கின்ற திசைக்கு வாயு திசை என்னும், வடக்கிற்கு கிழக்கிற்கு மத்தியில் இருக்கின்ற மூலையை ஈசான்யம் திசை என்று சொல்கின்றோம். மொத்தம் எட்டு திசைகளில் தெற்கு வடக்கு இரண்டு திசைகளில் மனிதன் இறந்து போன பிறகு பார்க்க வேண்டியது முக்கியமான திசைகள். மனிதன் வாழ்ந்து

கொண்டிருக்கும் போது முக்கியமாக கவனிக்க வேண்டிய விஷயங்கள் கிழக்கு மேற்கு. எப்போதும் உதிக்கின்ற சூரியன், அஸ்தமிக்கின்ற சூரியனை பார்த்து மனிதனுடைய பிறப்பு உதிக்கின்ற சூரியனுக்கு சமமாக, அதன் போலவே மனிதனுடைய இறப்பை அஸ்தமிக்கும் சூரியனுக்கு சமமாக ஒப்பிட்டு சொல்லிக் கொள்வார்கள். எப்போதும் நடக்கின்ற சூரிய உதயம் சூரிய அஸ்தமனம் ஜெனனத்திற்கு மரணத்திற்கு குறிக்கும் போது அந்த திசையான கிழக்கு மனிதன் பிறப்புக்கு, மேற்கு மரணத்திற்கு அடையாளமாக இருக்கின்றது. அதன் போலவே வடக்கு திசை மனிதன் மோக்ஷத்திற்கு, தெற்கு திசை மனிதன் ஜென்மத்திற்கு அடையாளமாக இருக்கின்றது.

தெற்கு திசையில் எம புரி இருக்கிறது என்னும், தெற்கு திசையில் எமதர்மராஜா இருக்கிறார் என்று ஆங்காங்கே புராணங்களில் கூட சொல்லிக் கொண்டார்கள். வாஸ்தவமாக தெற்கு திசையில் எமபுரி, எமதர்மராஜா இல்லை. மேலும் தெற்கு திசையில் எமதர்மராஜா இருக்கிறார் என்று சொல்லுவதில் சிறிது அர்த்தம் இருக்கிறது. **“தண்டனை அதிகாரிளில் எமன் நான்தான்”** என்று கீதாவில் பகவான் கூறினார். பரமாத்மா ஆத்மா உருவத்தில் தேகத்தில் நிவாசிக்கின்றார் என்று முதலிலேயே தெரிந்து கொண்டோம். ஆத்மா தேகத்தில் எமனாக, வேற ஒரு தேகத்திலிருந்து எமனிகர்களாக தெரிகிறது என்று கூட எங்கள் ரசனையில் **“பிரபோதா”** கிரந்தத்தில் தெரிவித்தோம். இதனை பொறுத்து **தேகத்தில் நிவாசிக்கின்ற இரண்டாவது ஆத்மாவே எமதர்மராஜா என்று தெரிந்து கொள்ள வேண்டும்.** இங்கு எல்லோருக்கும் தெரியாத மற்றொரு விஷயம் கூட இருக்கின்றது. அது என்னவென்றால்! தேகமெல்லாம் வியாபித்திருந்த ஆத்மா பிரம்ம நாடியில் ஏழாவது மையத்தில் தலையில் அமைந்து இருக்கின்றது. ஆத்மா தலையில் அமைந்திருக்கின்ற தன்னுடைய சக்தியை தேகமெல்லாம் வியாபிக்க செய்கின்றது. தலை மத்தியில் இருக்கின்ற ஆத்மா முழுமையாக மத்தியில் இல்லாமல் சிறிது வலது பக்கம் அதிகமாக இருப்பதினால் தேக பலத்திலும் கூட வலது பக்கம் சிறிது வித்தியாசம் ஏற்படுகிறது. வலது இடது பலன்கள் (சக்தியில்) வித்தியாசம் எல்லோருக்கும் தெரிந்த விஷயம் தான். ஆத்மா சாதாரணமாக எல்லோருக்கும் வலது

பக்கம் சிறிது அதிகமாக இருப்பதினால் ஆத்மாவுக்கு “தக்ஷணன்” என்னும், எமன் என்று பெயர் இருக்கின்றது. வலது பக்கம் அதிகமாக நிவாசம் இருப்பதினால் எமபுரி தெற்கில் இருக்கிறது என்று பூர்வம் சொல்லிக் கொண்டிருப்பார்கள். தக்ஷணம் என்றால் தேகம் வெளியில் என்று நினைக்க கூடாது. தேகம் உள்ளவே தெற்கு திசையில் “வலது” பக்கம் என்று நினைத்துக் கொள்ள வேண்டும்.

கர்மம் மீதம்மாகி மறு ஜென்மம் கொண்டவர்கள் எல்லோருக்கும் ஆத்மாவுக்கு சம்பந்தம் இருக்கும். ஜீவன் தேகம் இருக்கும் வரை ஆத்மா துணையாக இருந்து செய்கின்ற கர்மங்களை கர்ம கணக்கில் ஏற்றுக் கொள்வது, மறுபடியும் அவற்றை காலத்திற்கு அனுகூலமாக அனுபவிக்கும் படி ஆத்மா செய்கின்றது. தேகத்தில் எமனாக கர்மத்தை அனுபவிக்கும்படி செய்வதிலும், கர்மத்தை பதிவு (ரெக்கார்டு) செய்து வைப்பதில் சித்திரகுப்தனாக வேலை செய்கின்றது. இந்த நடப்பு எல்லாம் தேகம் இருக்கின்றவர்களுக்கு மட்டும் நடக்கும். மேலும் மரணித்தவன் மறுபடியும் ஜென்மத்திற்கு போகுவான் என்னும் தெரிந்து கொண்டபோது, இவன் மோக்ஷம் அடையவில்லை, இவன் ஆத்மாவுடன் இணைந்து ஜென்மம் எடுத்துக் கொண்டிருக்கின்றான் என்னும் தெரியும்படி தெற்கு திசைக்கு தலை வைத்து புதைப்பார்கள். ஆத்மா பக்கம் போகின்றவனை தெற்கு திசையில், பரமாத்மா பக்கம் போகின்றவனை வடக்கு திசையில் தலை வைத்து புதைப்பார்கள். கீதாவில் கூறிய காலம் பிரகாரம் யோகிகள் மரணமடைந்தபோது, அவர் மோக்ஷத்திற்கு அருகதை பெற்று இருந்தால், அப்படிப்பட்டவரை தெற்கு திசையில் தலை வைத்து புதைக்கமாட்டார்கள். மோக்ஷம் அடைந்த யோகிகள் தேகத்தை வடக்கு திசையாக தலை வைத்து புதைப்பது நடந்தது. இந்த காலத்தில் எல்லோரையும் தெற்கு திசை பக்கம் புதைப்பது நடக்கிறது. பூர்வம் எவ்வளவோ பெரிய அர்த்தத்தில் நிர்மித்த தேகத்தை புதைக்கின்ற சம்பிரதாயம் தெரியாமல் போய் நடைமுறை மட்டும் வழி தவறாக இருக்கின்றது. ஜென்மத்திற்கு போகின்ற வரை தெற்கு திசையில், மோக்ஷத்திற்கு போனவர்களை வடக்கு திசையில் தலை வைத்து புதைப்பதில் இருக்கின்ற ஞானத்தை நாம்

தெரிந்து கொண்டால் எவ்வளவோ நல்லது. வேறவர்களுக்கு தெரிவித்தால் ஞான சேவை செய்கின்றவர்களாக ஆகுவோம்.

**ஒரு விஷயம் ஒப்புக் கொள்வதற்கு**
**சாஸ்திரம் எவ்வளவு தேவையோ,**
**அப்படியே ஒரு விஷயம் கண்டிப்பதற்கு**
**சாஸ்திரம் அவ்வளவு தேவை.**

**அசத்தியத்தை ஆயிரம் பேர் சொல்லினாலும்**
**அது சத்தியமாகாது,**
**சத்தியத்தை ஆயிரம் பேர் அல்லவென்றாலும்**
**அது அசத்தியம் ஆகாது.**

# ஹிந்து ரக்ஷனா! ஹிந்து பக்ஷனா!!

## பகவத்கீதாவை படிக்காதவன் ஹிந்து ரக்ஷஹனா?

### ஹிந்து தர்மமே தெரியாதவன் ஹிந்து ரக்ஷஹனா?

ஹிந்துக்கள் இன்று குலங்களாக பிரிக்கப்பட்டு, அதில் ஏற்றத்தாழ்வுள்ள குலங்களாக விவரிக்கபடுகின்றன என்று எல்லோருக்கும் தெரிந்த சத்தியம் தான். கடவுள் மனிதர்களை எல்லோரையும் சமமாக பிறக்க வைத்தால் சிலர் மனிதர்கள் அவர்களுடைய சுயநல புத்தியால் ஹிந்து (இந்து) சமூகத்தை துண்டு துண்டாக செய்து, பலவீனப்படுத்தி ஹிந்து சமூகம் அனைத்திற்கும் அவர்களே பெரியவர்கள் என்னும், அவர்கள் சொல்லியது போல் எல்லோரும் கேட்டு, எல்லா காரியங்கள் செய்து கொள்ள வேண்டும் என்று பிரச்சாரம் செய்து கொண்டார்கள். எத்தனையோ குலங்களாக இருக்கின்ற ஹிந்து சமூகத்தில் அவர்கள் குலமே உயர்வானது என்னும் சொல்லுவது மட்டுமல்லாமல், வேறு குலங்களில் இருப்பவர்களுக்கு அவர்களே மார்க்கத்தை காண்பிப்பவர் போன்று, குருக்கள் என்று அறிவிக்கப்பட்டார்கள். எதிர்காலத்தில் அவர்களுக்கு யாரும் தடங்கல் செய்யக்கூடாது என்னும், எல்லா குலங்களையும் தீண்டத்தகாதவர்களாக செய்து, ஹிந்து சமூகத்திற்கு தீராத அநியாயம் செய்தார்கள். அதுவரை நிறுத்தப்படாமல் இன்றும் கூட ஹிந்து சமூக ரட்சகர்களாக சொல்லிக்கொண்டு, ஹிந்து சமூகத்தை சர்வ நாசனம் செய்து, ஹிந்து சமூகம் வேறு மதமாக மாறிப் போவதற்கு முதல் காரணமானவர்கள் ஆனார்கள். அப்படிப்பட்டவர்கள் ஹிந்து சமூகத்திற்கு புழுவுகள் போன்று, மற்ற குலங்களில் இருப்பவர்கள் எல்லோரும் அவர்களுடைய உண்மையான சொரூபம் தெரியாமல் அவர்கள் சொல்லியது போல் கேட்பதால், ஹிந்து சமூகத்தை முழுமையாக அஞ்ஞான திசை பக்கம், அதர்மம் மார்க்கத்திற்கு அனுப்பி, மக்களுக்கு சிறிதளவு கூட தெய்வ ஞானம் தெரியாமல் செய்து, அவர்கள் சொல்லியதே தெய்வ போதனை என்று நம்ப வைத்தார்கள். அப்படிப்பட்ட நிலையில் இன்று த்ரைத்த சித்தாந்த கர்த்தாவான ஆச்சாரிய பிரபோதானந்த யோகீஸ்வரர் அஞ்ஞானம் பக்கம் நின்று போன ஹிந்து சமூகத்தை சரியான வழியில் இருப்பதற்கு,

**பகவத்கீதாவில் புருஷோத்தம பிராப்த்தி யோகம் என்னும் அத்தியாயத்தில் போதிக்கப்பட்ட ஷர, அக்ஷர, புருஷோத்தமர் என்னும் மூன்று புருஷர்கள் விஷயங்கள் த்ரைத்த சித்தாந்தம் என்ற பெயரில் முன்மொழியபட்டு தெய்வ ஞானம் எல்லோருக்கும் அர்த்தமாகும் படி கிரந்தம் வடிவத்தில் எழுதுவதும், போதிப்பதும் நடக்கின்றது.** அதனினால் இன்று மக்கள் உண்மையான ஞானம் தெரிகிறது என்று சந்தோசப்படுகிறார்கள். உயர் குலங்களாக இருப்பவர்கள் கூட எத்தனையோ பேர் அவர்களில் இருக்கின்ற அஞ்ஞானம் இருளை விட்டு, இதுவரை அவர்களுக்கு தெரியாத ஞானம் யோகீஸ்வரர்களினால் இப்போது தெரிகின்றது என்று சந்தோஷப்பட்டு சிஷ்யர்களாக சேர்ந்து போகின்றார்கள். ஆனால் உயர் குலத்தில் சிலர்கள் மட்டும் யோகீஸ்வரர் தெரிவிக்கும் ஞான விஷயங்களை பார்த்து இந்த ஞானத்தின் மூலம் மக்கள் ஞானம் தெரிந்து கொண்டால், ஞானம் தெரியாத அவர்களை கௌரவிக்க மாட்டார் என்னும் நினைத்து, அதனினால் சமூகம் மீது அவர்களுடைய ஆதி பத்தியம் இல்லாமல் போகும் என்று நினைத்து, யோகீஸ்வரர் தெரிவிக்கின்ற த்ரைத்த சித்தாந்தமும், த்ரைத்த சித்தாந்த பகவத்கீதாவும் ஹிந்துக்கள் ஞானம் அல்லவென்று, அது கிறிஸ்தவ மதத்திற்கு சம்பந்தப்பட்டது என்னும், அதை யாரும் படிக்கக் கூடாது என்று பிரச்சாரம் செய்ய ஆரம்பித்தார்கள். அது மட்டுமல்லாமல் நாங்கள் ஹிந்து தர்ம ரட்சகர்கள் என்னும், சிறிது அரசியல் வண்ணம் பூசிக்கொண்டு, எங்களுடைய ஞான பிரச்சாரத்திற்கு ஆங்காங்கே தடங்கல் செய்கின்றார்கள். அவர்கள் வார்த்தையை கேட்கும் வேறு குலங்களில் இருக்கின்றவர்களுக்கும் கூட பிபோதானந்த யோகீஸ்வரர் சொல்லும் ஞானம் ஹிந்து ஞானம் அல்ல, கிறிஸ்தவர்கள் ஞானம் என்னும் இந்துக்கள் போர்வையில் கிறிஸ்தவர்கள் மத பிரச்சாரம் செய்கின்றார்கள் என்னும் சொல்லுவது மட்டுமல்லாமல், அப்படிப்பட்டவர்களை ஊக்கப்படுத்தி எங்களுடைய பிரச்சாரத்திற்கு தடங்கல் செய்யும்படி செய்கின்றார்கள். யோகீஸ்வரர் நிறுவப்பட்ட **ஹிந்து (இந்து) ஞான மேடை** இப்படி நிறுத்தப்பட்டதை சிறிது காலமாக பொறுமையாக பார்ப்பது நடந்தது. எங்களில் உள்ள பொறுமையை இழந்து, எங்களை எல்லா மதங்கள் பிரச்சாரம் செய்கின்றவர்களாக வர்ணித்து சொல்லும் உயர் குலத்தை சேர்ந்தவர்களையும், அவர்களையே பின் தொடர்பவர்களையும்

நாங்கள் எதிர்த்து கேள்வி கேட்பதும் நடந்தது. நாங்கள் கேட்ட கேள்விக்கு ஒரு கேள்விக்கு கூட அவர்கள் சரியான பதில் சொல்லவில்லை. அந்த பதில் எப்படி இருக்கின்றதோ வாசகர்களாக பாருங்கள்.

**எங்களுடைய கேள்வி:-இதுவரை எந்த இந்துவும் செய்யாத விதம் ஊர் ஊரும் திரிந்து, ஊரில் வீடு வீட்டுக்கும் திரிந்து இந்து தர்மங்களை பிரச்சாரம் செய்கின்றோம் அல்லவா! அப்படிப்பட்ட எங்களை நீங்கள் எல்லா மதம் பிரச்சாரம் செய்கின்றீர்கள் என்று எதற்கு சொல்கின்றீர்கள்.**

**அவர்களுடைய பதில்:-**ஹிந்து மதத்தில் எத்தனையோ சுவாமிஜீகள் இருக்கின்றார்கள். அவர்கள் யாரும் வீடு வீடும் திரிந்து பிரச்சாரம் செய்யவில்லை. ஹிந்துக்கள் அதன் போன்ற பிரச்சாரங்கள் செய்ய மாட்டார்கள். கிறிஸ்தவர்களாக இருந்தால் தான் ஊர் ஊராக, வீடு வீட்டுக்கு திரிந்து பிரச்சாரம் செய்வார்கள். நீங்கள் ஹிந்துக்கள் போர்வையில் வீடு வீட்டுக்கு திரிந்து கிறிஸ்தவர்கள் பிரச்சாரம் செய்கின்றீர்கள்.

**எங்களுடைய கேள்வி:- நாங்கள் கிறிஸ்தவர்களாக இருந்தால் பகவத்கீதா எதுக்கு பிரச்சாரம் செய்கின்றோம்?**

**அவர்களுடைய பதில்:-** நீங்கள் பிரச்சாரம் செய்வது த்ரைத்த சித்தாந்த பகவத்கீதா. அது கிறிஸ்தவர்கள் உடையது. பைபிளுக்கே நீங்கள் அதன் போன்ற பெயர் வைத்தீர்கள்.

**எங்களுடைய கேள்வி:- கிறிஸ்தவர்கள் கிறிஸ்தவர்களாகவே அவர்களை சொல்லிக் கொள்வார்கள். அதன் போலவே பைபிள்ளை பைபிள் ஆகவே சொல்லிக் கொள்வார்கள். அவர்களுடைய பிரச்சாரம் கிறிஸ்தவம், பைபிள் ஆகும்போது அதே பெயர் மீது பிரச்சாரம் செய்வார்கள் தவிர இந்துவாக பகவத்கீதா பெயரில் எதற்கு பிரச்சாரம் செய்வார்கள். இதுவரை அதன் போன்று எங்கும் நடக்கவில்லை. எந்த மதத்தில் இருக்கின்றவர்களும் அந்த மதத்தின் பெயர் சொல்லிக் கொள்ளுவார்கள் மேலும் வேறு மதத்தின் பெயர் சொல்ல மாட்டார்கள். அவ்வளவு ஏன் நீங்கள் எங்களுடைய பகவத்கீதா திறந்து பார்த்தீர்களா? அதில் பகவத்கீதா**

**சுலோகங்கள் இருக்கிறதா? பைபிள் வாக்கியங்கள் இருக்கிறதா?**

**அவர்களுடைய பதில்:-**த்ரைத்த சித்தாந்தம் என்று இருக்கிறது அல்லவா! த்ரைத்தம் என்றால் த்ரித்துவம், த்ரினிடி என்று எங்களுக்கு நன்றாக தெரியும்.

**எங்களுடைய கேள்வி:-ஹிந்து தர்மங்களில் அத்வைத சித்தாந்தத்தை ஆதிசங்கராச்சாரியார் முன்மொழிந்தார். விசிட்ட துவைத்தத்தை ராமானுஜாச்சாரியார் முன்மொழிந்தார். துவைத்தத்தை மத்வாச்சாரியார் முன்மொழிந்தார். இப்போது ஆச்சார்ய பிரபோதானந்த யோகீஸ்வரர் த்ரைத்த சித்தாந்தத்தை முன்மொழிய செய்தார். சித்தாந்த கர்த்தர்கள், சித்தாந்தங்கள் வேறாக இருந்தாலும் எல்லோரும் ஹிந்துக்கள்தான் என்று நீங்கள் எதற்கு நினைத்துக் கொள்ளவில்லை?**

**அவர்களுடைய பதில்:-**உங்களுடைய த்ரைத்த சித்தாந்த பகவத்கீதாவில் எக்னங்கள் செய்யக்கூடாது என்று எழுதினீர்கள் அல்லவா! உண்மையாக பகவத்கீதாவில் அதன் போன்று இல்லை அல்லவா!

**எங்களுடைய கேள்வி:-நீங்கள் ஹிந்துக்களில் முக்கியமானவராக இருந்து அவ்வளவு முட்டாள்தனமாக பேசினால் எப்படி? உலகம் அனைத்திற்கும் ஒரே ஒரு பகவத்கீதா இருக்கும், உங்களுடைய, பகவத்கீதா எங்களுடைய பகவத்கீதா, வேறாக இருக்காது. பகவத்கீதாவின் விவரம் ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமாக அவர்களுக்கு அர்த்தமாகும் படி சொல்லலாம் மேலும், எல்லோருக்கும் மூல கிரந்தமான பகவத்கீதா ஒன்றுதான் என்று நினைவு வைத்துக் கொள்ளுங்கள். த்ரைத்த சித்தாந்த பகவத்கீதா எல்லாவற்றை விட சரியான எண்ணத்துடன் இருக்கிறது என்றும் படித்த ஞானங்கள் எல்லோரும் புகழ்ந்து கொண்டிருந்தால், உங்களுடைய குலத்திலே எத்தனையோ பேர் புகழ்ந்து கொண்டுயிருக்கும் போது, உங்களில் சிலருக்கு மட்டும் எதிர்பாக தெரிகிறது என்றால் பொறாமையால் தான் என்று எங்களுக்கு அர்த்தமாகின்றது. எக்னங்கள் செய்ய வேண்டாம் என்று நாங்கள் எங்கும் சொல்லவில்லை. எக்னங்களினால் புண்ணியம் வரும், சொர்க்கம் வரும் என்று**

**சொல்லினோம். எக்னங்களினால் மோக்ஷம் வராது, கடவுள் தெரியபட மாட்டார் என்று சொல்லினோம். அவ்வளவு ஏன் நீங்கள் நாங்கள் எல்லா குலங்களை விட தூய்மையான ஹிந்துக்கள் என்று சொல்லிக் கொண்டிருக்கிறீர்கள் அல்லவா! பகவத்கீதாவில் சொல்லிய ஒரு ஹிந்து தர்மத்தை பற்றி சொல்லுங்கள்.**

**அவர்களுடைய பதில்:-**அந்த வார்த்தைகள் வேண்டாம்... நீங்கள் ஹிந்துக்கள் அல்ல.

**எங்களுடைய கேள்வி:-பிடிவாதமாக பேசாதீர்கள் நீங்கள் உயர் குலத்தை சேர்ந்தவர்கள் என்று இஷ்டம் வந்தபடி பேசாதீர்கள். நாங்கள் ஹிந்துக்கள் அல்ல என்பதற்கு ஆதாரம் ஏதாவது காட்டுகிறீர்களா? எங்களுடைய கதை பக்கத்தில் வைத்து நீங்கள் சரியான ஹிந்துக்களானால் பகவத்கீதாவில் விஸ்வரூப சந்தர்சன யோகம் என்னும் அத்தியாயத்தில் 48ஆவது சுலோகத்தில் 53ஆவது சுலோகத்தில் பகவான் என்ன சொல்லினார்கரோ நீங்களே சொல்லுங்கள்.**

**அவர்களுடைய பதில்:-**நாங்கள் இதுவரை பகவத்கீதா படிக்கவில்லை. உங்களுக்கு வேண்டுமென்றால் சம்பூர்ணா நந்தா சுவாமியினால் சொல்ல வைப்போம்.

**எங்களுடைய கேள்வி:-குறைந்தபட்சம் பகவத்கீதாவும் கூட படிக்காத நீங்கள் யோகீஸ்வரர்களான பிரபோதானந்த சுவாமியை திட்டுவது நல்லதா? ஒரு இந்து தர்மத்தை கூட தெரியாத நீங்கள் ஹிந்து தர்ம ரக்ஷகர்கள் என்று சொல்லுவது நல்லதா? யோகீஸ்வரர் எழுதிய ஒரு கிரந்தம் கூட படிக்காமல் நான் தவிர பூஜ்ஜியர்களாக, குருக்களாக யாரும் இருக்கக் கூடாது என்று பொறாமையுடன் இப்படிப் பேசினால் கடவுள் பொறுத்துக் கொள்ள மாட்டார் என்று சொல்கின்றோம்.**

**அவர்களுடைய பதில்:-**ஹிந்து மதத்தில் எத்தனையோ பேர் கடவுள்கள் இருக்கிறார்கள். சிவனும் கடவுளே, சிவனுடைய மகன் விநாயகனும் கடவுளே, ராமனும் கடவுளே, ராமனுடைய சேவகன் ஆஞ்சநேயனும் கடவுளே. அப்படிப்பட்ட ஹிந்து

மதத்தில் கடவுள் ஒருவர்தான் என்று சொல்லுவது உங்களுடையது தவறு அல்லவா?

**எங்களுடைய வார்த்தை:-நாங்கள் மதத்தைப்பற்றி சொல்லவில்லை. ஹிந்து மதத்தில் எத்தனையோ கடவுள்கள் இருப்பது உண்மைதான், ஆனால் ஹிந்து ஞானத்தில், ஹிந்து தர்மம் பிரகாரம் விஸ்வம் அனைத்துக்கும் ஒருவரே கடவுள் என்று சொல்லினோம். பகவத்கீதாவில் கடவுள் சொல்லியதை சொல்லினோம் தவிர நாங்கள் தேவதைகளைப்பற்றி இல்லை என்று சொல்லவில்லையே! தேவதைகளுக்கு எல்லோருக்கும் அதிபதியான கடவுள் ஒருவர் இருக்கிறார், அவரே தேவா தேவன் என்னும், அவரை ஆராதிக்க வேண்டும் என்று சொல்லினோம்.**

**அவர்களுடைய பதில்:-**நீங்கள் ராமனுடைய பெயர் சொல்லினீர்கள், சிவனுடைய பெயர் சொல்லினீர்கள், விநாயகர் பெயர் சொல்லினீர்கள். யாருடைய பெயரும் சொல்லாமல் கடவுள் என்னும், சிருஷ்டி கர்த்தா என்று பல தடவை சொல்லினீர்கள். கடவுள் என்ற வார்த்தை, சிருஷ்டி கர்த்தா என்ற சொல் கிறிஸ்தவர்களே உபயோகப்படுத்துவார்கள். ஹிந்துக்கள் உபயோகப்படுத்த மாட்டார்கள். அதனால் உங்களை ஹிந்துக்கள் அல்ல என்று கிறிஸ்தவர்கள் என்று சொல்கின்றோம்.

**எங்களுடைய கேள்வி:-கிறிஸ்தவ மதம் பிறந்து 2000 வருடம் ஆனது. சிருஷ்டி பிறந்து எத்தனை கோடி வருடங்கள் ஆனதோ யாரும் சொல்ல முடியாது. சிருஷ்டி ஆதியிலிருந்து "சிருஷ்டி கர்த்தா" என்ற வார்த்தை "கடவுள்" என்ற வார்த்தை ஹிந்து சமூகம் பயன்பாட்டில் உள்ளது. முதலில் இருந்து ஹிந்து சமூகத்தில் இருக்கின்ற கடவுள், சிருஷ்டி கர்த்தா என்ற பெயரை ஹிந்துக்கள் கிறிஸ்தவர்களுக்கு லீசுக்கு கொடுத்தார்களா? அல்லது அவர்களுக்கு முழுமையாக விற்பனை செய்து விட்டீர்களா? என்று கேட்கின்றோம். சிருஷ்டி கர்த்தா என்றும், கடவுள் என்றும் இந்துக்களாக இருக்கின்றவர்கள் சொல்லக்கூடாது என்பது எங்கேயாவது இருக்கிறதா என்று கேட்கின்றோம்?**

**அவர்களுடைய பதில்:-**நீங்கள் ஹிந்து மதத்தை அல்லாமல் வேறு மதங்களை போதிக்கின்றீர்கள் என்பதற்கு, நீங்கள்

உங்களை ஹிந்துவாக சொல்லிக் கொள்ளவில்லை. ஹிந்துவாக அல்லாமல் இந்துவாக சொல்லிக் கொண்டிருக்கின்றீர்கள். அப்படிப்பட்டபோது நீங்கள் ஹிந்து மதத்தை பிரித்தது போல் ஆகும் அல்லவா! தனித்துவமாக இந்து மதம் என்பதை பிரச்சாரம் செய்தது போல் ஆகும் அல்லவா! நீங்கள் ஹிந்துவாக இருந்தால் உங்களுடைய கிரந்தத்தில், உங்களுடைய போதனையில் தனித்துவமாக இந்துக்கள் என்று எதற்கு நீங்கள் சொல்கின்றீர்கள்.

**எங்களுடைய வார்த்தை:-**நாங்கள் நேராக ஒரு கேள்வியைக் கேட்கின்றோம் பதிலை சொல்லுங்கள். ஹிந்து, இந்து என்ற வார்த்தையில் சிறிய சத்தம் தவிர என்ன வித்தியாசம் இருக்கின்றதோ நீங்களே கூறுங்கள். தெலுங்கு பாஷையில் எழுதுகின்றவர் அனைவரும் ஹிரண்யகசப்பனை கொன்றது நரசிம்ஹ சாமி என்று சொல்வார்கள். அதன் போலவே எழுதுவார்கள். தற்போது காலத்தில் நரசிம்ஹோளு என்ற பெயர் இருக்கின்றவன் கூட அவனுடைய பெயரை நரசிம்ஹோளு என்று எழுதுவது எல்லோருக்கும் தெரியும். ஆனால் அந்த வார்த்தை தவறு அதன் போன்ற எழுதக்கூடாது அதனை **நரசிம்ஹ** என்று எழுத வேண்டும் என்று சொல்கின்றோம். காட்டில் இருக்கின்ற முருஹ ராஜா **சிங்ஹம்** என்று சொல்கின்றோம் தவிர **சிம்ஹம்** என்று சொல்ல மாட்டோம் என்று கூட சொல்கின்றோம். “சிங்ஹம்” என்றால் அர்த்தம் இருக்கிறது மேலும், “சிம்ஹம்” என்றால் அர்த்தமில்லை என்று கூட சொல்லினோம். அப்படி இருக்கிறது போல் சொல்லினால் “இந்து” என்ற வார்த்தைக்கு அர்த்தம் இருக்கிறது “ஹிந்து” என்ற வார்த்தைக்கு அர்த்தம் இல்லை என்று சொல்லினோம். சிருஷ்டி ஆதியில் பிறந்தது இந்து சமூகம் என்னும், அது நடுவில் பெயர் மாறி “துருஷ்டி, ஜிஸ்ஷ்டி” ஆனது போல “இந்து” என்ற சப்தம் “ஹிந்து” என்று சொல்லப்படுகிறது என்று சொல்லினோம். இந்து என்ற சொல் எதற்கு உபயோகப்படுத்த வேண்டும், ஹிந்து என்ற சொல் எதற்கு உபயோகப்படுத்தக் கூடாது என்று விவரமாக எங்களுடைய கிரந்தத்தில் இருக்கின்றது. இருந்த சத்தியம் உங்களுக்கு தெரிந்தாலும், நீங்கள் எங்களை விட பெரியதாக யாரும் இருக்கக் கூடாது என்று பொறாமையால் பேசுகின்றீர்கள்.

உயர் குலத்தில் எத்தனையோ பெரியோர்கள் எங்களுடைய ஞானத்தை தெரிந்து சந்தோஷப்பட்டிருந்தாலும், சிலர் மட்டும் வீதியில் இருக்கின்ற ரவுடிகள் போல உதைக்கிறோம், குத்துவோம், எரிப்போம் நீங்கள் பிரச்சாரம் செய்ய வேண்டாம் என்று சொல்லுவது நல்லது அல்ல. எங்களுடைய கிரந்தம் எதுவும் படிக்காமல் பேசுவது, நாங்கள் சொல்லிய வார்த்தையை கேட்காமல் இதெல்லாம் டிராமாக்கள், நாடகங்கள் சொல்லுவது நல்லது அல்ல. நீங்கள் யாராவது எங்களுடைய கிரந்தத்தில் வேறு மதத்தை பிரச்சாரம் செய்தது போல, பலான மதத்தில் சேருங்கள் என்னும் சொல்லியது போல இருந்தால் நிரூபியுங்கள், அப்படி நிரூபித்தவர்களுக்கு **இந்து ஞான மேடை சார்பாக 10 லட்சம் ரூபாய் கொடுக்கின்றோம்.** நிரூபிக்காமல் போனால் நீங்கள் லட்ச ரூபாய் எந்த ஊரிலாவதும் கிருஷ்ணர் கோயிலுக்கு கொடுக்க வேண்டும். இந்த சபதத்திற்கு யாராவது முன்னுக்கு வருவீர்களா? என்று கேட்கின்றோம்.

**இப்படிக்கு**

**இந்து ஞான மேடை மற்றும்**

**பிரபோதா சேவ சமிதி**